# உதயன்

விலை ரூபா 20.00

www.uthayan.com

சுடர் 27 வள்ளுவர் ஆண்டு 2042 கார்த்திகை 29 வியாழக்கிழமை (15.12.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 019




மீள்பரிசீலனை செய்ய வேண்டும்



கேரளமும் தமிழனைச் சீண்டுவதா?



செய்யும்

# சர்வதேச போர்க் குற்றச்சாட்டுகளுக்கு அரசு பதில் சொல்லியே தீரவேண்டும்

## இலகுவில் தட்டிக் கழிக்க முடியாதென நாடாளுமன்றில் சம்பந்தன் வலியுறுத்து

கொழும்பு, டிசெம்பர் 15

தமிழீழ விடுதலைப் புலிகளை முற்றாக அழிப்பதற்கு இலங்கை அரசுக்கு மிகவும் பக்கபலமாக இருந்த இந்தியா மற்றும் ஐரோப்பிய நாடுகள்தான் இன்று மனித உரிமை மீறல் மற்றும் போர்க் குற்றம் தொடர்பாக இலங்கை அரசிடம் கேள்விகளை எழுப்பியுள்ளன. சர்வதேச சமூகத்தால் எழுப்பப்பட்ட இந்தக் கேள்விகளுக்குப் பதில் சொல்லவேண்டிய கட்டாயம் தற்போது ஏற்பட்டுள்ளது. இதனை இலகுவில் இலங்கை அரசு தட்டிக்கழித்துவிட முடியாது.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் நேற்று நாடாளுமன்றத்தில் வலியுறுத்தினார்.

வெளிவிவகார அமைச்சுக்கான குழுநிலை விவாதத்தின்

பக் 27



## சர்வதேச அழுத்தங்களுக்கு ஒருபோதும் அடிபணியோம்

### சம்பந்தனின் கருத்துக்கு பீரிஸ் பதிலடி

கொழும்பு, டிசெ.15

எத்தனை அழுத்தங்கள் மேற்கொள்ளப்பட்டாலும் நமது உள்நாட்டு விவகாரங்களில் அந்நியத் தலையீடுகளுக்கு இடமளிக்கமாட்டோம். எமது நிலைப்பாட்டில் நாம் உறுதியாக இருக்கின்றோம். நமது பிரச்சினையை சர்வதேசப் பொலிஸாரிடம் ஒப்படைக்கமுடியாது - என்று வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் நேற்று நாடாளுமன்றத்தில் சூளுரைத்தார்.

வெளிவிவகார அமைச்சு தொடர்பான விவாதத்திற்குப் பதிலளித்துப் பேசும்போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

எனது அமைச்சு நாட்டிற்கும் நாட்டுமக்களுக்கும் நன்மைகளைத் தேடித்தரும் கடப்பாட்டுடன் செயல்படுகின்றது.

தமிழ்த் தேசியக்

பக் 28

## போர்க்குற்றச்சாட்டை எதிர்கொள்ள இலங்கை அஞ்சாது என்கிறார் டியூ

கொழும்பு, டிசெ.15

2012 மார்ச் மாதம் இடம்பெறவுள்ள ஐ.நா. மனித உரிமை பேரவைக் கூட்டத்தொடரில் இலங்கைக்கு எதிரான போர்க்குற்றச்சாட்டுகளை எதிர்கொள்வதற்கு அரசு அஞ்சாது - என்று சிரேஷ்ட அமைச்சர் டி.யூ குணசேகர சபையில் நேற்றுத் தெரிவித்தார்.

வெளிவிகார அமைச்சு மீதான நிதி ஒதுக்கும் விவாதத்தில் கலந்துகொண்டு பேசியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். மேலும் அவர் தெரிவித்தவை வருமாறு -

இந்தப் பிரச்சினையில் லத்தீன் அமெரிக்கா, ஆசிய, ஆபிரிக்கா ஆகிய நாடுகள் எல்லாம் இலங்கையின் பக்கம் உள்ளன. எனவே, உலக விடயங்களில் தமது ஆதிக்கத்தை இழந்து வரும் ஒரு சில நாடுகளின் குற்றச்சாட்டுகளையிட்டு இலங்கை பயப்படப்போவதில்லை.

சர்வதேச சமூகம் எமக்கு எதிராகவுள்ளது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கூறுவது யதார்த்த

பக் 27

## ரெலிக்கொம் தொலைபேசி சேவை இன்று வழமைக்கு

யாழ்ப்பாணம், டிசெ.15

கடந்த சில தினங்களாகச் செயலிழந்துள்ள ஸ்ரீலங்கா ரெலிக்கொம் நிறுவனத்தின் குடாநாட்டுக்கான கேபிள் தொலைபேசி இணைப்புகள் இன்று வியாழக்கிழமை வழமைக்குத் திரும்பும் என ரெலிக்கொம் நிறுவன அதிகாரி ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

யாழ்.பண்ணைப் பகுதியில் அமைந்துள்ள ஸ்ரீலங்கா ரெலிக்கொம் நிறுவனத்தின் தொலைத் தொடர்புக் கோபுரம் மீது கடந்த ஞாயிறன்று இடியுடன் கூடிய மின்னல் தாக்கியது. இதனால் அந்தக் கோபுரத்தில் பொருத்தப்பட்டிருந்த இரண்டு 'டிஸ் அன்ரனாக்கள்' முற்றாகச் செயலிழந்ததுடன் பரிவர்த்தனை அலகு ஒன்றும் மின்னல் தாக்கத்துக்கு இலக்காகிப் பழுதடைந்தது.

இதனால் குடாநாட்டுக்கான கேபிள் தொலைபேசி இணைப்புகளில் சுமார் 12 ஆயிரத்துக்கும் மேற்பட்டவை கடந்த நான்கு நாள்களாகச் செயலிழந்துள்ளன.

செயலிழந்துள்ள தொலை

பக் 27

## காணி அதிகாரம் மட்டுமே நேற்றைய பேச்சில் ஆராய்வு

கொழும்பு, டிசெ.15

இனப்பிரச்சினைத் தீர்வுக்கான அரசு - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இடையிலான நேற்றைய பேச்சில் வடக்கு, கிழக்குப் பகுதிகளுக்கு காணி அதிகாரத்தைப் பெற்றுக் கொள்வது தொடர்பில் மாத்திரமே விரிவாகக் கலந்துரையாடப்பட்டது எனத் தமிழ்க் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

அரசு - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இடையிலான 17 ஆவது சுற்றுப் பேச்சு நேற்று மாலை நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில்

பக் 27

## போலி வினாத்தாள்கள் விற்பனை குழம்பித் தவிக்கும் மாணவர்கள்

யாழ்ப்பாணம், டிசெ.15

தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கும் ஜீ.சி.ஈ. (சா/த) பரீட்சைக்கான போலி வினாத்தாள்களை தென்மராட்சிப் பகுதியில் சில தனியார் கல்வி நிறுவன ஆசிரியர்கள் இரவு நேரங்களில் விற்பனை செய்து பெருந்தொகைப் பணத்தை மோசடி செய்துவருவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அடுத்தநாள் நடைபெறவுள்ள பாடத்தின் வினாத்தாள் தமக்கு இரகசியமான முறையில் கிடைத்துள்ளதாகக் கூறி ஒரு வினாத்தாளையும் அதற்குரிய விடைகளும் விற்பனை செய்யப்படுகின்றன ஆனால் உண்மையான வினாத்தாள் போலி வினாத்தாளில் இருந்து வேறுபட்டு இருப்பதால் மாணவர்கள் பலர் குழப்பமடைந்துள்ளனர். இவ்வாறான போலி வினாத்தாள் விற்பனையைத் தடுக்க உரியவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ங-207)

## தமிழர்களும் இலங்கையரே அந்த நோக்கிலேயே தீர்வு

### சபையில் ஐ.தே.க. வலியுறுத்து

கொழும்பு, டிசெ.15

பாதிக்கப்பட்டவர்கள் தமிழர்கள் என்று பார்க்காது, அவர்களும் இந்த நாட்டுப் பிரஜைகள், இலங்கையர்கள் என்ற நோக்குடனேயே உருப்படியான தீர்வு காணப்படவேண்டும் என வலியுறுத்துகின்றேன் - என்று ஆளும் தரப்பினருக்குப் பதிலடி கொடுத்தார் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற

பக் 26

## வடக்கு, கிழக்கில் இராணுவமயமாக்கல் விரைவில் முடிவுக்கு வந்தாக வேண்டும்

### ஐரோப்பிய எம்.பிக்கள் குழுத் தலைவர் வலியுறுத்து

கொழும்பு, டிசெ.15

வடக்கு, கிழக்கில் காலதாமதமின்றி இராணுவமயமற்ற ஆட்சிமுறை நடைமுறைக்கு வரவேண்டும் - என்று ஐரோப்பிய நாடாளுமன்ற இலங்கை நண்பர்கள் கழகத் தலைவர் ஜியோப்ரி தெரிவித்தார்.

மேலும், இலங்கையில் சுதந்திரமும், அபிவிருத்தியும் ஒருங்கே இழையோடுவதற்குப் புதிய அரசியல் தீர்வே தேவை. அது சட்டத்தைப் பேணும் இலங்கை மக்கள் அனைவரின் நலன்களுக்கும் மதிப்புக்கும் உரியதாக அமையவேண்டும்.

பக் 23

## நவநீதம்பிள்ளை இலங்கைக்கு வந்தவுடன் தேநீர் வழங்குங்கள்; உபதேசம் பெறாதீர்கள்

### தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் ஆலோசனை

கொழும்பு, டிசெ.15

''நவநீதம்பிள்ளை அம்மையார் இலங்கை வந்ததும் அவருக்கு நமது நாட்டுத் தேயிலையில் மிகவும் சுவையாகத் தேநீர் தயாரித்து வழங்கவேண்டுமே தவிர, அவர் போதிக்கும் உபதேசங்களைப் பெறுக்கொள்ளக்கூடாது.''

- இவ்வாறு அரசுக்கு ஆலோசனை வழங்கியுள்ளது தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம்.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் தலைவர் நவநீதம்பிள்ளை எதிர்வரும் பெப்ரவரி மாதம் முதல் வாரத்தில் இலங்கை வரவுள்ளார்.

நவநீதம்பிள்ளையின் இலங்கை விஜயம் குறித்து

பக் 27

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம் : 021-2229933
தொலைநகல்
செய்தி : 021-5678844
விளம்பரம் : 021-5679731
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com




அனைத்து மாவட்டங்களிலும் இடி மின்னல் ஏற்படக்கூடிய சாத்தியம் உள்ளது.

# முகமாலை, இத்தாவில் கிராமங்களில் எம்மை மீளக் குடியமர அனுமதியுங்கள்

## மீள்குடியேற்ற அமைச்சருக்கு அப்பகுதி மக்கள் மகஜர்

கிளிநொச்சி, டிசெ.15

முகமாலை, இத்தாவில், வேம்பொடுகேணி ஆகிய கிராமங்களில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் தம்மைத் தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்துமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

தமது கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றையும் அவர்கள் மீள்குடியேற்ற அமைச்சர் குணரத்ன வீரக்கோனுக்குவுக்கு அனுப்பி வைத்துள்ளனர். இந்த மகஜரின் பிரதிகள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், மீள்குடியேற்ற பிரதி அமைச்சர், வடமாகாண ஆளுநர், அரச அதிபர் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

அந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:

பளை, பச்சிலைப்பள்ளி உதவி அரசாங்க அதிபர் பிரிவின் முகமாலை, இத்தாவில், வேம்பொடுகேணி அதனை அண்மித்த பகுதியைச் சேர்ந்த மக்களாகிய நாம் அனைவரும் கடந்த 10 வருடங்களுக்கு முன்னர் போர் காரணமாக வன்னிக்கும் ஏனைய மாவட்டங்களுக்கும் இடம்பெயர்ந்தோம்.

யுத்தம் முடிவடைந்து இரண்டு வருடம் பூர்த்தியாகியுள்ள போதும் நாம் சொந்த இடம் திரும்ப முடியாது பெரும் பொருளாதார, வாழ்விட நெருக்கடிகளுடன் உறவினர், நண்பர்களின் வீடுகளில் தற்காலிகமாக வாழ்ந்து வருகின்றோம்.

போர் முடிவுற்ற நிலையில் எமது நாடு அபிவிருத்திப் பாதையில் முன்னோக்கிச் செல்கிறது. இந்தநிலையில் நாம் தற்போதும் அகதி வாழ்வே வாழ்கின்றோம். எம் அனைவருக்கும் எமது ஊர்களில் சொந்தக் காணிகள், வீடுகள் என்பன இருந்தன. அவை யாவும் போரின் கோரத்தால் முற்றுமுழுதாக அழிக்கப்பட்ட நிலையில் காணப்படுகின்றன.

எமது மாவட்டத்தில் அனேக கிராமங்களில் துரிதகதியில் அபிவிருத்திப் பணிகள் நடைபெற்று வருகின்றன. ஆனாலும் எமது கிராமங்கள் சிதைவடைந்த நிலையில் போரின் வடுக்களைச் சுமந்தபடி இப்போதும் சூனியப் பகுதியாகக் காணப்படுகின்றன. இந்தநிலையில் இருந்து எமது கிராமங்களை விடுவித்து அபிவிருத்தி செய்து இலங்கைத் தீவின் ஓர் வளம்மிக்க கிராமங்களாக மாற்றி அமைக்க நாம் அனைவரும் தயாராக உள்ளோம். இந்த நிலையில் எமது கிராமங்களில் நாம் கால் பதித்து அபிவிருத்தி செய்ய போரின்போது புதைக்கப்பட்ட கண்ணிவெடிகள்தான் தடையாகக் காணப்படுகின்றன.

கடந்த காலங்களில் வீதி திருத்தப் பணிகளுக்காகப் படையினரால் மேற்கொள்ளப்பட்ட கண்ணிவெடியகற்றும் பணி உடன் நிறுத்தப்பட்டு மீண்டும் தொடரப்படாது காணப்படுகின்றது. எனவே எம் அனைவரினதும் உண்மையான உணர்வினைப் புரிந்து எமது கிராமங்களில் நாம் அனைவரும் விரைவாக மீள்குடியமர்ந்து கிராமங்களை அபிவிருத்தி செய்யக் கூடிய சூழலை ஏற்படுத்தித் தருமாறு தயவாக வேண்டுகின்றோம்.

இதன் ஆரம்பகட்டமாக எமது கிராமங்களில் உள்ள இந்து, கிறிஸ்தவ ஆலங்களைச் சென்று பார்வையிடவும், அதனை வழிப்படுத்துவதற்கும் ஆவன செய்துதவுமாறு தயவாக வேண்டுகின்றேதம். அத்துடன் தடைப்பட்டுக் காணப்படும் கண்ணிவெடியகற்றும் பணி விரைவாக ஆரம்பிக்கவும் ஆவன செய்துதவுமாறு தயவாக வேண்டுகின்றோம்.

நிறுத்தப்பட்டுள்ள இடம்பெயர்ந்தோருக்கான வழங்கப்பட்டு வந்த உலர்உணவு நிவாரணத்தை தற்போது பாரிய உணவுப் பொருளாதார நெருக்கடியில் வாழும் எம் அனைவருக்கும் மீள்குடியேற்றம் வரையாவது கிடைக்க ஆவன செய்துதவுமாறும் தயவாக வேண்டுகின்றோம்.-என்றுள்ளது.(த-6)

# 'ட்றோலர்' படகு மீன்பிடியை தடைசெய்யுமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், டிசெ.15

சிறுவலைத் தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை அழிக்கக் கூடிய வகையில் தடை செய்யப்பட்ட வலைகளைப் பயன்படுத்தி தொழிலில் ஈடுபடும் 'ட்றோலர்' படகுகளைத் தடை செய்யுமாறு வடமாகாண பிராந்தியக் கடற்படைத் தளபதியிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் கடற்தொழில் நீரியல் வளத் திணைக்கன உதவிப் பணிப்பாளர் நடராஜா கணேசமூர்த்தியே பிராந்திய கடற்படைத் தளபதியிடம் இந்தக் கோரிக்கையை விடுத்தார்.

குருநகர்ப் பகுதியில் இருந்து புறப்பட்ட 8 இற்கும் மேற்பட்ட 'ட்றோலர்' படகுகளால் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு நாச்சிக்குடாக் கடலில் அப்பகுதி மீனவர்களுக்குச் சொந்தமான வலைகள் அறுத்து நாசம் செய்யப்பட்டிருந்தன.

பெருமளவில் சிறுதொழில் வலைகள் இதன்போது அறுத்து நாசமாக்கப்பட்டுள்ளன. இதனால் அப்பகுதி மீனவர்கள் சுமார் 20 இலட்சம் பெறுமதியான வலைகளை இழந்துள்ளதாகத் தெரியவருகின்றது.

இந்தவிடயம் தொடர்பாக பூகநரி இரணைமாதா நகர் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் மாவட்ட கடற்றொழில் திணைக்களத்திடம் முறைப்பாடு செய்திருந்தது. இதனையடுத்தே வடபிராந்திய கடற்படைத் தளபதியிடம் 'ட்ரோலர்' படகுத் தொழிலை நிறுத்த நடவடிக்கை எடுக்குமாறு கோரியுள்ளதாக உதவிப் பணிப்பாளர் தெரி வித்தனர்.

'ட்றோலர்' படகுகளால் சேதமாக்கப்பட்ட வலைகளை இந்தப் பகுதி மீனவர்களுக்கு உதவி நிறுவனங்கள் வழங்கிய தாகவும், அதுவும் கடன் அடிப்படையிலேயே வழங்கப்பட்டதாகவும் கூறப்படுகின்றது. (ங-14)

# போதனா வைத்தியசாலைக்கு புதிய ஆய்வுகூட உபகரணம்

## பிரான்ஸ் அரசு வழங்குகிறது

யாழ்ப்பாணம்,டிசெ.15

யாழ்.போதனா வைத்தியசாலையின் இருதய சிகிச்சைப் பிரிவுக்குத் தேவையான புதிய ஆய்வுகூட உபகரணத் தொகுதி ஒன்றைப் பிரான்ஸ் வழங்கியுள்ளதாக இலங்கைக்கான பிரான்ஸ் தூதுவர் கிறிஸ்ரைன் றொடிச்சன் உதயனுக்குத் தெரிவித்தார்.

போதனா வைத்தியசாலை இருதய சிகிச்சைப் பிரிவின் தொழிற்பாட்டை மேலும் மேம்படுத்துவதற்காகவே இந்த ஆய்வுகூட உபகரணத் தொகுதி வழங்கப்பட்டதாக அவர் மேலும் கூறினார்.அத்துடன் வைத்தியசாலைக்கு 'சி.ரி.ஸ்கானர்' இயந்திரம் ஒன்றையும் பிரான்ஸ் வழங்கியுள்ளதாகத் தூதுவர் குறிப்பிட்டார்.

அத்துடன் இரணைமடு-யாழ்ப்பாணம் குடிதண்ணீர் விநியோகத் திட்டத்துக்கு ஆசிய அபிவிருத்தி வங்கி வழங்கியுள்ள 99 மில்லியன் டொலர் நிதியுதவியில் பிரான்ஸ் அரசு வழங்கியுள்ள 35 மில்லியன் யூரோ நிதியும் அடங்கியுள்ளதாக அவர் கூறினார்.

அவர் மேலும் கூறுகையில் இந்தத் திட்டத்துக்குப் பிரான்ஸ் அரசும் பங்காளராக உள்ளது இரணைமடு-யாழ்ப்பாணம் குடிதண்ணீர் திட்டத்துக்கான சகல முன்னேற்பாடுகளும் பூர்த்தியாகியுள்ளன. விரைவில் அதற்கான ஒப்பந்தம் கைச்சாத்தாகும்.

இந்தத்த திட்டத்தின் மூலம் யாழ்ப்பாணத்துக்கும் தீவகத்துக்கும் சுத்தமான குடிதண்ணீர் கிடைக்கவுள்ளது. இதன் மூலம் குடிதண்ணீர் பற்றாக் குறைக்குத் தீர்வு ஏற்படும்-என்றார்.

(த)

# குளிக்கச் சென்ற மாணவி சடமாக மீட்கப்பட்டார்

நவாலி,டிசெ.15

குளிப்பதற்காகச் சென்ற மாணவியொருவர் பின்னர் கிணற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் ஆனைக்கோட்டைப் பகுதியில் நேற்று பிற்பகல் 2 மணியளவில் இடம்பெற்றது. ஆனைக்கோட்டை சோமசுந்தரம் வீதியைச் சேர்ந்தவரும், மானிப்பாய் மெமோறியல் பாடசாலை உயர்தர மாணவியுமான சதீஷ்குமார் சிந்துஜா (வயது-18) என்னும் இளம் பெண்ணே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார். இச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது:

குறித்த மாணவி தனது வீட்டுக்கு சமீபமாகவுள்ள வயல் கிணறு ஒன்றில் குளிப்பதற்காகச் சென்றுள்ளார்.

எனினும் நீண்ட நேரமாகியும் அவர் வீடு திரும்பவில்லை. இதனால் அந்தப் பெண்ணின் தாயாரும் உறவினர்களும் அவரைத் தேடிய போது, கிணற்றில் இருந்து அவர் சடலமாக மிதப்பது கண்டு பிடிக்கப்பட்டது. (ங-100)

# கொக்குவிலில் மீட்கப்பட்ட மண்டையோடுகள் 3 முதல் 5 வருடத்துக்குள் புதைக்கப்பட்டவை

யாழ்ப்பாணம்,டிசெ.15

யாழ்ப்பாணம், கொக்குவில் கிழக்கு பொற்பதிப் பிள்ளையார் ஆலயத்துக்கு பின்புறமாக அமைந்துள்ள காணியிலிருந்து கடந்த சனிக்கிழமை மீட்கப்பட்ட மனித மண்டையோடுகள், 3 வருடத்துக்கும் 5 வருடத்துக்கும் இடைப்பட்ட காலப்பகுதிக்கு உரியவை என்று முதற்கட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

கடந்த சனிக்கிழமை மேற்படி இடத்தில் நீண்ட காலமாகத் தேடுவாரற்றுக்கிடந்த பற்றைக் காணியை துப்பரவு செய்யும் போது உரப்பை ஒன்றிலிருந்து இரண்டு மனித மண்டையோடுகளும், உடலின் சில பாகங்களின் எலும்புகளும் மீட்கப்பட்டன.

இது தொடர்பில் கோப்பாய் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டு பின்னர் சம்பவ இடத்துக்கு யாழ்ப்பாண நீதிவான் நீதிமன்ற நீதிபதி அ. ஆனந்தராஜா நேரில் சென்று பார்வையிட்டார். குறித்த மண்டையோடுகள் தொடர்பில் பகுப்பாய்வு மேற்கொள்ளுமாறும் அத்துடன் குறித்த பற்றைக் காணியில் மேலும் ஏதாவது எலும்புகள் இருக்கின்றனவா? என்று சோதனை மேற்கொள்ளுமாறும் நீதிவான் உத்தரவிட்டார்.

இதற்கமைய மேற்கொள்ளப்பட்ட முதற்கட்ட விசாரணைகளில் இரு மனித மண்டையோடுகளும் 3 வருடத்துக்கும் 5 வருடத்துக்கும் இடைப்பட்ட காலப்பகுதியிலேயே உரப்பையில் போடப்பட்டு புதைக்கப்பட்டிருக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ங-15)

# நிகழ்வுகள் இன்று

### விசேட கூட்டம்

யாழ். மாவட்ட தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் மாவட்ட சம்மேளனத்தின் விசேட கூட்டம் காலை 9.30 மணிக்கு தேசிய இளைஞர் சேவைக்காரியாலயத்தில் இடம்பெறவுள்ளது. (ம- 313)

### செயலமர்வு

வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் ஜீ.சி.ஈ. உயர்தரப் பிரிவு கணக்கியல் பாட ஆசிரியர்களுக்கான செயல மர்வு இன்று வியாழக்கிழமையும் நாளை வெள்ளிக்கிழமையும் காலை 8.30 மணி முதல் மருதனார்மடம் விவசாயக் கல் லூரி மண்டபத் தில் நடைபெறவுள்ளது. (ம- 313)

### கலந்துரையாடல்

யாழ்.மாநகர சபையின் ஏற்பாட்டில் ஜே/103 கிராம சேவையாளர் பிரிவின் மக்கள் பங்கேற்புடனான கிராம அபிவிருத்தி திட்டமிடல் கலந்துரையாடல் பிற்பகல் 3 மணிக்கு சிவசக்தி [illegible] கட்டத்தில் பங்குபற்றி தங்கள் பிரிவின் கிராம அபிவிருத்திக்கான ஒத்துழைப்பை வழங்குமாறு மாநகர முதல்வர் கேட்டுள்ளார். (ம)

### பரிசளிப்பு விழா

சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் அனுசரணையின் கீழ் இயங்கும் சாவகச்சேரி கிழக்கு முன்பள்ளி மழலைகளின் பரிசளிப்பு விழா முன்பள்ளி முன்றலில் நடைபெறும். முன்பள்ளி பெற்றோஸ்அபிவிருத்திச் சங்கத் தலைவர் திருமதி ஜெ.தயாழினி தலைமையில் நடைபெறும் இவ்விழாவுக்கு முதன்மை விருந்தினராக சாவகச்சேரி நகர சபைத் தவிசாளர் இ.தேவசகாயம்பிள்ளையும சிறப்பு விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் சு.பாக்கியராஜாவும் கலந்து கொள்வர். (ங-207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிவாரணமின்றி விவசாயிகள் வாடும்போது புதிய சட்டங்களை புகுத்துவது நியாயமா?

## ஜே.வி.பி. கேள்வி

கொழும்பு, டிசெ. 15

நிதி நிவாரணம் எதுவுமின்றி விவசாயிகளின் வாழ்க்கை வறுமையின் பிடியால் வாடும் நிலையில், எதுவித முன்னறிவித்தலுமின்றி புதிய சட்டங்களைப் புகுத்துவது எந்த வகையில் நியாயம்?

- இவ்வாறு ஜே.வி.பி. கேள்வி எழுப்பியுள்ளது.

அரசால் அமுல்படுத்தப்பட்டுள்ள பிளாஸ்டிக் கூடை பாவனைச் சட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து விவசாயிகள் நாடு முழுவதும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இந்நிலையில், குறித்த சட்டம் தொடர்பாகக் கருத்து வெளியிடுகையிலேயே ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் 'உதயனு'க்குத் தெரிவித்தவை வருமாறு:-

நாட்டிலுள்ள விவசாயிகள் இன்று சொல்லொணாத் துன்பங்களை அனுபவிக்கின்றனர். விவசாய நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்குப் போதிய நிதி வசதியின்றி சிலர் திண்டாடுகின்றனர். விவசாயிகளுக்கு நிதி நிவாரணங்கள் வழங்கப்படுவதில்லை.

இந்த நிலையில், எதுவித முன்னறிவித்தலுமின்றி மரக்கறி வகைகளை பிளாஸ்டிக் கூடைகளில் அடைத்து எடுத்துச்செல்லும் வகையில் சட்டமொன்றை அரசு அமுல்படுத்தியுள்ளது.

சட்டமொன்றைப் புதிதாக அறிமுகப்படுத்தும்போது அந்தச் சட்டம் குறித்து தெளிவுபடுத்தவேண்டும். அதேபோன்று, பிளாஸ்டிக்கூடை பாவனைச் சட்டம் குறித்து விவசாயிகளுக்கு அரசு தெளிவுபடுத்தியிருக்கவேண்டும். ஆனால், அரசு அவ்வாறு செய்யவில்லை.

அதுமட்டுமின்றி, பிளாஸ்டிக் கூடைகளை குறைந்த விலைக்குக் கொள்வனவு செய்யும் வகையில் விவசாயிகளுக்குச் சலுகை வழங்கப்பட்டிருக்கவேண்டும்.

இவை எதையும் செய்யாமல் புதிய சட்டம் கொண்டுவருகின்றோம் என சட்டத்தை அரசு புகுத்துவதற்கு முயற்சிக்கக்கூடாது. இது ஒரு நியாயமான விடயம் அல்ல - என்றார்.

# 13 பேருக்கு எதிராக சர்வதேச பிடியாணை

கொழும்பு, டிச.15

இலங்கையர்கள் 13 பேருக்கு எதிராக சர்வதேசப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இவர்கள் ஏற்கனவே நாட்டைவிட்டு தப்பிச்சென்றுள்ள சந்தேகநபர்கள் எனக் குறிப்பிடப் படுகிறது. இதில் மூவர் பெண்கள் எனத் தெரிவிக்கப் படுகிறது.

செலிங்கோ குழும நிறுவனத்தின் உரிமையாளர் லலித் கொத்தலாவலவின் மனைவி சிசிலி கொத்தலாவலவிற்கு எதிராகவும் சர்வதேசப் பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. போலி நாணயத்தாள் அச்சிடல் உள்ளிட்ட பல்வேறு மோசடிக் குற்றச்சாட்டுகளின் அடிப்படையிலேயே இவர்களுக்கு சர்வதேச பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

# மஹிந்தவையும் சந்தித்த சீன ஜெனரல்



கொழும்பு, டிசெ. 15

இலங்கைக்குப் பயணம் செய்துள்ள சீன ஜெனரல் மாசியாவோரியன் நேற்று முன்தினம் மாலை இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்துப் பேசியுள்ளார்.

இந்தச் சந்திப்பில், இலங்கை பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ மற்றும் இராணுவத் தளபதி லெப். ஜெனரல் ஜெகத் ஜெயசூரிய ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர்.

இலங்கைக் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் சோமதிலக திசநாயக்கவையும் சீனப் படையதிகாரிகள் நேற்று முன்தினம் சந்தித்துப் பேசியுள்ளனர். இவர்கள் கூட்டுப் படைகளின் தளபதி எயர் மார்சல் றொசான் குணதிலக உள்ளிட்ட பாதுகாப்புத் துறை சார்ந்த பலரையும் சந்திக்கவுள்ளனர் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

அத்துடன் இலங்கையின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பாதுகாப்பு நிலைகளுக்கும் இவர்கள் பயணம் செய்யவுள்ளனர்.

இந்தக் குழுவில் சீனப் பாதுகாப்பு அமைச்சின் வெளிவிவகாரப் பணியகத்தின் பிரதித் தலைவர் றியர் அட்மிரல் குவான் யூபி, ஜெனரல் மா சியாவோ ரியனின் செயலர் மூத்த கேணல் குவோ ஹொங்வெய், பாதுகாப்பு அமைச்சின் ஆசிய விவகாரப் பிரிவு பிரதிப் பணிப்பாளர் மூத்த கேணல் சொங் யன்சாவோ, கேணல் சா ஓ மெங், கேணல் லியூ பின், கப்டன் ஜியாங் பின் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். (ம)

# மின்சார சபைக்கு காற்றால் 119 மில்லியன் நஷ்டம்

நாட்டின் தென்பகுதியில் கடந்தமாதம் வீசிய கடும் காற்றினால் இலங்கை மின்சார சபைக்கு 119 மில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தக் காற்றினால் ஐந்து மின்பிறப்பாக்கிகள், உயர்வலு கொண்ட நான்கு கட்டமைப்புகள், 1000 மெகாவோட்ஸுக்கும் குறைந்த மின்மாற்றி, 46 கிலோ மீற்றர் தூரத்திற்கான மின் வயர்கள் ஆகியன சேதமடைந்துள்ளன.

அத்துடன், தென்மாகாணத்தில் ஐந்து லட்சத்து 30 ஆயிரம் குடும்பங்களுக்கான மின்விநியோகம் முற்றாகத் தடைப்பட்டன.

செயலிழந்த மின்கட்டமைப்பு தற்போது திருத்தியமைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு கிராமப்புறங்களில் காற்றினால் பாதிக்கப்பட்டு, இதுவரை மின் விநியோகம் வழங்கப்படாத வீடுகள் ஏதேனும் இருப்பின் அது தொடர்பில் 0714 260 117, 0714 260 119 மற்றும் 0912 248 292 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொண்டு அறிவிக்குமாறு அமைச்சு அறிவித்துள்ளது.

# 2010- 2011 இல் பாதுகாப்பு அமைச்சின் கட்டட வாடகை 55 லட்சத்து 89, 642 ரூபா

கொழும்பு, டிச.15

பாதுகாப்பு அமைச்சு 2010 மற்றும் 2011 ஆண்டுகளில் கட்டடங்களை வாடகைக்குப் பெற்றுக்கொள்வதற்காக 55 லட்சத்து 89ஆயிரத்து 642 ரூபாவை செலவிட்டதாக பாதுகாப்பு அமைச்சு நேற்றுமுன்தினம் நாடாளுமன்றில் கூறியது.

வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின்போது ஐ.தே.க. எம்.பி.ரவி கருணாநாயக்க கேட்ட கேள்விக்கு பாதுகாப்பு அமைச்சு விடுத்துள்ள பதிலிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்தோடு, இந்தவருடம் வாகனங்களை வாடகைக்குப் பெறுவதற்காக 7லட்சத்து56 ஆயிரம் ரூபா செலவிடப்பட்டது என்றும், வெளிவள சேவைகளுக்காக 2010 ஆம் ஆண்டு 36 லட்சம் ரூபாவும், 2011ஆம் ஆண்டு ஜூலை மாதம் 31ஆம் திகதிவரை 19 லட்ச ரூபாவும் செலவிடப்பட்டது என்றும் அந்த பதிலில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம)

# தங்க முலாம் பூசப்பட்ட இளநீரை இரண்டரைக் கோடிக்கு விற்க முயற்சி

புதையல் தோண்டியபோது கிடைத்த தங்க இளநீர் என்றுகூறி தங்க முலாம் பூசப்பட்ட இளநீரை சுமார் இரண்டரைக் கோடி ரூபாவுக்கு விற்பனை செய்ய முயற்சித்த சந்தேக நபர் ஒருவர் கெக்கிராவை பகுதியில் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் களுத்துறை - தொடங்கொட பகுதியைச் சேர்ந்தவர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

போலியான முறையில் தயாரிக்கப்பட்ட இளநீர் 193 கிராம் 80 மில்லி கிராம் நிறையுடையது எனவும், அதில் தங்க முலாம் பூசப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

குறித்த இளநீரைக் கொள்வனவு செய்ய எப்பாவெல பிரதேச வர்த்தகர் ஒருவர் இணங்கியதை அடுத்து கொடுக்கல் - வாங்கல் இடம்பெறவிருந்த இடத்தில் வைத்து சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

# இலங்கையில் உள்ள ஆசிரியர்களில் பயிற்றப்பட்டவர்கள் 15.53 வீதத்தினரே!

இலங்கையிலுள்ள ஆசிரியர்களில் 15.53 சதவீதமே பயிற்றப்பட்டவர்கள் என கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்தவாரம் நாடாளுமன்றத்தில் வெளியிடப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையின்படி கடந்த வருடம் நாட்டின் 2,15,638 ஆசிரியர்களில் 15.53 சதவீதமானோர் மாத்திரமே பயிற்றப்பட்டவர்களாக இருந்தனர்.

அதற்கு முந்தைய வருடம் இந்த வீதம் 18.21 ஆக இருந்ததாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

நாடுமுழுவதும் சமத்துவமான கல்வி மட்டத்தைப் பேணுவதற்கு ஆசிரியர்களின் இந்நிலை ஒரு தடையாகவுள்ளது எனத் தெரிவித்துள்ள கணக்காய்வாளர் நாயகம், ஆசிரியர் பயிற்சி நடைமுறைகளை கிரமமாக்கும்படி தமது அறிக்கையில் வலியுறுத்தியுள்ளார்.

# யாழ். பொது நூலகத்தை வடிவமைத்த கட்டட நிபுணர் துரைராஜா காலமானார்

கொழும்பு, டிசெ. 15

யாழ். பொதுநூலகம், தந்தை செல்வா நினைவுத்தூபி உள்ளிட்ட யாழ்ப்பாணத்தின் முக்கிய கட்டடங்களை வடிவமைத்த ஈழத்தின் புகழ்பெற்ற கட்டடக்கலை நிபுணர் வி.எஸ்.துரைராஜா ஆஸ்திரேலியாவில் காலமானார்.

கடந்த இரு மாதங்களாக நோயுற்றுப் படுக்கையில் இருந்த அவர் நேற்றுக் காலை ஆஸ்திரேலியாவின் சிட்னி நகரில் காலமானார்.

இலங்கைத் தீவில் கட்டடக் கலைத்துறையில் இவர் நாற்பதாண்டுகளுக்கு மேலாக குறிப்பிடத்தக்க பணியை ஆற்றியுள்ளார்.

நான்காவது தமிழாராய்ச்சி மாநாட்டு அமைப்புக்குழுவில் இருந்த இவர், யாழ்ப்பாணத்தில் இந்த மாநாடு நடத்தப்பட வேண்டும் என்பதில் உறுதியாக இருந்த செயற்பட்டவராவார்.

இவரது செயலகமே, நான்காவது தமிழாராய்ச்சி மாநாட்டு செயலகமாகவும் பயன்படுத்தப்பட்டது. அத்துடன் இலங்கையில் தயாரிக்கப்பட்ட குத்துவிளக்கு திரைப்படத்தையும் இவரே தயாரித்திருந்தார்.

இலங்கையில் கட்டடக்கலை பீடம் உருவாக்கப்படாத காலத்தில் இவர், 1948இல் பம்பாயில் உள்ள கட்டட வடிவமைப்பு பாடசாலையில் மூன்றாண்டு கற்கையை பூர்த்தி செய்தார்.

கட்டட வேலைகள் திணைக்களத்தில் ஒரு கட்டக்கலைஞராக இணைந்து பணியாற்றிய இவர், புலமைப்பரிசில் பெற்று லண்டன் சென்று அங்கு கட்டடக் கலைத் துறையில் பட்டய மற்றும் பட்டப்பின் படிப்புகளை மேற்கொண்டார்.

இவர் யாழ். பல்கலைக்கழகத்தின் மருத்துவபீடம், விஞ்ஞானபீடம், கணித, கணினி விஞ்ஞானப் பிரிவு கட்டடம், நுண்கலைப்பீடக் கட்டங்களையும், வட்டக்கோட்டை தொழில்நுட்பக் கல்லூரி, சுபாஸ் விடுதி, சந்தைக்கட்டம், மாநகரசபை விளையாட்டரங்கு, பொதுநூலகம், தந்தை செல்வா நினைவுத்தூபி, வீரசிங்கம் மண்டபம் உள்ளிட்ட யாழ்ப்பாணத்தின் பல்வேறு முக்கிய கட்டடங்களையும் இவரே வடிவமைத்திருந்தார்.

பேரினவாதத்தால் எரிக்கப்பட்ட யாழ். பொது நூலகத்தை மீண்டும் கட்டியெழுப்புவதில் சிரத்தையுடன் பணியாற்றிய கட்டடக்கலை நிபுணர் துரைராஜா, யாழ்ப்பாண நூலகத்தின் பதிவுகளாக "யாழ்.பொதுநூலகம் அதன் சாம்பலில் இருந்து எழுகிறது" (The Jaffna Public Library Rises From Its Ashes) என்ற ஆங்கில நூலை எழுதியுள்ளார். பல அரிய படங்கள், வரைபடங்கள், தகவல்கள் அடங்கிய இந்த நூல் 2008 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். மாநகர சபையின் வரவு- செலவுத் திட்ட ஆலோசனைக் கூட்டத்தில் பெரும் அமளிதுமளி

யாழ்ப்பாணம், டிசெ.15

யாழ். மாநகர சபையின் 2012ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட ஆலோசனைக் கூட்டம் பலத்த சலசலப்புகள், வாக்குவாதம் என்பவற்றுடன் நேற்று நடந்து முடிந்தது.

யாழ். மாநரசபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா தலைமையில் மாநகர சபை மண்டபத்தில் இந்தக் கூட்டம் நேற்றுப் புதன்கிழமை நடைபெற்றது.

இதில் அடுத்த வருடத்துக்கான உத்தேச வரவு- செலவு தொடர்பான விடயங்கள் சமர்ப்பிக்கப்பட்டன. எனினும் இதற்கு எதிர்த் தரப்பைச் சேர்ந்த உறுப்பினர்களான விந்தன் கனகரத்தினம், பரஞ்சோதி ஆகியோர் கடும் எதிர்ப்பை வெளியிட்டனர். ''நிதி தொடர்பான எந்தவொரு விடயமும் நிதிக் குழுவில் பரிசீலிக்கப்பட்ட பின்னரே சபையில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். ஆனால் இங்கு நிதிக் குழுவில் ஆலோசிக்கப்படாமல் திட்டங்கள் சமர்ப்பிக்கப்படுவது சட்டவிரோதமானது'' என அவர்கள் தம் எதிர்ப்பை வெளிப்படுத்தினர். இதற்கு ஆளும் தரப்பு உறுப்பினர்களும் தம் பங்குக்கு வாதங்களை முன்வைத்தனர். ஒரு கட்டத்தில் உறுப்பினர்களுக்கிடையேயான வாக்குவாதம் கைகலப்பு நிலை வரை சென்றது. ஆளும் தரப்பு உறுப்பினரான என். விஜயகாந்த், எதிர்த் தரப்பு உறுப்பினரான ஆ. பரஞ்சோதி ஆகிய இருவரும் கடுமையான வார்த்தைப் பிரயோகங்களோடு முஸ்டியை முறுக்கிக்கொண்டு மோதுவதற்கு முற்பட்டனர். எனினும் சக உறுப்பினர்கள் இதில் தலையிட்டு நிலைமையைச் சமாளித்தனர்.

தொடர்ந்தும் இரு தரப்பாருக்கும் இடையே கடும் சொற்போர் நிகழ்ந்தது. ''இங்கு சமர்ப்பிக்கப்பட்ட விடயங்கள் ஆலோசனைக்காக மாத்திரமே வெளியிடப்பட்டுள்ளன. இதில் திருத்தங்கள் ஏதும் இருப்பின் அவற்றைச் சேர்த்துக் கொள்ளலாம். ஆனால் நீங்கள் இதற்கு சம்மதிக்காவிடில் வரவு- செலவுத் திட்டத்தை நிலையியல் குழுவின் ஆலோசனையோடு நிறைவேற்ற வேண்டிய நிலை ஏற்படலாம்'' என முதல்வர் எச்சரிக்கும் தொனியில் கூறினார். அதற்கும் உறுப்பினர்கள் மசியாததால் முதல்வர் சபையை விட்டு தனது அலுவலகத்துக்கு சென்றுவிட்டார். அதைத் தொடர்ந்து கூட்டத்தில் இருந்து எதிரணி உறுப்பினர்களும் வெளிநடப்புச் செய்தனர்.


மாநகரசபை கூட்டத்தில் கைகலப்பு இடம்பெற்ற போது

சிறிது நேரத்தின் பின்னர் தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டு மீண்டும் சபைக்கு முதல்வர் வந்தார். அவரைத் தொடர்ந்து எதிரணி உறுப்பினர்களும் உள்வந்தனர். அதன் பின்னர் மாநகர சபை ஆணையாளர் ம.செ. சரவணபவ உறுப்பினர்களுக்குச் சில ஆலோசனைகளை வழங்கியதைத் தொடர்ந்து, சபையில் சூடு தணிந்து சுமூகமான முறையில் ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டன. (ங-7)

# நெல்லில் நோய்த் தாக்கம்

துணுக்காய், டிசெ.15

துணுக்காய் பிரதேசத்தில் உள்ள நெற்செய்கையாளர்கள் பயிர்களைத் தினமும் அவதானித்துத் தாக்கம் காணப்படுமாயின் கட்டுப்பாட்டு முறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும். என யோகபுரம் விவசாயப் போதனாசிரியர் அறிவுறுத்தியுள்ளார்.

தற்போது பெய்து வரும் கனமழை காரணமாக நெற் பயிர்களில் பரவலாகச் சந்துக்குத்தி, மடிச்சுக்கட்டித் தாக்கங்கள் காணப்படுகின்றன.

அதற்கான கட்டுப்பாட்டு முறைகளைக் கடைப்பிடிப்பதுடன் தங்கள் பிரிவு விவசாயப் போதனாசிரியருடன் தொடர்பு கொண்டு சிபார்சு செய்யப்பட்ட கிருமி நாசினியைத் தேவைக்கு ஏற்றவாறு தெளிக்குமாறும் அவர் மேலும் கேட்டுக் கொண்டுள்ளார்.

இந்தப் பிரதேசத்தில் இந்த ஆண்டு தொடர்ந்து பெய்த கனமழை காரணமாக நெல் வயல்களுக்குப் பெரும் பாதிப்புக்கள் ஏற்பட்டள்ளமை விவசாயிகளுக்குக் கவலையை ஏற்படுத்தியுள்ளது. (க-415)

# பிளாஸ்ரிக் பாவனைச்சட்டம் ஒரு மாதத்துக்கு நிறுத்தம்

பிளாஸ்ரிக் கூடைப் பாவனைச் சட்டத்துக்கு விவசாயிகள், வர்த்தகர்கள் ஆகியோர் கடும் எதிர்ப்பைத் தெரிவித்ததையடுத்து, அரசு அந்தச் சட்டத்தை ஒரு மாத காலத்துக்குத் தற்காலிகமாக இடைநிறுத்தி வைத்துள்ளது.

அதேவேளை, அக்காலப் பகுதிக்குள் வர்த்தகர்கள் தங்களைத் தயார்படுத்திக்கொள்ள வேண்டும் என அறிவுறுத்தப் பட்டுள்ளனர்.

மரக்கறி வகைகளை வாகனங்களில் ஏற்றிச்செல்லும் போது பிளாஸ்ரிக் பெட்டிகளில் களஞ்சியப்படுத்தியே அவற்றைக் கொண்டு செல்ல வேண்டும் என்று அரசு புதிய சட்டமொன்றை அமுல்படுத்தியது.

இந்தச் சட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து விவசாயிகள், வர்த்தகர்கள் நாடளாவிய ரீதியில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை முன்னெடுத்தனர். இதனால், பெரும் பதற்றம் ஏற்பட்டதுடன், பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டது. இதையடுத்து நாட்டில் அமைதியின்மை ஏற்பட்டது.

இந்நிலையில், பிளாஸ்டிக் கூடை விவகாரம் தொடர்பில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷக்கும், விவசாயிகள், வர்த்தக சங்க பிரதிநிதிகளுக்குமிடையில் நேற்று இரவு சந்திப்பொன்று இடம்பெற்றது.

இதன்போது, ஒரு மாத காலத்திற்கு இத்திட்டம் நிறுத்திவைக்கப்படும் எனவும், அக்காலப்பகுதியில் வர்த்தகர்கள் தங்களைத் தயார்படுத்திக் கொள்ள வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில், அமைச்சர்களான பசில் ராஜபக்ஷ, ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ,மற்றும் விவசாயிகள், வர்த்தக சங்க பிரதிநிதிகள் உட்படப் பல முக்கிய அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

## எதிர்கால நோக்கு...


உதவும் கரங்கள்: வவுனியா கூமாங்குளம் சித்தி விநாயகர் வித்தியாலயத்திலிருந்து அடுத்த ஆண்டு ஐந்து புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள 30 மாணவர்களுக்குத் தலா ஆயிரம் ரூபா வீதம் வவுனியா லயன்ஸ் கழக உப தலைவர் லயன் பி.பழனிவேல் வழங்கிய நிதியை அவரும், லயன்ஸ் கழகத் தலைவர் லயன் எஸ். திருசேதுகாவலரும் வழங்குகின்றனர்.

# மாந்தை கிழக்குப் பகுதியில் நெற் பயிர்களுக்கு அழிவு

அக்கராயன், டிசெ.15

மழை வெள்ளம் காரணமாகத் துணுக்காய், மாந்தை கிழக்கு ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் 610 ஏக்கர் நெற்செய்கை அழிவடைந்துள்ளதாகப் பிரதேச செயலகங்களின் புள்ளி விவரங்கள் மூலம் தெரியவந்துள்ளது.

மாந்தை கிழக்குப் பிரதேச செயலர் பிரிவில் 102 ஏக்கரும், துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் 508 ஏக்கரும் அழிவைச் சந்தித்துள்ளன.

நெல் விதைப்பின் பின்னர் தொடர் மழை பெய்ததும், குளங்கள் வான் பாய்ந்து நெற்பயிர்களை அள்ளிச் சென்றமையும் அழிவுகளுக்கான காரணங்களாக அமைந்துள்ளன. தாம் எதிர்கொண்டுள்ள அழிவுகளுக்கு பயிர் இழப்பீடு வழங்குமாறு விவசாயிகள் அரச அதிகாரிகளைக் கோரியுள்ளனர். (க-410)

# கௌரவித்து பரிசில் வழங்குவதால் மாணவர்களின் ஊக்கம் அதிகரிக்கும்

## ஆரம்பப்பிரிவு ஆசிரிய ஆலோசகர் கருத்து

அக்கராயன்,டிசெ.15

கௌரவித்துப் பரிசில் வழங்குவது மாணவர்களின் கல்வியில் பெரும் ஊக்கத்தை ஏற்படுத்துமென கிளிநொச்சிக் கல்வி வலய ஆரம்பப் பிரிவு ஆசிரிய ஆலோசகர் பொ.விஜயநாதன் தெரிவித்துள்ளார்.

அக்கராயன் மகாவித்தியாலயம், அக்கராயன் ஆரம்ப வித்தியாலயம் என்பன இணைந்து நடத்திய தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு மதிப்பளிக்கும் நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

மாணவர்கள் பரிசில்களைப் பெறுகின்ற போது அது ஏனைய மாணவர்கள் மத்தியில் ஆர்வத்தை உருவாக்கும். இதனால் கல்வியில் ஊக்கத்துடன் செயற்படுவார்கள்.

ஆரம்பப் பிரிவு மாணவர்களின் கல்வியில் பெற்றோர் நிறைய அக்கறை காட்டவேண்டும். அப்போதுதான் மாணவர்கள் கல்வியில் பெரும் வெற்றியை ஈட்டுவார்கள் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

அக்கராயன் ஆரம்ப வித்தியாலயத்தின் பகுதித் தலைவர் திருமதி சாந்தினி சிவசோதி தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் மாணவர்களுக்குப் பரிசில்கள், சான்றிதழ்கள் என்பன வழங்கப்பட்டு மதிப்பளிக்கப்பட்டனர். (க-410)

# கணித, விஞ்ஞான பாடங்களுக்கு ஆசிரியர் இல்லை உயர்தரப் பிரிவுகளை அமைப்பதில் தாமதம்

அக்கராயன், டிசெ.15

பூநகரி முழங்காவில் மகா வித்தியாலயத்தில் ஜீ.சி.ஈ. உயர்தர பிரிவில் விஞ்ஞான, கணித பிரிவுகளை ஆரம்பிப்பதற்கான அனுமதி கிடைத்துள்ள போதிலும் இதற்குப் பொருத்தமான ஆசிரியர்கள் இதுவரை நியமிக்கப்படவில்லையெனப் பாடசாலை அதிபர் சிவானந்தி பரதன் தெரிவித்தார்.

தற்போது 548 மாணவர்கள் இங்கு கல்வி பயில்கின்றனர். 24 ஆசிரியர்கள் கற்பித்தல் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளனர். இந்தப் பாடசாலை பூநகரிப் பிரதேசத்தில் 1 ஏபி தரத்துடன் உள்ளது. ஜீ.சி.ஈ. உயர்தரத்தில் கணித, விஞ்ஞான பிரிவுகளை ஆரம்பிக்கக் கூடிய தகுதியுடன் காணப்படுகின்றது. அனுமதியும் கிடைத்துள்ளது. ஆனால் பொருத்தமான ஆசிரியர்கள் இல்லாததால் இந்த வகுப்புக்களை ஆரம்பிக்க முடியவில்லை.

தற்போது எமது மாணவர்கள் உயர்தரத்தில் கணித, விஞ்ஞான பிரிவுகளில் கல்வி கற்பதற்காகப் பிற இடங்களுக்குச் செல்கின்றனர். ஒரு பிள்ளை தனது ஒரு காலை இழந்த நிலையில் 24 கிலோ மீற்றர் தூரத்துக்கு அப்பாலுள்ள பூநகரி மகா வித்தியாலயத்துக்குச் செல்கின்றது.

மேலும் இந்து சமயத்துக்கென 2007 இல் இருந்து ஆசிரியர்கள் இல்லை. இதனால் சமயப் பழக்க வழக்கங்கள் மாணவரிடையே குறைந்து காணப்படுகின்றன. கணித பாடத்துக்கு மூன்று ஆசிரியர்கள் தேவையாக இருந்த போதிலும் ஒருவர் மட்டுமே உள்ளார்.

இதனைவிட சாதாரண வகுப்பில் விஞ்ஞானம், உயர்தர வகுப்புக்களில் புவியியல், வரலாறு ஆகிய பாடங்களுக்கும் ஆசிரியர்கள்இல்லை. 1971 இல் அமைக்கப்பட்ட கட்டடங்களே இப்போதும் காணப்படுகின்றன. புதிய கட்டடங்கள் அமைக்கப்படாததால் நெருக்கடி நிலவுகின்றது. மழை காலங்களில் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குவதாகவும் பாடசாலை அதிபர் மேலும் தெரிவித்தார். (க-410)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# ஆஸ்திரேலிய உறுப்பினர் குழு எழுப்பிய கேள்விக்குப் பின்னால்...!

யாழ்ப்பாணம் வந்திருந்த ஆஸ்திரேலிய நாடாளுமன்ற உறுப்பினர்களின் குழு, அரசாங்க அதிபரிடம் கேட்ட கேள்வி, குடாநாட்டின் முக்கிய பேசுபொருளாக மாறியிருக்கிறது. இங்கு இடம்பெறும் ஒவ்வொரு நடவடிக்கையும் கொழும்பில் உள்ள வெளிநாட்டு தூதரகங்களால் உன்னிப்பாகவும் அக்கறையுடனும் கண்காணிக்கப்படுகின்றன, அவதானிக்கப்படுகின்றன என்பதனையே அது தொட்டுக் காட்டுகிறது.

வலிகாமம் தென்மேற்கில், மாதகல் மேற்குப் பகுதியில் உள்ள காணிகளை அரசாங்கம் சுவீகரிக்க உள்ளதாக வெளியான தகவல்கள் உண்மைதானா என்ற அந்த வினா, அக்கறையோடு கேட்கப்பட்டதற்கு முக்கிய காரணம் உண்டு. மாதகலில் மக்களின் பாவனைக்கென ஆஸ்திரேலியாவின் பெரும் பங்களிப்புடன் நிர்மாணிக்கப்பட்ட இறங்குதுறை உள்ளது. அரசாங்கம் அந்தப் பிரதேசத்தில் உள்ள காணிகளைச் சுவீகரித்தால், மக்கள் அங்கு குடியிருக்க முடியாத நிலை ஏற்படும். நிலைமை அதுவாக மாறினால், மக்களின் நலன் கருதித் தாம் செலவிட்ட பணம் வீண் போய்விடலாம் என்ற மனச்சுமையே ஆஸ்திரேலிய நாடாளுமன்ற உறுப்பினர்களின் கேள்விக்குக் காரணம் எனலாம்.

போரினால் உருக்குலைந்த வடக்கு, கிழக்கை மீளவும் கட்டி எழுப்பப் போவதாகவும், பயன்தரவல்ல அபிவிருத்திப் பணிகளை முன்னெடுக்கப் போவதாகவும் தெரிவித்து, அரசாங்கம் வெளிநாடுகள் பலவற்றிடம் நிதி உதவிகளையும் ஒரு சில நாடுகளிடம் நீண்டகாலக் கடன்களையும் பெற்றுவருகிறது.

கடற்படைத் தளம் ஒன்றைக் கட்டுவதற்கென நிதி உதவி அல்லது கடன்பெறுவது வேறு. மக்கள் தேவைக்கென தமது நாடு வழங்கிய நிதி உதவி கடற்படையின் சேவைக்கென மாற்றப்பட்டுள்ளதா என்ற ஆதங்கம் ஆஸ்திரேலிய நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் ஏற்பட்டது ஒன்றும் வியப்புக்கு உரியதும் அல்ல.

வடக்கு, கிழக்குப் பகுதிகளில் மீண்டும் ஒரு தடவை ஆயுதப் போராட்டம் முகிழ்த்துவிடக் கூடாது என்பதில் அரசு, அவதானமாகவும் எச்சரிக்கையுடனும் செயற்படுவதில் எவரும் குற்றம் காண முடியாது. எனினும் அளவுக்கு அதிகமான நிதியை அதன் பொருட்டுச் செலவிடுவதற்கு இரட்டை நோக்கம் உண்டு என்பது இப்போது இரகசியமல்ல. வடக்கு, கிழக்கில் இராணுவ பலத்தை அதிகரிப்பதோடு, உயர்பாதுகாப்பு வலயங்களுக்காக மக்களின் காணிகளையும் சுவீகரிப்பதாகத் தெரிவித்துக் கையகப்படுத்திக் கொண்டு அந்தப் பகுதியில் பெரும்பான்மை இன மக்களைக் குடியமர்த்தும் இலக்கும் குறிவைக்கப்படுகிறது.

இராணுவத் தேவைகளுக்காக அல்லது அவை தொடர்பான தந்திரோபாயங்களுக்கெனத் தேவைப்படும் காணிகளைச் சுவீகரிக்க அரசுக்கு முழு அதிகாரம் உண்டு. அதனூடு மக்களின் நலன்களையும், அத்தியாவசிய தேவைகள், சேவைகளைப் புறந்தள்ளும் அதிகாரத்தை அரசாங்கம் தன்னிடம் வைத்திருக்கும்வரை, அரசின் மீது எவரும் குற்றம் காணமுடியாது; தட்டிக் கேட்கவும் முடியாது.

இந்தவகையில் காரைநகர் வலந்தலையில் கடற்படை முகாம் விஸ்தரிப்புக்காக தனியார் காணி சுவீகரிக்கப்பட உள்ளது. வலி. வடக்கில் காங்கேசன்துறை துறைமுகத்தை அண்டிய காங்கேசன்துறை மேற்குப் பிரதேசத்தை சுவீகரிக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட இருப்பதாகத் தகவல்கள் உள்ளன.

வரவு - செலவுத் திட்டத்தில் பாதுகாப்பு அமைச்சுக்கு இருபது வீதம் ஒதுக்கப்பட்டதால் வடக்கு, கிழக்குக்கென வகுக்கப்பட்ட பாதுகாப்புத் திட்டங்கள் மளமளவென நிறைவேறும் எனக் கொள்ளலாம்.

இதேவேளை-

இலங்கை அரசு இப்போது அனுசரித்துவரும், அரசியல் நடைமுறைப் போக்கைப் பல நாடுகள் உள்ளார்ந்த மனத்துடன் அங்கீகரிக்கவில்லை. எனினும் தத்தம் பிராந்திய நலன், பொருளாதார நலன், வர்த்தக உறவுகள், ஒரு நாட்டை ஆளும் அரசுடன் நல்லுறவைப் பேணுதல் என்ற நெறிமுறையை அனுசரித்தே தமது இராஜதந்திர உறவுகளைப் பேணுகின்றன.

எனினும், இலங்கைக்குத் தாம் வழங்கும் நிதி உதவிகள் குறித்து ரைக்கப்பட்ட திட்டங்களுக்குப் பயன்படுத்தப்பட வேண்டும் என்பதில் எந்தநாடும் மிகுந்த அக்கறை காட்டுவது இயல்பு. மக்கள் நலத் திட்டங்களுக்கான உதவிகள் அவர்களுக்குப் பயன் தருவனவாகச் செறிவடைய வேண்டும் என்பதில் குறியாக இருப்பதும் உலகளாவிய எதிர்பார்ப்பு. ஆஸ்திரேலிய நாடாளுமன்ற உறுப்பி னர்கள் யாழ்.அரச அதிபரிடம் எழுப்பிய வினாவின் உள்ளார்த்த மும் அதுவே.

தாம் குறித்துரைத்த திட்டங்களுக்கென, இலங்கைக்கு வழங்கும் நிதி உதவியை, இந்நாட்டு அரசு தான் நினைத்த தேவைக்குப் பயன்படுத்துகிறது என்பது கண்டறியப்பட்டால், வெளிநாடுகள் தமது நிதி உதவிகளைச் சுருக்கிக் கொள்ளும் என்பது இதன் மறுபக்கமாகும்.

எதுவோ, அவர்களின் ஆதங்கம், சர்வதேச மட்டத்தில் இலங்கை அரசாங்கத்தை வெளிநாடுகள் சந்தேகத்துடன் முகத்தைச் சுழித்துக் கொண்டு பார்க்கும் நிலைப்பாட்டின், அரும்புப் பருவம் என்று கொள்வதில் தப்பில்லை.

# ரயில் நிலைய கட்டடங்களில் தங்கியிருப்போர் ஜனவரிக்கு முன்னர் வெளியேற வேண்டும்

## ரயில்வே திணைக்கள வடக்கு பிராந்திய பொறியியலாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம் டிசெ.15

வடமாகாணத்தில் உள்ள ரயில்வே நடைபாதைகள் மற்றும் ரயில் நிலைய கட்டடங்களில் தங்கியிருக்கும் மக்கள் எதிர்வரும் ஜனவரி மாதத்துக்கு முன்பாக அவற்றை கைவிட்டு வேறு இடங்களுக்கு செல்லவேண்டும் என்று ரயில்வே திணைக்களத்தின் வடக்கு பிராந்திய பொறியியலாளர் எஸ்.எஸ். செல்வரட்ணம் தெரிவித்துள்ளார்.

ஓமந்தையில் இருந்து காங்கேசன்துறை வரையும் ரயில்வே பாதை அமைக்கும் ஆரம்பகட்டப் பணிகள் எதிர்வரும் ஜனவரியில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இதற்கு முன்னேற்பாடாக ரயில் பாதைகளை அமைத்து சீர் செய்யும் பணிகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஓமந்தையில் இருந்து காங்கேசன்துறை வரைக்குமான ரயில் பாதையை நேரான பாதையாக அமைப்பதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஏற்கனவே இருந்த பாதை வளைந்த பாதையாகும். தற்போது பாலங்கள் மதகுகள் போன்றவற்றைத் தவிர்த்து ரயில் பாதை அமைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய அரசின் உதவியுடன் வடக்குக்கான ரயில் பாதை அமைக்கும் பணிகள் விரைவாக ஆரம்பிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதை விட யாழ்.ரயில்வே நிலையம் மற்றும் காங்கேசன்துறை ரயில் நிலையம் என்பனவும் மிகவும் நவீன வசதிகளுடன் அமைக்கப்படவுள்ளன.

இதேசமயம் யாழ்.ரயில் நிலைய கட்டடத்தில் தங்கியிருப்போரும் ஜன வரிக்கு முன்னர் குறித்த இடத்தில் இருந்து வெளியேற வேண்டும் என்றும்அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(ம-26)

# பன்றித்தலைச்சி கண்ணகை அம்பாளுக்கு பெருந்திருவிழா 30 ஆம் திகதி ஆரமபம்

சாவகச்சேரி டிசெ.15

சரித்திரப் பிரசித்தி பெற்ற மட்டுவில் பன்றித் தலைச்சிக் கண்ணகை அம்பாள் ஆலய வருடாந்த பெருந் திருவிழா எதிர் வரும் 30 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற் பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. இந்தப் பெரும் திருவிழாவில் கைலாச வாகனம் ஜனவரி 5 ஆம் திகதியும் வேட்டைத்திருவிழா மறுநாள்6 ஆம் திகதியும் இடம்பெறவுள்ளன.

தேர்த்திருவிழா 7 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கும் தீர்த்தத் திருவிழா 8 ஆம் திகதியும் இடம் பெறவுள்ளன.

கலாநிதி தேவலோகேஸ்வரக் குருக்கள் தலைமையில் திருவிழா நடைபெறவுள்ளது.

(ம-131)

# பேராசிரியர் சபா ஜெயராசாவுக்கு பாராட்டு விழா

பேராசிரியர் சபா ஜெயராசா ''சாஹித்திய இரத்தினம்'' விருது பெற்றதைப் பாராட்டி ஞானம் கலை இலக்கியப்பண்ணை நடத்தும் பாராட்டுவிழா எதிர்வரும் 18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு கொழும்பு தமிழ்ச்சங்க மண்டபதில் நடைபெறும்.

கொழும்பு பல்கலைக்கழக கல்விப்பீட பேராசிரியர் மா.கருணாநிதி தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் ஞானம் கலை இலக்கியப்பண்ணை உப தலைவர் ஆ.கந்தசாமி, கொழும்பு தமிழ்ச் சங்கத் தலைவர் மு.கதிர்காமநாதன், ''கொழுந்து'' சஞ்சிகை ஆசிரியர் அன்ரனி ஜீவா, இலக்கியத் திறனாய்வாளர் கே.எஸ் .சிவகுமாரன் ஆகியோர் உரையாற்றுவர். ஏற்புரையை பேராசிரியர் சபா ஜெயராசா நிகழ்த்துவார்.

பேராசிரியர் சபா ஜெயராசாவின் வாழ்வும் பணியும் ஒளிப் படம், சாஹித்திய இரத்தினம் விருது பெற்றமைக்கான கௌரவம், ஞானம் சஞ்சிகையின் வாழ்த்துப்பா வழங்கல் நிகழ்வுகளும் இடம்பெறும். (ம-7)

# தெய்வீகத்தை அடையும் வழி

மனிதர்கள் பல்வேறு சாதனைகளைச் செய்கிறார்கள். ஆனால் அந்தச் சாதனைகள் ஊடாக அவர்கள் கடவுளை அடைய முடியாது. சரியான பாதையைக் காட்டுபவர்கள் ஒருவரும் இல்லாதபடியால் இன்றைய மனிதன் இந்த உண்மையை உணர முடியாமல் இருக்கிறான். இந்தப் பாதைகள் எதுவும் கடவுளை அடைய ஒருவனுக்கு உதவி செய்யமாட்டாது. கடவுளை எப்படி அடைவது? கடவுள் உன்மீது அன்பைச் சொரிவது போல, உன்னுடைய அன்பை (தேடிப்பிடித்து) மற்று எல்லோருடனும் நீ பகிர்ந்து கொள்ளவேண்டும். சமத்துவத்தைக் கொண்டுள்ள எல்லோர் மீதும் கடவுள் தனது அருளைப் பொழிகிறார். எல்லோருடனும் இங்கே உள்ளது ஒன்று என்ற தன்மையை அனுசரித்து உனது அன்பைப் பகிர்ந்து கொள்ளவேண்டும். அப்படியென்றால்தான் நீ கடவுளை அடைய முடியும். கடவுளை அடைவதென்பது கடவுள் உன்னிலிருந்து வேறானவர் என்பதைக் குறிக்கவில்லை. அவர் உன்னிலிருந்தே பிரத்தியட்சமாவார். பிரதிபலிப்பு, எதிரொலி, தாக்கம் வெளியில் தான். ஆனால் நிதர்சனம் உள்ளே தான். அது தான் மூலாதாரமான அடிப்படை. இதை ஒருவரும் புரிந்துகொள்ள முயற்சிப்பதில்லை. தெய்வீக கட்டளைகளின் படி நடந்து கொள். அப்படியென்றால் நீ நிச்சயமாக தெய்வீகத்தை அடைந்து விடலாம்.



சாயி சிந்தனை

**நாளை**

கார்த்திகை 30, வெள்ளிக்கிழமை 16.12.2011
திதி: சஷ்டி மாலை 6.51 வரை
நட்சத்திரம்: மகம் மு.இ. 9.06வரை
சுபநேரம்: 6.22-7.52 வரை, ராகு காலம்:10.52-12.22 வரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
15 டிசெம்பர் 2011 வியாழக்கிழமை

# யாழ். மாவட்டத்தில் மேலும் 2,421 பேர் வாக்காளர் பதிவுக்காக விண்ணப்பம்

யாழ்ப்பாணம்,டிசெ.15

யாழ். மாவட்டத்தில் மேலும் இரண்டாயிரத்து 394 பேர் தம்மை வாக்காளர்களாகப் பதிவு செய்யக் கோரி விண்ணப்பித்துள்ளார்கள். இவ்வாறு யாழ். மாவட்ட செயலக உதவித் தேர்தல்கள் ஆணையாளர் பொ.குகநாதன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

உரிமைக் கோரிக்கைப் படிவம், தேர்தல் ஆணையாளரால் விநியோகிக்கப்பட்ட விசேட படிவம், பவ்ரல் அமைப்பினரால் விநியோகிக்கப்பட்ட படிவம் என்பவற்றினூடாகவே மக்கள் தம்மை வாக்காளர்களாகப் பதிவு செய்யுமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதுவரையில் ஊர்காவற்துறை தேர்தல் தொகுதியிலிருந்து 1,123 பேரும், வட்டுக்கோட்டை தேர்தல் தொகுதியிலிருந்து 1,184 பேரும், காங்கேசன்துறை தேர்தல் தொகுதியிலிருந்து 1,928 பேரும் மானிப்பாய் தேர்தல் தொகுதியிலிருந்து 3049 பேரும் கோப்பாய் தேர்தல் தொகுதியிலிருந்து மூவாயிரத்து 211 பேரும் உடுப்பிட்டி தேர்தல் தொகுதியிலிருந்து 1,471 பேரும், பருத்தித்துறை தேர்தல் தொகுதியிலிருந்து 1,804 பேரும், சாவகச்சேரி தேர்தல் தொகுதியிலிருந்து இரண்டாயிரத்து 35 பேரும், நல்லூர் தேர்தல் தொகுதியிலிருந்து மூவாயிரத்து 248 பேரும், யாழ்ப்பாணம் தேர்தல் தொகுதியிலிருந்து இரண்டாயிரத்து 909 பேரும், கிளிநொச்சி தேர்தல் தொகுதியிலிருந்து ஐயாயிரத்து 459 பேரும் மொத்தமாக 27 ஆயிரத்து 421 பேர் பதிவுக்காக விண்ணப்பித்துள்ளனர். கடந்த வாரம் வரை 25 ஆயிரத்து 27 பேர் விண்ணப்பித்த நிலையில் தற்போது மேலும் இரண்டாயிரத்து 394 பேர் தம்மை வாக்காளர்களாகப் பதிவு செய்யக் கோரி விண்ணப்பித்துள்ளார்கள்.

இவர்களை வாக்காளர் பெயர்ப் பட்டியலில் இணைக்கும் பொருட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன- என்று அவர் மேலும் தெரிவித்தார். (ஙு-15)

## குடாநாட்டில் இம்முறை மழை வீழ்ச்சி உயர்வு

குடாநாட்டில் இம்முறை சராசரி வருடாந்த மழைவீழ்ச்சி 49 மில்லி மீற்றரால் அதிகரித்துள்ளது.

இதுவரையும் வருடாந்த சராசரி மழைவீழ்ச்சி 1230 மில்லி மீற்றராகவே இருந்து வந்தது. ஆனால் இம்முறை டிசெம்பர் மாதம் 13 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிவரை 1279 மில்லி மீற்றர் மழைபெய்துள்ளதாக யாழ்ப்பாணம்வானிலைஆராய்ச்சி நிலைய அதிகாரி செ. புஸ்பநாதன் தெரிவித்தார்.

கார்த்திகை மாதத்தில் மட்டும் சராசரியாக 340 மில்லி மீற்றர் மழை பெய்துள்ளது. டிசெம்பர் மாதம் 11 ஆம் திகதி 12 ஆம் திகதி காலை 8.30 முதல் 13 ஆம் திகதி காலை 8.30 மணிவரை 24 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகி உள்ளது. (ஙு-7)




யாழ்.றோட்டரக் கழக ஏற்பாட்டில் விழிப்புலனற்ற 10 பேருக்கு ஒலிப்பதிவுக் கருவி இலவசமாக வழங்கப்பட்டது. இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட ஓய்வு பெற்ற இலங்கை வங்கி முகமையாளர் லக்சுமணசர்மா விழிப்பு ணர்வற்ற யாழ். பல்கலைக்கழக மாணவன் ஒருவருக்கு ஒலிப்பதிவுக் கருவியை வழங்குகிறார். (ம-323)

## காப்பெற் வீதியாகும் யாழ்.நகர வீதிகள்

குருநகர்,டிசெ.15

யாழ். வேம்படி வீதி, யாழ்.மத்திய கல்லூரி, யாழ். நீதிமன்றம் அமைந்துள்ள முன்வீதி ஆகியவை காப்பெற் வீதியாக செப்பனிடப்பட்டுள்ளன.

யாழ்.மத்திய கல்லூரி, யாழ்.நீதிமன்றம் ஆகியவற்றுக்குச் செல்வதற்கான மஞ்சள் கோடுகளும் அமைக்கப்பட்டுள்ளன. எனினும், யாழ். பிரதான வீதிக்கும் யாழ்.கடற்கரை வீதிக்கும் இடையில் அமைந்துள்ள இவ்வீதி ஒரு பகுதி செப்பனிடப்படாமல் உள்ளது. இவ்வீதி முன்னைய யாழ். மாநாகர சபைக்கு அருகாமையில் உள்ளது.

இவ்வீதியூடாக குருநகர் மக்கள் மற்றும் குருநகர் மீன் வாடியை நோக்கி மீன் வியாபாரிகள் அடிக்கடி சென்று வருவதனால் இவ்வீதியையும் புனரமைக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என பொது மக்கள் தெரிவித்தனர். (ம-51)

## டெங்கை ஒழிப்பதற்கு புகையூட்டல் துரிதம்

அளவெட்டி, டிசெ.13

அளவெட்டி மேற்கு செபஸ்தியார் கோயிலடி பகுதியில் டெங்கு நோயாளி இனங் காணப்பட்டதைத் தொடர்ந்து அந்தப் பகுதி தெல்லிப்பளை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் சுகாதார பரிசோதகர் பணியாளர்கள் மூலம் புகையூட்டல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அத்துடன் ஒலிபெருக்கி மூலம் டெங்கு தொடர்பான விழிப்புணர்வு சம்பந்தமாக பொது அறிவித்தலும் விடுக்கப்பட்டுள்ளது.

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைச் சூழலில் அடிக்கடி புகையூட்டல் இடம் பெறுவதும் குறிப்பிடத்தக்கது. (ம-36)

# யாழ். நகரில் சோலைவரி அதிகரிப்புக்கு கடும் எதிர்ப்பு

கடந்த வருடங்களைவிட அதிகரித்த சோலைவரி விதிப்பை 2012இல் யாழ். மாநகர சபை மேற்கொள்ளவுள்ளதாக சபையின் எதிர்க்கட்சி குற்றஞ்சாட்டியுள்ளது.

எதுவித புதிய சேவைகளோ அல்லது நடைமுறைப்படுத்தப்படும் சேவைகளில் முன்னேற்றத்தையோ செய்யாத நிலையில் இந்த சோலைவரி அதிகரிப்பை சபை மேற்கொள்ள தீர்மானித்திருக்கிறது எனவும் எதிர்க்கட்சி மேலும் தெரிவித்துள்ளது.

2012 ஆம் ஆண்டுக்கான உத்தேச வருமான வரவு செலவு திட்டத்தின் சோலைவரி அதிகரிப்புத் தொடர்பாக எதிர்க்கட்சியினர் தனது அதிருப்தியை தெரிவித்து அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளனர்.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

2010 ஆம் ஆண்டின் வருமான மதிப்பீட்டிலும் பார்க்க 2011 ஆம் ஆண்டுக்கான வருமான மதிப்பீடு 3,542,800 ரூபா கூடுதலாகவும் 2012 ஆம் ஆண்டுக்கான மதிப்பீடு 3,047,000 ரூபாவுக்கு கூடுதலாகவும் உள்ளது. வரவு செலவுத்திட்டம் அங்கீகரிக்கப்படாத நிலையில் 2011 ஆம் ஆண்டில் வருடாந்த பெறுமதியில் 12 வீதமாக இருந்த சோலைவரி விகிதம் 18 வீத மாக 2012 இல் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிவித்தல் 2012 ஆம் ஆண்டுக்கான சோலை வரியாக வரியிறுப்பாளர் களுக்கு அறிவிக்கப்பட்டு வருகிறது. மாகாண உள்ளூராட்சி அமைச் சரின் அங்கீகாரம் இதற்காகப் பெறப்படவில்லை. அத்துடன் இந்த விடயம் பொது மக்களின்கவனத்துக்குகொண்டுவரப் படவில்லை.

எனவே மாநகரசபை சட்டளைச் சட்டத்துக்கு முற்றிலும் முரணாக அதிகரித்த வரிவிதிப்பை இரத்துச் செய்யவேண்டும். அதற்குப் பதிலாக முன்பிருந்த 12 வீத வரி விதிப்பை நடைமுறைப்படுத்தவேண்டும்.

விதிகளுக்கு புறம்பாக மேலதிகமாக நியமிக்கப்பட்டுள்ள அமைய மற்றும் தற்காலிக தொழிலாளர்கள் 430 பேருக்கும் சம்பளம் வழங்குவதற்கான செலவுகளை யாழ்ப்பாண வரியிறுப்பாளர்கள் மீது சுமத்தப்படுவதனை ஏற்க முடியாது- என குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த அறிக்கையில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் 6பேர் கையொப்பமிட்டுள்ளனர். (ஙு-14)

# தனியார் வகுப்புக்களை குறைத்து அறநெறி வகுப்பை நடத்த உதவுங்கள்

**நல்லூர் பிரதேச இந்து ஆலயங்களின் நலநோம்பு அமைப்பு கோரிக்கை**

அறநெறிப் பாடசாலைகள் இயங்கக் கூடியதாக நண்பகலுக்குப் பின்னர் தனியார் கல்வி நிலையங்களைக் குறைக்க கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தரம் பத்துக்குக் கீழ் உள்ள பிள்ளைகளுக்கான தனியார் கல்வி நிலைய வகுப்புகளை இவ்வாறு நிறுத்த உதவுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கேட்டுக் கொள்வதென நல்லூர் பிரதேச இந்து ஆலயங்களின் நலநோம்பு அமைப்புத் தீர்மானித்துள்ளது.

நல்லூர் பிரதேச உதவி பிரதேச செயலாளர் ஆ.சோதிநாதன் தலைமையில் நல்லூர் பிரதேச செயலக மண்டபத்தில் இந்த அமைப்பின் கூட்டம் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் தனியார் கல்வி நிலையங்கள் காரணமாக பிள்ளைகள் அறநெறிப் பாடசாலைக்கு வரமுடியாதிருப்பதாகவும் இதனால் பிள்ளைகள் வரவு குறைவாக உள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டது.

அத்துடன் கலாசார சீர்கேடுகளைக் கட்டுப்படுத்துவதற்கு பிள்ளைகளுக்கு சமய அறிவு ஊட்டவும் பிரசங்கங்கள் நற்சிந்தனைகள் ஊடாக மாணவர்களுக்கு இவற்றைப் புகட்டவும் முடியாதுள்ளதாகவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இந்நிலையில் தனியார் கல்வி நிலையங்களை குறிப்பிட்ட நேரத்தின் பின் நிறுத்தி அவர்களை அறநெறிப் பாடசாலைக்குச் செல்லக் கூடியதான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். ஆலய நிர்வாகத்தினர் ஆலங்களின் சொத்துக்களைப் பாதுகாத்து உதவவும் அடுத்த நிர்வாகத்திடம் கையளிக்கவும் இவ்வாறான செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டியது மிகவும் அவசியம் என்றும் இந்தக் கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டது. (ம-7)

## குற்றச்செய்திகள்

யாழ்ப்பாணம், டிசெ.15

டெங்கு நுளம்பு பெருகும் வகையில் கழிவுப் பொருள்களை அகற்றாமல் வைத்திருந்த குற்றத்துக்காக யாழ். நகரப் பகுதியைச் சேர்ந்த 4 நபர்களைத் தலா ஆயிரம் ரூபா தண்டப்பணம் செலுத்துமாறு நீதிவான் நீதிமன்றம் நேற்று முன்தினம் உத்தரவிட்டுள்ளது.

யாழ்ப்பாணப் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட நபர்கள் செவ்வாய்க்கிழமை நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட போதே இந்த அபராதம் விதிக்கப்பட்டது. (ஙு-14)

* * *

யாழ்ப்பாயம், டிசெ.15

சட்டவிரோதமாக மின்சாரம் பெற்ற குற்றத்துக்காக குருநகரைச் சேர்ந்த 2 பேரைத் தலா 10 ஆயிரம் ரூபா தண் டப்பணம் செலுத்துமாறு நீதி வான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சட்டவிரோதமான முறையில் மின்சாரம் பெற்ற இந்த இரண்டு பேரையும் யாழ்ப்பாணம் பொலிஸார் செவ்வாய்க்கிழமை நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தியபோது வழக்கை விசாரித்த நீதிவான் நீதிமன்ற நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராஜா இவ்வாறு தண்டப் பணத்தைச் செலுத்துமாறு உத்தரவிட்டார். (ஙு- 14)

* * *

உடல் நலத்துக்குக் கேடு விளைவிக்கும் வகையில் உணவுப் பண்டங்களைத் தயாரித்த குற்றத்துக்காக உரும்பிராயைச் சேர்ந்த இரண்டு பேருக்குத் தலா 3 ஆயிரம் ரூபா வீதம் நீதிவான் நீதிமன்றம் அபராதம் விதித்தது.

உடல் நலத்துக்கு ஒவ்வாத வகையில் உணவுப் பண்டங்களைத் தயாரித்தார்கள் என்ற அடிப்படையில் கோப்பாய்ப் பகுதிக்குரிய பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களால் இந்த வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

வழக்கை விசாரித்த நீதிவான் நீதிமன்ற நீதிவான் ஏ.ஏ. ஆனந்தராஜா குறித்த இரண்டு பேரையும் தலா 3 ஆயிரம் ரூபா தண்டப்பணம் செலுத்துமாறு உத்தரவிட்டார். (ஙு-14)

* * *

யாழ்ப்பாணம், டிசெ.15

உரிய அனுமதிப் பத்திரமின்றி சட்டவிரோத மதுபானம் விற்பனை செய்த நபர் ஒருவர் யாழ்ப்பாணப் பொலிஸாரால் நீதிவான் நீதிமன்றில் நேற்று முன்தினம் ஆஜர்படுத்தப்பட்டார்.

அனுமதிப்பத்திரமின்றி 150 மில்லிலீற்றர் மதுபானத்தை விற்பனை செய்தார் என்ற குற்றச்சாட்டின் பிரகாரமே யாழ்ப்பாணம் பொலிஸாரால் குறித்த நபர் மீது வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

இரண்டு தடவைகள் அனுமதிப் பத்திரமின்றி மதுபானம் விற்பனை செய்தமை தொடர்பாக இவர் மீது ஏற்கனவே நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டிருந்தது. இந்த நிலையில் மூன்றாவது தடவையும் இந்த நபர் மீது வழக்குத் தொடரப்பட்டது.

வழக்கை விசாரித்த நீதிமன்ற நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராஜா 50 ஆயிரம் ரூபாவை தண்டப் பணமாகச் செலுத்துமாறு சந்தேகநபருக்கு உத்தரவிட்டுள்ளார். (ஙு-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மழையால் ஏற்படும் விபத்துகளை தவிர்ப்பதற்கு விரைவில் நடவடிக்கை

## அரச அதிபர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.15
மழை காரணமாக ஏற்படும் வீதி விபத்துக்களைத் தடுப்பதற்கு விரைவில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளது என்று யாழ். மாவட்ட அரச அதிபர் திருமதி. இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

வீதி விபத்துக்களை கட்டுப்படுத்தும் முகமாக யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று மாலை இடம்பெற்ற அவசர கலந்துரையாடலின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், செவ்வாய்க்கிழமை வடமராட்சியில் விபத்து நடந்த இடத்தை நேரடியாகச் சென்று பார்வையிட்டேன்.

வீதியின் கரையிலிருந்த பனை மரத்தின் மீது வாகனம் மோதியதால் தான் விபத்துச் சம்பவம் நேர்ந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

எனவே வீதியின் இரு மருங்கிலும் தேவையற்ற விதத்தில் இருக்கின்ற மரங்களையும், மரக்கிளைகளையும் அகற்றும் பணிகளை உடனடியாக ஆரம்பிக்க வேண்டும். அத்துடன் மின்சார சபையின் மின் கம்பங்களும் உரிய முறையில் இருக்க வேண்டும்.

மக்களுக்கு ஆபத்தை விளைவிக்கும் வகையில் வீதியில் எதுவுமில்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அத்துடன் வீதித் திருப்பங்களில் உள்ள விளம்பரப் பலகைகளும் ஒருவகையில் விபத்துக்குக் காரணமாகின்றன. எனவே அவற்றை அகற்றுவது தொடர்பில் உள்ளூராட்சி மன்றங்களுடன் இணைந்து நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.- என்றார். (ந-15)

# பிரதான வீதிகள் மோசமாகச் சேதம் பெரும் அச்சத்தில் தொடரும் பயணம்

யாழ்ப்பாணம், டிசெ.15
கட்டைக்காடு, நாகர் கோயில் மற்றும் மருதங்கேணி - பருத்தித்துறை பிரதான வீதி என்பன பொதுமக்கள் பாவனைக்கு உதவாத நிலையில் காணப்படுவதாகப் பொது மக்கள் குற்றஞ்சாட்டி வருகின்றனர்.

வடமராட்சி கிழக்கு, கட்டைக்காடு, நாகர்கோயில் போன்ற பகுதிகளில் உள்ள வீதிகளும் பருத்தித்துறையில் இருந்து மருதங்கேணிக்குச் செல்லும் பிரதான வீதியின் பெருமளவு பகுதிகளும் பொது மக்கள் பாவனைக்கு உதவாத நிலையில் மோசமாகச் சேதமடைந்துள்ளன.

தற்காலிகமாக மண்ணால் போடப்பட்ட மருதங்கேணி பருத்தித்துறை பிரதான வீதி நாகர்கோயிலுக்கு அப்பால் மிகவும் மோசமான நிலையில் குன்றும் குழியுமாகக் காணப்படுகின்றது.

நாகர்கோயில் பகுதியில் உள்ள மதகு இரும்புத் தகடுகளை ஒட்ட வைத்து போடப்பட்டுள்ளதால் இந்தப் பகுதி மதகைத் தாண்டிச் செல்லும் வாகனங்கள் அச்சத்தின் மத்தியிலேயே பயணித்து வருகின்றன.

இதேவேளை, கட்டைக்காடு செல்லும் மதகுகள் சேதமடைந்துள்ளதால் மழை காலங்களில் வீதியை வெள்ளம் மேவிப் பாய்ந்து செல்வதால் பொது மக்களின் போக்குவரத்துச் செய்யவதில் இடர்களை அனுபவித்து வருவதாக விசனம் தெரிவிக்கப்படுகின்றது. (ம-319)

# 'மறைகாத்த வீரன்' நூல் வெளியீடு

கொழும்புத்துறை, டிச.15
பாஷையூரைச் சேர்ந்த கலாபூசணம் அ.பாலதாஸ் எழுதிய மறை காத்த வீரன் நாட்டுக் கூத்து நூல் வெளியீடு கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை பிரதமவிருந்தினராக கலந்துகொண்டு நூலை வெளியிட்டு வைத்தார்.

யாழ். மறைக்கல்வி நடுநிலைய மண்டபத்தில் யாழ். மறை மாவட்ட பொது நிலையினர் அமைப்பின் தலைவர் இ.அலெக்ஸ் அமலராட்ணம் தலைமையில் இடம்பெற்ற வெளியீட்டு நிகழ்வில் திருமறைக் கலாமன்ற பிரதி இயக்குனர் யோன்சன் ராஜ்குமார் ஆசியுரையையும், யாழ். பல் கலைக்கழக கிறிஸ்தவத்துறை பேராசிரியர் ஞா.பிலேந்திரன் அடிகள் நயப்புரையையும் வழங்கினர்.

யோசப் வாஸ் அடிகளா ரின் இலங்கை மறப் பணியின் வரலாற்றைக் கூறும் நூலின் முதற் பிரதியை ஆயர் வெளியிட்டு வைக்க திருமதி யோசேப்பின் ஆசைப்பிள்ளை பெற்றுக் கொண்டார்.

பொதுநிலையினர் கழகத்தால் நூலாசிரியருக்கு பொன்னாடை போர்த்தி வேத கலா வித்தகர் என்னும் பட்டமும் வழங்கப்பட்டது. (ம-135)



யாழ். இந்துக் கல்லூரியின் 'இந்து இளைஞன்' நூல் வெளியீட்டு விழா குமாரசாமி மண்டபத்தில் கல்லூரி அதிபர் வீ.கணேசராசா தலைமையில் அண்மையில் இடம்பெற்றது. அந்த நிகழ்வில் முதற்பிரதியை செஞ்சொற் செல்வர் ஆறுதிருமுருகன், கல்லூரி அதிபர் ஆகியோர் வெளியிட்டு வைக்க தேசபந்து, க.சிவபாலன் பெற்றுக் கொள்கிறார். (ம-311)

# தெல்லிப்பழை ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெறுவோர் அதிகரிப்பு

அளவெட்டி டிசெ.15
தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெறவரும் நோயாளிகள் தொகை அதிகரித்துக் காணப்படுகிறது என்று தெரிவிக்கப்படுகின்றது.

வெளிநோயாளர் பிரிவிலும் சரி விடுதிகளில் தங்கிச் சிகிச்சை பெறும் நோயாளிகளும் பெரும் எண்ணிக்கையானோர் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

தற்போதைய காலநிலை காரணமாக காய்ச்சல் நோயாளிகளே அதிகமாக சிகிச்சைக்கு வருகிறார்கள்.

இவர்களில் டெங்கு, நெருப்புக் காய்ச்சல் நோயாளிகளும் இனங்காணப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் விடுதியில் தங்கிச் சிகிச்சை பெறும் நோயாளிகள் இடம் போதாமையால் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர் என்று விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பாக வைத்தியசாலை அத்தியட்சகர் தெரிவித்ததாவது:

இந்தக் கஷ்ரம் புதிய வருடத்துடன் நீங்கிவிடும். சகல வசதியுடன் புதிய இடத்தில் நோயாளர்களுக்கு சேவை கிடைக்கும்.- என்றார் (ம-86-36)

# நவீன மயமாகவுள்ள முற்றவெளி முதற்கட்டப் பணிகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், டிசெ.15
யாழ். முற்றவெளிப் பகுதியை நவீன முறையில் புனர்நிர்மாணம் செய்வதற்கான முதற்கட்டப் பணிகள் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டன.

சுற்றுலாப் பயணிகளின் பொழுது போக்கு இடமாக இந்தப் பகுதி புனரமைத்து அழகுபடுத்தப்படவுள்ளது.

அரச திணைக்களங்களின் உதவியுடன் இராணுவத்தினர் இந்த பகுதியை சிரமதானம் மூலம் துப்புரவு செய்யும் பணியில் ஈடுபட்டனர்.

வீதி அபிவிருத்தி அதிகார சபை, நகர அபிவிருத்தி அதிகாரசபை, யாழ்.மாநகர சபை, தொல்லியில் திணைக்களம் போன்றவற்றின் அனுசரணையுடன் இந்த புனர்நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

நூறுக்கும் மேற்பட்ட இராணுவத்தினர் இந்த சிரமதானப் பணியில் ஈடுபட்டனர்.

இந்தப் பகுதியில் காணப்படும் மண்மேடுகள் கனரக இயந்திரம் மூலம் அகற்றப்பட்டு வெள்ளம் தேங்கியிருக்கும் பகுதிகளில் கொட்டப்பட்டு வருகின்றன. நேற்றைய ஆரம்ப நிகழ்வில் சம்பந்தப்பட்ட திணைக்களங்களின் தலைவர்களும் கலந்து கொண்டனர். (ம-26)

# சேதமடைந்த வீதிகளைப் பூசி மெழுக ஒருவாறு வந்து சேர்ந்தது தார்க் கலவை

யாழ்ப்பாணம், டிசெ.15
தற்போது பெய்துவரும் மழையால் நொந்து நூலாகிப் போயுள்ள வீதிகளைப் பூசி மெழுக தார்க் கலவை ஒருவாறு எடுத்து வரப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இரண்டு கனரக வாகனங்களில் இந்தத் தார்க் கலவை எடுத்து வரப்பட்டுள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்தத் தார்க் கலவை மூலம் வீதிகளில் ஏற்பட்டுள்ள உடைவுகளைத் தற்காலிகமாக இட்டு நிரப்பப்படவுள்ளதாகவும் இந்த வைத்தியம் உடனடியாக ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்.சிறைச்சாலைக்கு முன்பாக பிரதான வீதியில் ஏற்பட்ட பெரும் உடைவுக்கு நேற்றுமுன்தினம் மழைக்கும் மத்தியிலும் வைத்தியம் இடம்பெற்றுள்ளது.

இதேவேளை, யாழ். குடாநாட்டில் சேதமடைந்துள்ள பல்வேறு பிரதான வீதிகளையும் பூசி மெழுகும் பணி விரைவில் இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-26)

# உபகரணங்கள் வழங்கல்

சாவகச்சேரி, டிசெ.15
வறுமைக் கோட்டுக்குட்பட்ட குடும்பங்களுக்கு நெல் அவிக்கும் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

தென்மராட்சி கோவிலாக் கண்டி, எழுதுமட்டுவாழ் பகுதிகளைச் சேர்ந்த தெரிவு செய்யப்பட்ட வறுமைக் கோட்டுக் குட்பட்ட பெண்களுக்கும் வடமராட்சி கப்பூது கிராமத்தைச் சேர்ந்த வறுமைக்கோட்டுக் குட்பட்ட பெண்களுக்கும் இவை வழங்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அனுராதபுரம் நெல் சந்தைப்படுத்தும் சபையால் விவசாய சம்மேளனங்கள் ஊடாக இவை வழங்கப்பட்டதாக கோவிலாக் கண்டி விவசாய சம்மேளன தலைவர் தெரிவித்துள்ளார். (ம-131)

# அபிவிருத்தி செய்யப்படும் 'கோப் சிற்றி'கள்

யாழ்ப்பாணம், டிசெ.15
யாழ். குடாநாட்டில் உள்ள 'கோப் சிற்றி' விற்பனை நிலையங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டு வருவதாக கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே.அருந்தவநாதன் தெரிவித்தார்.

இது பற்றி மேலும் தெரிவித்ததாவது:

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களால் திறந்து வைக்கப்பட்ட பெரும்பாலான 'கோப் சிற்றி' களில் சலகவிதமான பொருள்கள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளதோடு அதன் விற்பனையும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

கிராம மக்களின் வசதி கருதி திறந்து வைக்கப்பட்ட மினி 'கோப் சிற்றி'க்கள் கூட மிகவும் சிறந்த முறையில் நடத்தப்பட்டு வருகின்றன.

இந்த 'கோப் சிற்றி'களின் அபிவிருத்திக்கு அடுத்த ஆண்டுக்குரிய நிதி இதுவரை ஒதுக்கீடு செய்யப்படவில்லை. [illegible] 'கோப் சிற்றி' களுக்கு வருடம் தோறும் அரசால் நிதி ஒதுக்கப்பட்டு வந்தது.

இதேவேளை, குடாநாட்டில் உள்ள பெரும்பாலான சங்கங்கள் தமது 'கோப் சிற்றி'களை அபிவிருத்தி செய்து வருவதோடு புதிய விற்பனை நிலையங்களையும் திறந்து வருகின்றன.

ஒரு சில பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் இந்த விற்பனை நிலையம் நட்டத்தில் செயற்பட்டு வருவதை காரணம் காட்டி அவற்றை இழுத்து மூடியும் வருகின்றன.

இந்த 'கோப் சிற்றி'களை சங் கங்கள் கூடுதலாக கிராமப் புறங்களிலே திறந்து வைக்க வேண்டும்.

இவ்வாறு கிராமப் புறங்களில் திறப்பதன் மூலம் அந்தப் பிரதேச மக்கள் பெரிதும் நன்மையடைவார்கள். 'கோப் சிற்றி'களை மூடுவது என்றால் எம்மிடம் அனுமதி பெற்றே அவற்றை சங்கங்கள் மூட வேண்டும்.- என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம-26)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வேலை வாய்ப்பு-பார்மசி

454, ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள றோயல் மெடிக்கல் சென்ரருக்கு வேலையாள்கள் தேவை.
16.12.2011 மு.ப. 10 மணிக்கு நேரில் வரவும்.
தொ.பே. இல:- **0213202300**

## மாநகரசபை யாழ்ப்பாணம்

01.01.2012 முதல் 31.12.2012 வரை இதன் கீழ்
அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள சந்தைகள், இறைச்சிக்கடைகள்
என்பனவற்றை குத்தகைக்கு விடுவதற்கான மீள் கேள்வி அறிவித்தல்

கேள்விப்படிவக் கட்டணம் - ரூபா 500.00 (VAT,NBT தவிர)
கேள்விப்படிவம் விநியோகிக்கும் திகதி - 19.12.2011
கேள்விப்படிவம்விநியோகிக்கும் கடைசித் திகதி- 23.12.2011 மு.ப. 10 மணிவரை
கேள்விப்படிவம்ஏற்றுக்கொள்ளும் திகதி - 23.12.2011 ந.ப. 12 மணிவரை
கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதி - 23.12.2011 பி.ப. 2.30 மணி

### கேள்வி அறிவித்தல் அட்டவணை

| தொ இல | குத்தகை விவரங்கள் | கடை இல | கேள்வி வைப்புப்பணம் (மீளளிக்கக் கூடியது) | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த கேள் வித்தொகை (12%VAT, 3% NBT தவிர) |
|---|---|---|---|---|
| 1 | பண்ணை மீன் சந்தை | - | 10,000.00 | 2,791,960.00 |
| 2 | பெரியகடை மரக்கறிச்சந்தை | - | 10,000.00 | 1,430,800.00 |
| 3 | புங்கன்குளம் சந்தை | - | 2,000.00 | 11,500.00 |
| 4 | அரியாலை மீன் சந்தை | - | 1,000.00 | 50,080.00 |
| 5 | பண்ணை மாட்டிறைச்சிக்கடை | 9 | 5,000.00 | 51,975.00 |
| 6 | பண்ணை மாட்டிறைச்சிக்கடை | 10 | 5,000.00 | 51,975.00 |
| 7 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | 3 | 5,000.00 | 97,020.00 |
| 8 | செங்குந்தா ஆட்டிறைச்சிக்கடை | 2 | 5,000.00 | 145,530.00 |
| 9 | அரியாலை மாட்டிறைச்சிக்கடை | - | 5,000.00 | 225,225.00 |

மாநகர ஆணையாளர்,
மாநகர சபை, யாழ்ப்பாணம்.
(C/6893) (6,10)

## சட்டம், ஒழுங்கை நிலைநாட்ட தம்புள்ளயில் இராணுவத்தினர்

கொழும்பு, டிசெ. 15
தம்புள்ளயில் சட்டம், ஒழுங்கை நிலைநாட்டுவதற்கு பொலிஸாருக்கு உதவியாக சுமார் 225 இராணுவத்தினர் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் நிஹால் ஹப்பு ஆராச்சி தெரிவித்தார்.

நாவுல விசேட படைத் தளத்தைச் சேர்ந்த 75 சிப்பாய்களும் கெக்கிராவை படைத் தளத்தைச் சேர்ந்த 100 சிப்பாய்களும் மாத்தளை படைத் தளத்தைச் சேர்ந்த 50 சிப்பாய்களும் இப்பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என அவர் தெரிவித்தார்.

இதேவேளை, பண்டாரவளையில்சட்டம்ஒழுங்கை நிலைநாட்டுவதற்காக 125 சிப்பாய்கள் அனுப்பப்பட்டுள்ளனர் எனவும் அவர் தெரிவித்தார்.

## வீட்டுடன் காணி விற்பனைக்கு உண்டு

யாழ். மாநகர சபை எல்லைக்குள் நல்லூர் பிரதேச செயலக பிரிவில் 30/2, கனகரட்ணம் வீதி, அரியாலையில் 03 பரப்புக் காணி வீட்டுடன் விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு:- **0777159463**

## கண்ணீர் அஞ்சலி

*யாழ். போதனா வைத்தியசாலையில் தாதிய உத்தியோகத்தராக கடமைபுரியும் திருமதி இந்திராணி மயில்வாகனம் அவர்களின்*
*அன்புத் தந்தையார்*
**சுந்தரம் இராமசாமி**
*அவர்கள் காலமானதையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*
தாதியர் நலன்புரி கூட்டுறவுச்சங்கம்

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு
17 - 03 - 1921



இறப்பு
15 - 12 - 2009

### திருமதி நாகநாதன் மனோன்மணி அம்மா

எமக்கு உயிர் கொடுத்து - இந்த
உலகத்தை காட்டிய அன்னையே...
நாம்மட்டும் வாழ்கிறோம் இவ்வுலகில் - நீ
மட்டும் எமை மறந்து விண்ணுலகம் சென்றாயோ...
இந்த மண்ணை விட்டு உங்கள் உடல்
மட்டும் தான் சென்றதம்மா... உங்கள்
ஆத்மா எங்களுடன் வாழ்கிறதம்மா...
"அம்மா என்று தினம் அழைக்கும் - எங்கள்
பாசத்தின் குரல் கேட்கிறதா... அம்மா!
நாம் இவ்வுலகில் வாழும்வரை
நீயும் வாழ்வாயம்மா..."
மீண்டும் உன் மடியில் தவழ...
எமக்கொரு வாய்ப்புக் கொடம்மா...

மில்லேன், பிரம்படி,
கொக்குவில்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(11636) (6,10)

## டுபாய் - சுப்பர் மார்க்கட்டில் வேலைவாய்ப்பு

| | தொகை | சம்பளம் |
|---|---|---|
| சுத்திகரிப்பாளர்கள் (CLEANERS) | 11 | Rs. 27,000/- |
| பொருட்கள் ஏற்றி இறக்குபவர்கள் (LOADERS) | 04 | Rs. 27,000/- |
| மரக்கறி பொதி செய்பவர்கள் (பெண்கள்) (VEGETABLE PACKER) | 24 | Rs. 27,000/- |

★ உணவுக்கான கொடுப்பனவு சம்பளத்துடன சேர்க்கப்பட்டுள்ளது.
★ தங்குமிடவசதி. போக்குவரத்து. வைத்திய பரிசோதனை இலவசம்.
★ இரண்டு வருட ஒப்பந்தம்.
★ வேலை செய்யும் நேரம், ஒரு நாளைக்கு 8 மணி நேரம் வாரத்திற்கு 6 நாட்கள்.
★ வயது:- 20 - 30 வரை

மற்றைய விடயங்கள் ஐக்கிய அரபு நாட்டின் சட்டத்திட்டங்களுக்கு அமைய.
உங்களது முழு புகைப்படம், கடவுச்சீட்டுடன் எங்களை தொடர்பு கொள்ளவும்.

ஹேவாஸ் அசோசியேட்ஸ் (பிரைவேட்) லிமிடெட்
05, பிக்கரிங்ஸ் வீதி, கொழும்பு - 13. (ஹெட்டியாவத்தை சந்தி)
மின் அஞ்சல்: info@hewas.lk
தொலைபேசி: 011 4610680/1
Advt: 750 / 02 / 11

## விற்பனைக்கு

60 அடி X 16 அடி தகர செட், 10" தச்சுப்பட்டடை விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு:- **0771016392**

## பணியாளர் தேவை

1. கணினி இயக்குநர்
2. பண வசூலிப்பாளர்
3. லொறிச் சாரதி

நேர்முகப்பரீட்சை நாளை 16.12.2011 வெள்ளிக் கிழமை மு.ப. 9 - 12 மணிவரை இல.15, 4 ஆம் ஒழுங்கை, பிறவுன் வீதி, யாழ்ப்பாணத்தில் நடைபெறும். கணினி இயக்குநர் பதவிக்கு Accounting Pakage பயிற்சி முடித்தவர்கள் அவசியம்.
தொடர்புகளுக்கு: **021 4921095**

## கணினி திருத்தம்

உங்கள் கணினிகள் பழுதடைந்து விட்டனவா?
உடனடியாக உங்களது வீடு களுக்கே வந்து உரிய முறையில் திருத்தித் தருகின்றோம்.
அழையுங்கள்:- **0779086737**
(Computer Repair) (11669)(2-6-9)

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



### செல்லையா கனகலிங்கம்

திதி:- அபரபக்க பஞ்சமி
தோற்றம்
10.06.1945
உதிர்வு
17.11.2008

*ஆண்டுகள் மூன்று ஆயினவே - ஆயினும்*
*ஆறவில்லை எம் துயர்*
*இன்முகமாய் வாழ்ந்திருந்தீர்*
*இடையினிலே பிரிந்து விட்டீர்*
ஈசன் அடிசேர்ந்து ஈடேறி வாழப் பிரார்த்திக்கின்றோம்.

அரசடி அம்மன் வீதி,
திருநெல்வேலி வடக்கு,
திருநெல்வேலி.
\- குடும்பத்தினர்.

(சி/6557)(2-6-9)

## வேலணை பிரதேச சபையின் முக்கிய அறிவித்தல்

(கட்டாக்காலிகள் தொடர்பானது)

1987 ஆம் ஆண்டு15 ஆம் இலக்கப் பிரதேச சபை கட்டளைச் சட்டத்தின் 66 ஆவது பிரிவின் பிரகாரம் வேலணை பிரதேச சபையின் நிர்வாக எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் உரிமை கோரப்படாத கட்டாக்காலிகள் பிரதேச சபையினரினால் பிடிக்கப்பட்டு சட்ட நடவடிக்கை எடுக்கப்பட இருப்பதுடன் இந்த அறிவித்தல் வழங்கப்பட்ட திகதியிலிருந்து 7 (ஏழு) நாள்களின் பின் முறையாக அமுல்படுத்தப்படும் என்பதனை இத்தால் தெரிவித்துக் கொள்கின்றேன்.

(சி/6892)(269) சி.சிவராசா, தவிசாளர், வேலணை பிரதேச சபை, வேலணை.

## சாவகச்சேரி நகராட்சி மன்றம்

### 2012 ஆம் ஆண்டுக்கான

## மீள் கேள்வி அறிவித்தல்

1. கேள்விப்பத்திரம் வழங்கும் கடைசித் திகதி : 19.12.2011 நண்பகல் 12 மணி வரை
2. கேள்விப் பத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும் திகதி : 20.12.2011 மு.ப. 10 மணி வரை
3. கேள்வி திறக்கப்படும் திகதி : 20.12.2011 மு.ப. 11 மணி
4. கேள்வி தொகையின் 2/3 பகுதியை செலுத்தி ஒப்பந்தம் செய்ய வேண்டிய இறுதித் திகதி : 23.12.2011

**2012 ஆம் ஆண்டு ஆட்டிறைச்சிக் கடைகளுக்கான குத்தகை அட்டவணை**

| இல | குத்தகை விவரம் | ஆகக் குறைந்த கேள்வித்தொகை (இதர வரிகள் தவிர) | கேள்வி வைப்புப் பணம் (மீளளிக்கக் கூடியது) | கேள்விப் படிவக் கட்டணம் (மீளளிக்க முடியாதது) (இதர வரிகள் தவிர) |
|---|---|---|---|---|
| 01 | ஆட்டிறைச்சிக் கடை (01) | 605,000.00 | 6050.00 | 1000.00 |
| 02 | ஆட்டிறைச்சிக் கடை (02) | 605,000.00 | 6050.00 | 1000.00 |

குறிப்பு: மேலதிக விவரங்களை 10.11.2011 ஆம் திகதிய உதயன் பத்திரிகையில் பார்வையிடவும்

நகராட்சி மன்றம்,
சாவகச்சேரி.
14.12.2011.

இ. தேவசகாயம்பிள்ளை,
தவிசாளர்,
நகராட்சி மன்றம், சாவகச்சேரி

(C/2827)(6,8,9)

## நுணாவிற்குளம் கண்ணகை அம்மன் தேவஸ்தானம் பரிபாலனசபை

### அடியார்களுக்கான முக்கிய அறிவித்தல்

எமது ஆலய திருப்பணி வேலைகளுக்கோ அல்லது ஆலயம் சார்பான வேறு தேவைகளுக்காகவோ நிதி செலுத்த விரும்புபவர்கள் பரிபாலனசபை தலைவர் அல்லது செயலாளர் அல்லது பொருளாளருடன் தொடர்பு கொள்ளவும், அல்லது இலங்கை வங்கி, சாவகச்சேரி கிளை, கணக்கு இலக்கம் 7779653 க்கு வைப்பிலிடவும். இவை தவிர்ந்த ஏனைய கொடுப் பனவுகளுக்கு பரிபாலனசபை பொறுப்பினை ஏற்காது என்பதை தெரிவிக்கின்றோம்.

செயலாளர்.
(11683)(6,8,9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின்னியல் ஊடகங்களை கட்டுப்படுத்த புதிய சபை

### அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல தகவல்

கொழும்பு,டிசெ.15
மின்னியல் ஊடகங் களில் சில தேவையற்ற நடவடிக் கைகள் இடம்பெற்று வருவ தால் அதனைக் கட்டுப்படுத்த ஒளிபரப்புக் கட்டுப்பாட்டுச் சபை உருவாக்கப்பட உள் ளதாக ஊடக அமைச்சர் கெஹ லிய ரம்புக்வெல தெரிவித் துள்ளார்.

நாடாளுமன்றத்தில் வரவு - செலவுத் திட்ட மூன்றாம் வாசிப்பு விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள் ளார்.

ஊடக பயிற்சி நிலைய மொன்று அமைக்கப்பட உள்ள தாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர்களுக்கு வாகனக் கொள்வனவு கடன் வழங்கும் வயதெல்லையை குறைக்க நடவடிக்கை எடுக் கப்படும் என்று தெரிவித்துள்ள அமைச்சர், 25 ஆண்டு காலம் சேவையில் ஈடுபட்டவர்களுக்கு 1.2 மில்லியன் வாகனக் கடன் வழங்க வரவு - செலவுத் திட்டத்தில் பரிந்துரை செய் யப்பட்டது. எனினும் தற்போது இந்தச் சேவைக் காலத்தைக் குறைப்பதற்கு உத்தேசிக்கப் பட்டுள்ளது எனவும் அவர் குறிப் பிட்டுள்ளார். (ச)



# பிரச்சினைகளை உக்கிரப்படுத்தி டொலர்களை ஈட்ட சிலர் முயற்சி

### ஜனாதிபதி மஹிந்த குற்றச்சாட்டு

கொழும்பு,டிசெ.15
நாட்டுப் பிரச்சினைகளை உக்கிரப்படுத்தி அதன் மூலம் டொலர்களை ஈட்ட சிலர் முயற்சித்து வருவதாக ஜனாதி பதி மஹிந்த ராஜபக்ஷ குற்றம் சாட்டியுள்ளார்.

அலரி மாளிகையில் நடை பெற்ற மஹாவலி விவசாயி கள் விருது வழங்கும் நிகழ் வில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள் ளார்.

நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
இந்த விடயம் தொடர்பில் மக் கள் விழிப்புணர்வுடன் செயற் பட வேண்டும். வெளிநாடு களில் வாழும் இலங்கையர் களும் இவ்வாறு நாட்டுக்கு எதிராகப் பிரச்சாரம் செய்கின்ற னர்.

தற்போது மக்கள் அச்சமின்றி வாழக்கூடிய ஒரு சூழ்நிலை உருவாக்கப்பட்டுள்ளது- என் றார். (ச)

## நீர்த்தேக்கத்தின் வான்கதவுகள் திறப்பு

தொடர்ச்சியான மழை கார ணமாக அநுராதபுரம், ராஜாங் கனை நீர்தேக்கத்தின் வான் கதவுகள் நான்கு திறக்கப்பட் டுள்ளதாக தெரிவிக்கப்படு கின்றது. ராஜாங்கனை நீர் தேக்கத்தில் இருந்து வெளியே றும் நீர் கலா வாவியில் சேர் வதாக ராஜாங்கனை நீர்தேக் கத்தின் பொறியியலாளர் ஐ. எம்.கல்லி தெரிவித்துள்ளார்.

மழை தொடருமானால் மேலும் சில வான் கதவு களைத் திறக்க வேண்டியுள்ள தால், கலா ஓயாவின் இருபுற மும் வசிக்கும் மக்களை அவதா னத்துடன் இருக்குமாறு அவர் கேட்டுள்ளார். (ச)




'த பிஸ்னஸ் ருடே' சஞ்சிகையின் விருது வழங்கும் நிகழ்வு கொழும்பு சினமன் கிராண்ட் ஹோட்டலில் நடைபெற்றது. இந்நிகழ்வில்பிரதமர் தி.மு.ஜயரட்ன, எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் கலந்துகொண்டனர்.

# விடுதலைப் புலி உறுப்பினர்கள் 14 பேருக்குப் புனர்வாழ்வளிப்பு

### கொழும்பு நீதிவான் நீதிமன்றம் உத்தரவு

கொழும்பு,டிசெ.15
இறுதிக் கட்ட யுத்தத்தில் அரச படைகளிடம் சரணடைந்த விடுதலைப் புலிகள் இயக் கத்தின் 14 உறுப்பினர்களை புனர்வாழ்வுக்கு உட்படுத்து மாறு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் உத்தரவு பிறப் பித்துள்ளது.

இந்த உத்தரவு தீவிரவாத ஒழிப்புப் பிரிவினருக்கு நீதி மன்றத்தால் பிறப்பிக்கப்பட் டுள்ளது.

சரணடைந்த பின் தீவிரவாத ஒழிப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்ட இவர்கள் பூஸா முகாமில் வைத்து விசார ணைக்கு உட்படுத்தப்பட்டு வந்தனர். இவர்கள் விடுத லைப் புலிகள் இயக்கத்தில் ஆயுதப் பயிற்சி பெற்றிருக்கின்ற போதும் கட்டாயத்தின் பேரில் தான் இந்த இயக்கத்தில் இணைத் துக் கொள்ளப்பட்டுள்ளமை விசாரணைகள் மூலம் தெரிய வந்துள்ளதாக பொலிஸார் நீதி மன்றில் அறிக்கை சமர்பித் துள்ளனர்.

அதனால் இவர்களைப் புனர்வாழ்வுக்கு உட்படுத்து மாறு சட்டமா அதிபர் தமக்கு ஆலோசனை வழங்கியுள்ளார் என்று பொலிஸார் தெரிவித் துள்ளனர்.

இந்தக் கருத்துக்களைப் பரி சீலித்த நீதிவான் இந்த 14 பேரையும் வெலிகந்தை புனர் வாழ்வு நிலையத்தில் வைத்து ஒரு வருடம் புனர்வாழ்வளிக் குமாறு உத்தரவிட்டுள்ளார். (ச)

# புறக்கோட்டை சந்தையின் நடவடிக்கை செயலிழந்தது

### வர்த்தக சங்கம் தெரிவிப்பு

கொழும்பு,டிசெ.15
கொழும்பு, புறக்கோட்டை சந்தையின் நடவடிக்கைகள் நேற்று புதன்கிழமையும் செய லிழந்துள்ளதாக பொது வர்த் தக சேவை சங்கம் தெரிவித் துள்ளது.

பிளாஸ்ரிக் பெட்டிகளில் மரக்கறி, பழங்களை இட்டு விநியோகிக்கும் புதிய திட் டத்தை எவரும் ஏற்றுக்கொள்ள வில்லை என்று வர்த்தக சேவை சங்கம் தெரிவித்துள்ளது.

நேற்று தம்புள்ளை பொரு ளாதார மத்திய நிலையத்தின் செயற்பாடுகளும் பூரணமாக இடம்பெறவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

அமைச்சின் தலையீட்டில் குறைப்பாடுகள் இன்றி நாட்டு மக்களுக்கு மரக்கறி விநியோ கிக்க நடவடிக்கை எடுக்கப்பட் டது என்று நுகர்வோர் மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சர் ஜோன்ஸ்டன் பெனாண்டோ தெரிவித்துள் ளார்.

இந்த ஆர்ப்பாட்டங்களின் பின்னால் சூழ்ச்சிகரக் குழு வொன்று இருப்பதாகவும் அவர் கூறினார். (ச)

# அரசுடன் கிரிக்கெட் விளையாடுவோருக்கு தமிழரின் பிரச்சினை எப்படித் தெரியும்?

### கூட்டமைப்பினருடன் சிறிரங்கா வாய்த் தர்க்கம்

கொழும்பு, டிசெ.15
ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிறி ரங்காவுக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கும் இடை யில் நேற்றுமுன்தினம் நாடா ளுமன்றில் கடும் வாய்த்தர்க் கம் ஏற்பட்டது.

இணையதளம் ஒன்று தொடர் பாகவும், கூட்டமைப்பு நாடா ளுமன்ற உறுப்பினர் சுமந்திரன், சபாநாயகர் கிண்ண கிரிக்கெட் போட்டியில் கலந்துகொண்டு விளையாடியமை தொடர்பாக வும் சிறிரங்கா விமர்சித்ததைத் தொடர்ந்தே இந்த வாய்த் தர்க்கம் ஏற்பட்டது.

வரவு-செலவுத் திட்டத்தின் ஊடக அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற் றிய சிறிரங்கா இணையதளங் கள் அரசால் தடைசெய்யப்படு வது பற்றிக் கூறினார்.

'சிறிதரன்' என்ற இணைய தளம் அரசுக்குச் சார்பான, போர் தொடர்பான வீடியோக்களை வெளியிடுவதால் அரசு அதைத் தடைசெய்ய நடவ டிக்கை எடுக்கவில்லை என்று ரங்கா கூறினார்.

அப்போது ஒழுங்குப் பிரச் சினையை எழுப்பிய சுமந்தி ரன், ரங்கா நாடாளுமன்ற உறுப் பினர் சிறிதரனின் பெயரைக் குறிப்பிட்டுள்ளார் என்று கூறி னார்.

''நான் அவரின் பெயரைக் குறிப்பிடவில்லை. இணைய தளம் ஒன்றின் பெயரைத்தான் குறிப்பிட்டேன்'' என்று ரங்கா தெரிவித்தார். (ஓ-சி)

# துமிந்த சில்வாவைக் கைது செய்ய எழுத்து மூல அறிக்கையை சமர்ப்பிக்குக

### இரகசியப் பொலிஸாருக்கு நீதிமன்றம் அறிவுறுத்து

பாரத லக்ஷ்மன் பிரேமச்சந் திரவின் கொலைச் சந்தேகநப ரான நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவை கைது செய்ய எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை கள் குறித்து எழுத்து மூலம் அறிக்கை சமர்பிக்குமாறு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் இரகசியப் பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளது.

பாரத லக்ஷ்மன் பிரேமச்சந் திரவின் கொலை வழக்கு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள் ளப்பட்டபோதே இந்த உத் தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பிடியாணை பிறப்பிக்கப்பட் டுள்ள துமிந்த சில்வாவை கைது செய்வது தொடர்பில் சட்ட மா அதிபரிடம் ஆலோசனை கோரியுள்ளதாக இரகசியப் பொலி ஸார் நேற்றுமுன்தினம் நீதி மன்றத்தில் தெரிவித்துள்ளனர்.

இதுவரை சட்ட மா அதிப ரின் ஆலோசனை தமக்குக் கிடைக்கவில்லை என்று அவர் கள் நீதிமன்றில் சுட்டிக்காட்டி யுள்ளனர்.

நீதிமன்ற உத்தரவைச் செயற் படுத்த சட்ட மா அதிபரின் ஆலோசனையைக் கோரியுள் ளமை தொடர்பில் பாரத லக்ஷ் மன் தரப்பு சட்டத்தரணி இரகசிய பொலிஸா ரிடம் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தியுள் ளார்.

துமிந்த சில்வாவை கைது செய்யுமாறு சர்வதேசப் பொலி ஸாரிடம் பிடியாணை உத்தரவு பிறப்பிக்குமாறு அவர் நீதி மன்றத்தில் கேட்டுக்கொண்டார். சர்வதேச பொலிஸாரிடம் பிடியாணை உத்தரவு பிறப்பிக்க சட்ட மா அதிபர் திணைக்களத் தில் ஏதுவான திட்டங்கள் இருப் பதாக கொழும்பு மேலதிக நீதிவான் பிரசன்ன டி அல்விஸ் தெரிவித்தார். அதனால் துமிந்த சில் வாவைக் கைது செய் வதற்கு எடுக்கப்பட்டுள்ள நட வடிக்கைகள் குறித்து எழுத்து மூலம் எதிர்வரும் 29 ஆம் திகதி அறிக்கை சமர்ப்பிக்குமாறு நீதிவான் இரகசிய பொலி ஸாருக்கு உத்தரவிட்டார். (ச)

## பல்கலை மாணவர் மீது ஆயுததாரிகள் தாக்குதல்

கொழும்பு,டிசெ.15
ருகுணு பல்கலைக்கழக மாணவர்கள் மீது இனந்தெரி யாத ஆயுததாரிகள் குழு வொன்று நடத்திய தாக்குதலில் 9 மாணவர்கள் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள் ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மாணவர்கள் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை தங்களது விடுதிகளை நோக்கி சென்றபோது, அவர்களைத் தாக்கிவிட்டு தப்பிச் சென்றுள் ளதாக மாத்தறை பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள் ளது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரையிறக்கி வைத்திருக்கும் விமானத்தை ஒப்படையுங்கள்

## ஈரானிடம் ஒபாமா வேண்டுகோள்

வாஷிங்டன்,டிசெ.15

ஈரானால் தரையிறக்கப்பட்ட தமது நாட்டு விமானத்தை ஒப்படைக்கும்படி அமெரிக்க அதிபர் ஒபாமா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அமெரிக்க இராணுவத்தைச் சேர்ந்த ஆளில்லா உளவு விமான மொன்று ஈரான் நாட்டு இராணுவத்தினரால் கடந்த 4ஆம் திகதி தரையிறக்கப் பட்டது. அந்த விமானத்தை தங்களிடம் திருப்பித்தர வேண் டும் என ஒபாமா வேண்டு கோள் விடுத்துள்ளார்.

அமெரிக்க நாட்டின் இராணு வத் துறையைச் சேர்ந்த உளவு விமானம் ஆளில்லாமல் இயங்க வல்லது. இந்தவகை விமான மொன்று ஈரான் நாட்டின் மீது பறந்து கொண்டிருந்தபோது ஈரான் நாட்டு இராணுவத் தினரால் தரையிறக்கப்பட்டது.

இந்த நிலையில் அமெரிக்கா சென்றுள்ள ஈராக் பிரதமர் நூரி அல் மாலிகி, அமெரிக்க ஜனா திபதி ஒபாமாவை சந்தித்துப் பேசினார். அதன் பின்னர் இரு வரும் இணைந்து நடத்திய செய்தியாளர்கள் சந்திப்பில் பேசிய அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா:

''ஈரானில் உள்ள அமெரிக்க விமானத்தை எங்களிடம் திருப்பித் தருமாறு கோரி உள் ளோம். அதற்கு ஈரான் என்ன பதில் சொல்லப் போகிறது என்பதை எதிர்பார்த்துள்ளோம்.

''விமானத்தை ஈரான் கைப் பற்றி வைத்துள்ளதால் வருங் காலத்தில் அமெரிக்கப் பாது காப்புக்கு பாதிப்பு வருமா?



என்பதுகுறித்தெல்லாம் விரி வாகப் பதில் அளிக்க முடியா துள்ளது'' என்று தெரிவித்தார்.

இதுகுறித்து அமெரிக்க வெளி விவகாரத்துறை அமைச் சர் ஹிலாரி கிளின்டன் கூறுகை யில்; ''ஈரான் தரையிறக்கி வைத்துள்ள அமெரிக்க விமா னத்தைத் திருப்பித் தருமாறு பல முறை ஈரானிடம் கோரி உள்ளோம்'' என்றார். (ந)

# பள்ளிகளில் சிறை வைக்கப்பட்டிருந்த 50 சிறுவர்கள் பாகிஸ்தானில் மீட்பு

கராச்சி,டிசெ.15

பாகிஸ்தான் பள்ளிகளில் சிறைபிடித்து வைக்கப்பட் டிருந்த 50 சிறுவர்களை அந்த நாட்டுப் பொலிஸார் விடு வித்துள்ளனர்.

இது குறித்து கராச்சி பொலிஸ் அதிகாரி கூறியதாவது;

கராச்சி மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் உள்ள பள்ளிகளில் சிறுவர்கள் சிறை வைக்கப்பட்டிருக்கின்ற னர் என்று தகவல் கிடைத்தது. இதனையடுத்து அந்தப் பகுதி யில் பொலிஸார் அதிரடிச் சோதனை நடத்தினர். சோத னையில் சுமார் 18 வயதுக் குட்பட்ட சிறுவர்கள் சங்கி லியால் கட்டி வைக்கப்பட்டி ருந்ததைக் கண்டறிந்தனர்.

இதனையடுத்து உடன டியாக சிறுவர்கள் விடுவிக்கப் பட்டனர். அந்தப் பள்ளிகளை நடத்தி வந்தோரைக் கைது செய் தனர். எனினும் பள்ளி நிர்வாகி கள் தலைமறைவாகி விட்ட னர்- என்றார்.

இதேவேளை மாணவர் களுக்கு தீவிரவாதம் கற்றுத் தரப் பட்டதா? அல்லது குடி போதையில் சிக்கிய மாணவர் களைத் திருத்துவதற்காக கட் டப்பட்டிருந்தனரா? என விசா ரணை நடத்தப்பட்டு வரு வதாக தெரிவிக்கப்பட்டது. (ந)

# கொலம்பியாவில் நிலச்சரிவு; 18 பேர் இடிபாடுகளில் சிக்கினர்

தென் அமெரிக்க நாடான கொலம்பியாவில் கடந்த சில நாள்களாகப் பெய்த கடும் மழை காரணமாக வடக்குப் பகுதியில் உள்ள லா குரூஸ் நகரில் நேற்று முன்தினம் நிலச்சரிவு ஏற்பட்டது. இதில் மூன்று வீடுகள் மண்ணுக்குள் புதைந்தன. இத னால் அதில் வசித்த 18 பேர் இடிபாடுகளில் சிக்கின்னர்.

அவர்களை மீட்கும் பணி நடந்து வருகிறது. நிலச்சரிவு காரணமாக சாலைகள் துண் டிக்கப்பட்டுள்ளன. கடும் மழை பெய்து வருவதால் மீட்பு பணி களில் சிரமம் ஏற்பட்டுள்ளது.

நிலச்சரிவு அபாயம் இருக் கும் இடங்களில் வீடுகளை விட்டு வெளியேறுமாறு மக்க ளுக்கு அரசு அறிவுறுத்தி உள்ள துடன் அங்கு ஓடும் மயோ ஆற்று வெள்ள எச்சரிக் கையும் விடுக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து ஆற்றின் கரையோரங்களில் வசித்த வர்கள் பாதுகாப்பான இடங் களுக்கு அப்புறப்படுத்தப்பட் டுள்ளனர்.

கடந்த செப்ரெம்பர் மாதம் முதல் நீடித்து வரும் மழைக்குப் பலியானோர் எண்ணிக்கை 144ஆக உயர்ந்துள்ளது, 125 பேர் காயமடைந்துள்ளனர், பலரை காணவில்லை.

5 லட்சத்துக்கும் அதிகமா னவர்கள் பாதிப்புக்கு ஆளாகி உள்ளதாக தன்னார்வ அமைப்பு தெரிவித்துள்ளது.இதேவேளை சரியான முன்னெச்சரிக்கை நட வடிக்கை எதனையும் எடுக்க வில்லை என்று அரசு மீது குற்றச்சாட்டுக்கள் எழுந்துள் ளன. (ந)

# சிரிய வன்முறையில் 5,000 பேர் சாவு

டமாஸ்கஸ்,டிசெ.15

சிரியாவில் அதிபருக்கு எதிராக நடைபெற்று வரும் கலவரத்தில் இதுவரை 5 ஆயி ரத்துக்கும் மேற்பட்ட பொது மக்கள் கொல்லப்பட்டுள்ளனர் என்று ஐக்கிய நாடுகள் சபை அதிர்ச்சித் தகவல் வெளியிட் டுள்ளது.

அதிபர் பஷார் அல்- அசாத் ஆட்சிக்கு எதிராக சிரியாவில் கடந்த 10 மாதங்களாகப் பொது மக்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

போராட்டக்காரர் களை ஒடுக்க ராணுவம் பொது மக் களை கொத்துக் கொத்தாகக் கொன்று குவித்து வருகின்றது என்று குற்றஞ்சாட்டப்படு கிறது.

இந்த நிலையில் ராணுவம் சுட்டத்தில் இதுவரை 5 ஆயிரம் பேர் பலியாகி உள்ளனர் என்று ஐ.நா. சபையின் மனித உரி மைகள் அமைப்புத் தலைவர் நவிபிள்ளை தெரிவித்துள்ளார்.

இதேவேளை கடந்த 10 நாள்களில் மட்டும் 1000க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட் டுள்ளனர் என்றும் தனது அறிக் கையில் குறிப்பிட்டுள்ள அவர் இது குறித்து சர்வதேச குற்ற வியல் நீதிமன்றில் புகார் தெரி விக்கப்படும் என்றும் கூறியுள் ளார். (ந)



அமெரிக்கா,வாஷிங்டனில் அந்நாட்டு அதிபர் ஒபாமாவை (வலது), ஈராக் பிரதமர் நவ்ரி அல்-மாலிகி சந்தித்துப் பேசினர்.

# ஐ.எஸ்.ஐயுடன் தொடர்பா? நிரூபித்தால் அரசியலை விட்டுவிலகுகிறேன்

## பாக். முன்னாள் கிரிக்கெட் வீரர் இம்ரான்கான் தெரிவிப்பு

இஸ்லாமாபாத்,டிசெ.15

பாகிஸ்தானின் உளவு அமைப் பான ஐ.எஸ்.ஐ.க்கும் எனக்கும் தொடர்பு உள்ளதாகக் கூறப் படும் குற்றச்சாட்டு நிரூபிக் கப்பட்டால் அரசியலை விட்டே விலகுகிறேன் என்று இம்ரான் கான் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் முன்னாள் கிரிக்கெட் வீரரும் அரசியல்வாதி யுமான இம்ரான் கானின் கட்சி யான தெஹ்ரிக்- இசுஇன் சாபுக் கும் அந்த நாட்டு உளவு அமைப் பான ஐ.எஸ்ஐ.க்கும் தொடர்பு உள்ளது என்று கூறப்படுகின்றது.

இதை மறுத்துள்ள இம்ரான்கான் குற்றச்சாட்டு நிரூபிக்கப்பிட் டால் அரசியலை விட்டு விடு வதாகத் தெரிவித்துள்ளார்.

கடந்த சில மாதங்களில் இம்ரான் கானின் கட்சி அபார வளர்ச்சி அடைந்துள்ளது. அதி லும் கடந்த ஒக்ரோபர் மாதம் லாகூரில் நடத்தப்பட்ட பேரணிக் குப்பின் அந்தக் கட்சியின் புகழ் எட்டுத் திக்கும் பரவியுள்ளது. பாகிஸ்தானின் உளவு அமைப் பான ஐ.எஸ். ஐ.ன் ஆதரவால் தான் தெஹ்ரிக்- இ-இன்சாப் பெரிய கட்சியாகி யுள்ளது என்ற சந்தேகம் எழுந் துள்ளது. இதனையடுத்தே இம் ராகான் மேற்கண்டவாறு தெரி வித்துள்ளார்.

இதற்கிடையே ஏனைய கட்சி களைச் சேர்ந்த பல தலைவர்கள் இம்ரான் கானின் கட்சியில் சேர்ந்துள்ளனர். இந்நிலையில் அண்மைக் காலமாக இந்தி யாவுடன் நல்லுறவு வைத்துள்ள பாகிஸ்தான் விமானப் படை



யின் முன்னாள் தலைவரும், அரசியல்வாதியுமான அஸ்கர் கான் நேற்றுமுன்தினம் இம் ரான் கட்சியில் சேர்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந)

# அதிவேகமாகக் காரைச் செலுத்திய 62 வயதுப் பெண்ணுக்கு அபராதம்

லண்டன்,டிசெ.15

அதிவேகமாகக் காரைச் செலுத்திய இத்தாலியில் வசித்து வரும் பிரிட்டன் பெண்ணுக்கு அந்நாட்டுப் பொலிஸார் ஒரு லட்சத்து பதினெட்டாயிரம் டொலர் அபராதம் விதித்துள் ளனர்.

பிரிட்டனைச் சேர்ந்த 62 வயதான பெண் தனக்குச் சொந்தமான காரில் பலமுறை பொலிஸ் கண்ணில் மண்ணைத் தூவி அதிவேகமாகச் சென்று வந்தார். தொடர்ந்து அவரை கண்காணித்து வந்த பொலி ஸார் பிடிக்க முடியாமல் திண றினர்.

இதனையடுத்து அந்த பெண் தனது காரை வழக் கமாக நிறுத்தி வைத்திருக்கும் இடத்தில் பொலிஸார் காத் திருந்து காரை எடுப்பதற்காக வந்த அந்தப் பெண்ணை கைது செய்தனர்.

இதைத்தொடர்ந்து அவ ருக்குப் பிரிட்டன் பதிவு செய் யப்பட்ட காரைப் பயன்படுத்தி யதற்காகவும் அதிவேகமாகச் சென்று வந்ததற்காகவும் 1, லட்சத்து 18 ஆயிரம் அமெரிக்க டொலர் அபராதம் விதிக்கப் பட்டது.

கைது செய்யப்படுவதற்கு முன்னர் அந்தப் பெண் போக் குவரத்துக் கட்டுப்படுத்தப் பட்ட வீதியில் அதிவேகமாக 1,500 தடவைகள் சென்று வந் துள்ளார் என்பது குறிப்பிடத் தக்கது. (ந)

# ஆஸ்திரேலியாவில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம்

ஆஸ்திரேலியாவின் தெற்கு பசிபிக் தீவான பப்புவா நியு கினியாவின் கடலோர பகுதி யில் 7.3 ரிச்டர் அளவில் நேற்று நிலநடுக்கம் ஏற்பட்டது.

இந்த நிலநடுக்கத்தால் ஏற் பட்ட பாதிப்புகள் குறித்தும், சேதங்கள் குறித்தும் எந்தத் தக வல்களும் இல்லை. ஆழிப் பேரலை குறித்த எச்சரிக்கையும் இது வரை வெளியிடப்பட வில்லை.

இதேவேளை இந்தோனே சியாவின் மையப் பகுதியில் நேற்றுமுன்தினம் ஏற்பட்ட கடு மையான நிலநடுக்கம் சுமார் 20 வினாடிகள் நீடித்தது. இதில் சேதமும் ஏற்படவில்லை. (ந)

# பெரும் துறைமுக வீதிகள் கனடாவில் ஆக்கிரமிப்பு

ஒட்டாவா,டிசெ.15

கனடாவின் மிகப்பெரிய துறைமுகமான போர்ட் மெட் ரோவிற்கு பொருள்களை ஏற் றிக் கொண்டு செல்லும் வீதி களை மறித்து ஆக்கிரமிப்புப் போராட்டக்காரர்கள் போராட் டம் நடத்தி வருகின்றனர்.

கனடாவில் வேலையில்லா தோர் எண்ணிக்கை அதிகரித்து வருவதால் ஆக்கிரமிப்பு போராட்டக்காரர்கள் மெட்ரோ துறைமுக நிறுவனங்களை எதிர்க்கும் விதமாக அவர் களின் பொருள்கள் துறைமுகத் துக்குப் போய்ச் சேர விடாமல் மறியல் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

இவர்கள் ஆக்கிரமித்துள்ள இந்த வீதிகள் வழியாகத் தின மும் 200 மில்லியன் கனடிய டொலர் மதிப்புடைய பொருள் கள் கொண்டு செல்லப்படு கின்றன.

த்துறைமுகத்துக்கு 160 நிறுவனங்கள் தங்கள் பொருள் களை அனுப்புகின்றன. 75 பில்லியன் கனடிய டொலர் மதிப்புடைய பொருகள் ஏற்று மதியாகின்றன.

இந்த நிறுவன லாபத்தின் அடையாளமாகத் துறைமுகம் விளங்குவதால் துறைமுகத் தைக் குறிவைத்ததாக, போராட் டக் காரர்களின் இணையத் தளம் தகவல் தெரிவிக்கிறது. இந்தப் போராட்டத்துக்கு 'வோல் ஸ்ரீட் ஒன் த வோட்ட போறன்ற்' என்று பெயரிட் டுள்ளனர். (ந)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாகிஸ்தானுக்கான உதவிகளை நிறுத்த அமெரிக்கா நடவடிக்கை

வாஷிங்டன், டிசெ.15

தீவிரவாதிகள் பயன்படுத்தும் வெடிமருந்து பொருள்களை பாகிஸ்தான் தடை செய்யாத வரை அந்நாட்டுக்கு அளிக்கப்படும் இராணுவ உதவி நிறுத்தும்படி அமெரிக்கப் பிரதிநிதிகள் சபையும், செனட் சபையும் தெரிவித்துள்ளன.

ஆப்கானிஸ்தானில் அமைதிப் பணியில் நேட்டோ படைகள் ஈடுபட்டுள்ளன. இந்தப் படைகள் மீது தலிபான்கள் அடிக்கடி தாக்குதல் நடத்தி வருகின்றன. இந்தத் தாக்குதலுக்கு பாகிஸ்தானில் தயாரிக்கப்பட்ட வெடிமருந்து பொருள்கள் தான் பயன்படுத்தப்படுகின்றன.

பாகிஸ்தானில் முகாமிட்டுள்ள தீவிரவாதிகள் இந்த வெடிமருந்துப் பொருளை தயாரித்து வருகின்றனர். இதை தடை செய்யும்படி அமெரிக்கா பலமுறை பாகிஸ்தானிடம் தெரிவித்துள்ளது. எனினும் இந்த வெடிமருந்து பொருள் தயாரிப்பை பாகிஸ்தான் தடுப்பதாகத் தெரியவில்லை. எனவே பாகிஸ்தானுக்கு அளிக்கப்படும் இராணுவ உதவியை நிறுத்தி விடும்படி அமெரிக்கப் பிரதிநிதிகள் சபையும், செனட் சபையும் ஒருமித்த கருத்தைத் தெரிவித்துள்ளன.

எனினும் இந்த விடயத்தில் இறுதி முடிவை எடுக்கும் அதிகாரம் அதிபர் ஒபாமா வசம் உள்ளது. (ந)

# தீப்பந்தங்களை பயன்படுத்தி ஜகார்த்தாவில் கின்னஸ் சாதனை



இந்தோனேஷியாவின் ஜகார்த்தா நகரில் 50 வெவ்வேறு நாடுகளைச் சேர்ந்த 3700க்கும் மேற்பட்ட மக்கள் ஒன்று சேர்ந்து ஒரே சமயத்தில் 3700 க்கும் மேற்பட்ட தீப்பந்தங்களை ஏற்றி கின்னஸ் சாதனை படைத்துள்ளனர்.

இந்த மக்கள் கடந்த 2009 ஆம் ஆண்டில் 1,318 காற்றில் பறக்கும் விளக் குகள் செய்து ஒரே நேரத்தில் அவற்றைப் பறக்கவிட்டு கின்னஸ் சாதனை படைத்தது குறிப் பிடத்தக்கது. (ந)

## ஐரோப்பிய ஒன்றியத்துடன் பிரிட்டன் இணைய ஜேர்மன் வலியுறுத்து

பேர்லின், டிசெ.15

யூரோ நெருக்கடிப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் முயற்சிகளில் ஐரோப்பிய ஒன்றியத்துடன் பிரிட்டன் இணைய வேண்டும் என ஜேர்மன் வலியுறுத்தியுள்ளது.

இந்த தகவலை ஜேர்மனின் வெளிவிவகாரத்துறை அமைச்சர் குய்டோ வெஸ்டர் வெலே தெரிவித்துள்ளார்.

புதிய ஒப்பந்தத்துக்கு ஐரோப்பிய ஒன்றியத்தில் உள்ள நாடுகள் ஒப்புதல் அளித்து விட்டன. ஸ்வீடன், செக் குடியரசு, ஹங்கேரி ஆகிய மூன்று நாடுகளும் தங்கள் நாடாளுமன்றத்தின் ஒப்புதல் பெற்றுத்தான் முடிவெடுக்க முடியும் என்று கூறிவிட்டன. ஆனால் பிரிட்டன் இதை உறுதியாக ஏற்க மறுத்துவிட்டது.

புதிய ஒப்பந்த விதிகளில் சில மாற்றங்களைச் செய்தால் மட்டுமே தாம் இணைய முடியும் என்பதை பிரிட்டன் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக ஜேர்மனியின் வெளி விவகாரத் துறை அமைச்சர் குய்டோ வெஸ்டர் வேலே மேலும் தெரிவித்தாவது:

பிரிட்டனை இந்த ஒப்பந்தத்தில் இணைக்க என்னென்ன முயற்சிகள் எடுக்க வேண்டுமோ அனைத்து முயற்சிகளையும் மேற் கொள்வோம் என்றார். (ந)



மலேஷியாவின் தலைநகர் கோலாம்பூரில் நடந்த ஒரு நிகழ்ச்சியில் அந்நாட்டு மன்னர் சுல்தான் அப்துல் ஹலிம், அவரது மனைவி ராணி ஹமின்னா ஆகியோர் கலந்து கொள்ள வந்தனர்.

## முஷாரப் எப்போது நாடு திரும்பினாலும் உடனடியாகக் கைது செய்யப்படுவார்

### பஞ்சாப் மாநில ஆளுநர் தெரிவிப்பு

லாகூர்,டிசெ.15

பாகிஸ்தான் முன்னாள் அதிபர் பர்வேஸ் முஷாரப் எப்போது நாடு திரும்பினாலும் உடனே கைது செய்யப்படுவார் என்று அந்நாட்டு பஞ்சாப் மாநில ஆளுநர் லத்தீப் கோஷா நேற்று கூறினார்.



பாகிஸ்தானில் பஞ்சாப் மாநில ஆளும் கட்சியான, பாகிஸ்தான் மக்கள் கட்சியை சேர்ந்த மூத்த தலைவர் லத்தீப் கோஷா, இந்தமாநில ஆளுநராக உள்ளார். அவர் லாகூரில் நேற்று செய்தியாளர்களிடம் கூறியதாவது:

முன்னாள் பிரதமர் பெனாசிர் புட்டோ கொலை வழக்கில் தேடப்படும் குற்றவாளியாக முஷாரப், தீவிரவாத தடுப்பு நீதிமன்றத்தால் அறிவிக்கப்பட்டி ருக்கிறார். எனவே, அவர் எப்போது நாடு திரும்பினாலும் உடனடியாக அவரை கைது செய்வோம். இவ்வாறு கோஷா கூறினார்.

கடந்த 2009இல் பாகிஸ்தானில் இருந்து முஷாரப் தப்பியோடினார். அதன்பின், பிரிட்டனிலும், துபாயிலுமாக வசித்து வரும் அவர். சமீபத்தில் அவர் அளித்த பேட்டியில், அடுத்த ஆண்டு மார்ச் 23ஆம் திகதி பாகிஸ்தானுக்குத் திரும்பி செல்வேன் என்று கூறியிருந்தார். (ந)

## 27 ஆம் திகதிக்குள் சதாரிநாடு திரும்புவார்

### பாகிஸ்தான் அமைச்சர் தெரிவிப்பு

பாகிஸ்தான் அதிபர் அசிப் அலி சர்தாரி எதிர்வரும் 27ஆம் திகதிக்கு முன்னதாக நாடு திரும்புவார் என மத விவகாரத் துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் அதிபர் சர்தாரி கடந்த சில தினங்களுக்கு முன்னர் சிகிச்சைக்காக துபாய் நாட்டுக்கு சென்றிருந்தார். இதனைத் தொடர்ந்து அவர் பதவி விலகப் போவதாக வதந்தி கிளம்பியது. இதனை மறுத்து வரும் பாகிஸ்தான் அமைச்சர்கள் சர்தாரி ஆரோக்கியத்துடன் இருப்பதாகக் கூறி வருகின்றனர்.

இந்நிலையில் மத விவகாரங்களுக்கான அமைச்சர் சையத் குர்ஷித் ஷா கூறுகையில், எதிர்வரும் டிசெம்பர் மாதம் 27ஆம் திகதிக்கு முன்னதாகவே சர்தாரி நாடு திரும்புவார் எனவும் சிந்து மாகாணத்தில் 27ஆம் திகதி நடைபெறவிருக்கும் பெனாசிர் பூட்டோ நினைவிடத்தில் நிகழ இருக்கும் நிகழ்ச்சியில் மக்களைச் சந்திக்க உள்ளார் எனவும் அவர் தெரிவித்தார்.

## ஊழல் வழக்கில் பிரான்ஸின் முன்னாள் அமைச்சர் கைது

பரிஸ்,டிசெ.15

பாகிஸ்தானுக்கு நீர்மூழ்கிக் கப்பல் விநியோகம் செய்தது தொடர்பான ஊழல் வழக்கில் பிரான்ஸ் முன்னாள் அமைச்சர் கைது செய்யப்பட்டுள்ளார்.



பிரான்ஸ் நாட்டின் கலாசாரத் துறை அமைச்சராக கடந்த 2004-2007ஆம் ஆண்டு வரை பதவி வகித்தவர் டோனிடியூ டி வேப்ரஸ். இவர் கடந்த 1994 ஆம் ஆண்டு இராணுவ அமைச்சரின் ஆலோசகராக பணியாற்றினார். அப்போது பாகிஸ்தானுக்கு நீர் மூழ்கிக் கப்பல் விற்றதில் நடந்த ஊழலில் இவர் மீது புகார் சுமத்தப்பட்டது. லஞ்சப் பணம் உரிய அதிகாரிகளுக்கு சென்று சேராத காரணத்தால், கடந்த 2002இல், பிரான்ஸ் கடற்படை பொறியியலாளர்கள் 11 பேர், கராச்சியில் நடந்த குண்டு வெடிப்பில் கொல்லப்பட்டனர்.

ஆனால் இந்தச் சம்பவம் குறித்து தனக்கு ஏதும் தெரியாது என அந்நாட்டின் அதிபர் நிக்கோலஸ் சர்கோஸி தெரிவித்துள்ளார். எனினும் டோனிடியூ டி வேப்ரஸ் இந்த ஊழல் தொடர்பாக கைது செய்யப்பட்டுள்ளார்.(ந)

## கியோட்டோ உடன்பாட்டிலிருந்து விலகுவதாக கனடா அறிவிப்பு

புவி வெப்பமடைவதைத் தடுப்பதற்காக ஜப்பானின் கியோட்டோ நகரில் மேற்கொள்ளப்பட்ட உடன்பாட்டிலிருந்து விலகுவதாகக் கனடா அறிவித்துள்ளது.

கனடாவின் இந்த விலகல் தீர்மானத்தை அந்நாட்டின் சுற்றுச்சூழல் அமைச்சர் பீற்றர் கென்ட் முறைப்படி வெளியிட்டார்.இவர் மேலும் தெரிவிக்கையில்; அமெரிக்காவும், சீனாவும் கியோட்டோ உடன்பாட்டு வரம்புக்குள் வராததால், இந்த உடன்படிக்கை சரிவரச் செயற்படுத்தப்படாது என்பதாலேயே இதிலிருந்து விலக கனடா முடிவு செய்ததாகத் தெரிவித்தார்.

கரியமில வாயு வெளியேற்றுவதைக் குறைப்பது தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபையின் வழிகாட்டுதலின்படி கியோட்டோவில் 1997ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 1ஆம் திகதி நடைபெற்ற மாநாட்டில் உடன்பாடு எட்டப்பட்டது. இந்த மாநாட்டில் எட்டப்பட்ட தீர்மான வரம்புக்குள் கரியமில வாயுவை அதிகம் வெளியேற்றும்அமெரிக்கா,சீனா வரவில்லை. கனடா அறிவித்துள்ளது.

தென்னாபிரிக்காவின் டர்பன் நகரில் பருவநிலை மாற்றம் தொடர்பான மாநாடு கடந்த வாரம் நடைபெற்று முடிவடைந்த இரண்டாவது நாளே கியோட்டோ உடன்பாட்டிலிருந்து விலகுவதாக கனடா அறிவித்துள்ளது.

## பஹ்ரைனில் சீர்திருத்தம்; வலியுறுத்துகிறார் கமரூன்

பஹ்ரைன் மன்னர் தான் ஒத்துக்கொண்ட சீர்திருத்தங்களையும், சமரசங்களையும் தனது நாட்டில் விரைவில் நிறைவேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன் வலியுறுத்தியுள்ளார்.

பஹ்ரைன் நாட்டின் மன்னரான ஹமது பிரிட்டன் பிரதமர் கமரூனைச் சந்தித்து பேச்சு நடத்தினார். அதன்போதே பஹ்ரைனில் மனித உரிமைகளுக்கு உரிய மரியாதை வழங்கப்பட வேண்டும் என்று கமரூன் வலியுறுத்தினார். இதன்போது அந்நாட்டு மன்னர், வன்முறைகளுக்குக் காரணமாக சில தனிநபர்களைக் குற்றம் சாட்டினார். தனது நாட்டில் பெரும்பான்மையாக வாழும் ஷியா முஸ்லிம்களை சிரியாவும், ஈரானும் தூண்டிவிட்டு சன்னி பிரிவு முஸ்லிம்களைத் தாக்குகின்றனர் என்றார்.

அதுமட்டுமன்றி இந்தத் தாக்குதல் அரசின் கொள்கைகளுக்கு அப்பாற்பட்டது, தனிநபர் விருப்பு வெறுப்பு சார்ந்தது என்றும் தனது அரசை எதிர்க்கும் பலர் சிரியாவில் தான் அதற்கான பயிற்சியைப் பெறுகின்றனர் என்றும் தெரிவித்தார். மேலும் இந்தப் பிரச்சினைகளுக்குக் காரணம் உலகத்தாரின் பார்வையை சிரியா மற்றும் ஈரானில் இருந்து விலக்கி பஹ்ரைன், சவுதி அரேபியா மற்றும் குவைத் பக்கமாகத் திருப்பிவிடுவதேயாகும் என்று கூறினார்.

இதுதொடர்பாகப் பிரிட்டனின் வெளிவிவகாரத்துறை அமைச்சர் வில்லியம் ஹேக் தெரிவிக்கையில்;

இதற்கு முன்பு பிரிட்டன் பஹ்ரைனுடன் வர்த்தகம் மற்றும் பாதுகாப்புத் தொடர்புகளை ஏராளமாக வைத்திருந்தது. ஆனால் இப்போது சில சமய வாதிகளால் ஏற்படும் பிரச்சினை காரணமாகத்தான் அனைத்துத் தொடர்புகளையும் ரத்துச் செய்தது என்று தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
15 டிசெம்பர் 2011 வியாழக்கிழமை

# மனத் தூய்மையின் அவசியம்

மனிதன் வாழ்க்கையில் சிறப்பாக உயர வழிவகுப்பது மனம்தான். மனிதர்களில் இன்ப, துன்பங்களுக்கு அவரவருடைய மனத்தில் ஏற்படும், உருவாகும் எண்ணங்களே காரணம். மனத்தில் எண்ணும் எண்ணம் நல்லதாக இருந்தால் வாக்கு நல்லதாக அமையும். வாக்கு நல்லதாக இருந்தால் செயலும் நல்லதாக அமையும். செயலும் நல்லதாக இருந்தால் அதனால் விளையும் பயனும் நன்மையாகவே இருக்கும். இத்தகைய பயன் அவனுக்கு மட்டுமன்றி அவனைச் சார்ந்துள்ள உற்றார் உறவினர், சமூகம், நாடு ஆகியவற்றுக்கும் நன்மை விளைவிக்கும்.

ஒருமையுடன் நினது திருமலரடி நினைக்கின்ற உத்தமர் தம் உறவு வேண்டும் என்று இராமலிங்க வள்ளலார் வேண்டுகோள் விடுத்துள்ளார். ஒழுக்க சீலத்துக்கும் உத்தம வாழ்க்கைக்கும் சான்றாக விளங்கிய உலகம் போற்றும் சத்தியசீலர் மகாத்மா காந்தி அடிகளை மாந்தர்கள் நினைத்துப் பார்க்க வேண்டும். மனத்தில் அழுக்குச் சேரா வண்ணம் அதைத் தூய்மையாகப் பராமரித்தல் ஒவ்வொருவரதும் கடமையாகும்.

பா.தேவப்பிரியா,
தரம் -8, நெல்லியடி மத்திய மகா வித்தி.

## சிந்தனைக்கு........

* நீங்கள் விடும் ஒவ்வொரு மூச்சும் உங்களுடைய கடிகாரம்.
* நல்லொழுக்கத்தை உருவாக்க ஒருவன் ஆயிரம் தடவை தடுக்கி விழுந்தாக வேண்டும்.
* தன்னலமற்றுப் பணிபுரிபவனே மிகச் சிறப்பாக பணி புரிகின்றான்.
* ஒவ்வொரு அலையின் பின்னும் முழுச் சமுத்திரம் நிற்கிறது.
* வெற்றியின் அளவுகோல் சுயநலமின்மை
* மனித குலத்திற்கு சேவை செய்வதே மிக உயர்ந்த வழிபாடாகும்.

சா. ஜிந்துஜா,
கோண்டாவில்.

## அன்னையின் மடியினிலே



ஈர் ஐந்து மாதங்கள்
தாயவளின் கருவறையில்
சுகமான தூக்கங்கள்
அன்னையில் மடியில்தான்
ஆயிரமாயிரம் சுகங்கள்
இன்று......
ஆளாகி விட்டதனால்
எத்தனை துன்பங்கள்
எண்ணில் அடங்கா தடைகள்
தூக்கம் கலைந்த இரவுகள்
இறைவா!
மீண்டும் எனக்கோர்
வரத்தினை தந்திடுவாய்
அன்னையவள் மடிதனில்
மழலை மொழி பேசி
மகிழ்ந்து விளையாடிட

தி.ஹேமலதா,
மாயக்கை, அல்வாய் வடக்கு.




### ஆரோக்கியமானது

இலங்கையின் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கும் கல்வி முறையானது, சிறந்ததொரு எதிர்காலத்தை உருவாக்கக்கூடிய கல்வி முறையாகவே உள்ளது.

தனியே புத்தகப் படிப்பு மட்டுமல்லாது அதனுடன் கூடிய செய்முறைகளையும் உள்ளடக்கியதாகவே கல்வி முறைமை காணப்படுகின்றது. இதற்குரிய ஆய்வுகூடப் படிப்புகள் அதற்கான செய்முறைப் பரீட்சைகளும் தனியே இடம்பெறுகின்றன.

ஆய்வுகூட வசதிகளுக்குரிய வளங்கள் எமது பிரதேசப் பாடசாலைகளில் இல்லாதுள்ளமை துரதிர்ஷ்டமே. இருப்பினும் அத்தகைய ஆய்வுகூட வளங்களைப் பயன்படுத்தி ஒவ்வொரு விடயத்தையும் செயன்முறையூடாகப் செய்து பார்க்கும்போது ஏற்படும் அனுபவம் சிறப்பானதே.

இன்றைய கல்வி முறையின் ஓர் அங்கமாகவே விளையாட்டுத்துறை விளங்குகின்றது. விளையாட்டுச் செயற்பாடுகளின் ஊடாக மாணவர்களின் திறன்கள் மேலும் வளர்க்கப்படுகின்றது.

எனவே சகல வழிகளிலும் நன்மை பயக்கும் வகையிலேயே இன்றைய இலங்கையின் கல்வி முறைமை காணப்படுகின்றது என்பதில் எதுவித மாற்றுக் கருத்துக்கும் இடமில்லை.

பா.வசந்தன்,
டச்சு வீதி, கோப்பாய்.




### ஆரோக்கியமற்றது

இன்றைய இலங்கையின் கல்வி முறையானது ஆக்கபூர்வமற்றதாகவே காணப்படுகிறது. ஏனென்றால் சர்வதேச ரீதியில் ஒப்பிட்டு நோக்கும்போது எமது கல்வி முறையானது பின்னடைவிலேயே உள்ளது. இலங்கை கல்வி முறையில் போதியளவு செயன்முறைத் தொழில்நுட்பம் இல்லை. அதாவது பாடசாலைகளில் தொழில்நுட்பத்துடன் கூடிய தொழிற்கல்வியை கற்பிக்கவேண்டும். ஆனால் இங்கு பாடசாலைகளில் தொழிற்கல்வி படிப்பிப்பது இல்லை. நேரடியாகவே தொழில்நுட்பக் கல்லூரிகளில் சென்று படிக்கின்றார்கள். எனவே பாடசாலையில் இக் கல்விமுறையை அறிமுகப்படுத்த வேண்டும்.

இலங்கையில் கல்வித்தகைமை போதியளவு இருந்தாலும் தொழிநுட்ப அறிவு குறைவே ஆகும். வெளிநாடுகளில் தொழிநுட்பக் கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. இதனால்தான் நமது மாணவர்கள் வெளிநாட்டுப் படிப்பை பின்தொடர்ந்து வெளிநாடு செல்கின்றார்கள். ஏன் நாம் ஒரு தொழிலுக்கு அங்கு விண்ணப்பித்தாலும் அங்கு தொழிநுட்ப அறிவு, பயிற்சி அனுபவம் என்பவற்றை வைத்தே தெரிவு செய்கின்றனர். நமது நாட்டின் முன்னேற்றத்துக்கு ஏட்டுக் கல்வியிலும் பார்க்க தொழிநுட்ப கல்வியே சிறந்தது.

எனவே அவை எதுவும் இல்லாதவரையில் இன்றைய இலங்கையின் கல்விமுறை ஆக்கபூர்வமற்றதாகவே இருக்கும்.

கந்தசாமி கவிதா,
குமரம்புலம், மூளாய்.

## புதிய புரட்சி

எழுத்துக்களால் ஒரு புரட்சி - தமிழன்
எழுந்து நிற்கவே படைப்போம்
எழுப்புவோம் முரசொலியை
எட்டுத்திசையும் ஒலிக்கட்டும்

தமிழ், தமிழ், தமிழ்
தாலாட்டும் தாய் தமிழ் - இப்ப
தத்தளிக்கும் தாய் தமிழ்

சுவைத்துப்பார் தமிழை - அதன்
சுவையறிவாய் நீ
வீரம் கொண்ட தமிழ் - வாழ்வில்
வித்திடுவது தமிழ்

சாதி, மத, இன பேதமற்ற மனதில்
பிரசவிக்கும் குழந்தை மொழி தமிழ்
பாவம் இல்லாத பல
பாதைகளை வகுத்திடுவாள் தமிழ்

ஈழத்தமிழ் ஒலிக்கட்டும் வாழ்வில்
பறைசாற்ற ஓங்கட்டும் தமிழ் மொழி!

பு.தாரணி,
யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரி

### இளவல்கள் வட்டம் வாக்குச் சீட்டு

**இன்றைய இலங்கையின் கல்வி முறை**

| ஆக்கபூர்வமானது | ஆக்கபூர்வமற்றது |
|---|---|
| ☐ | ☐ |

பெயர்: ...............................................

முகவரி: ...............................................

அடையாள அட்டை இல..

...............................................

உங்கள் தீர்ப்புக்களை 29.12.2011 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவும். இந்த வாக்குச் சீட்டுடன் அனுப்பப்படும் வாக்குகள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.

### இளைஞர், யுவதிகளே!

உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும் பிரச்சினைகள் பற்றிப் பேசவும் தேடல்களுக்குத் தீனி போடவும் 'இளவல்கள் வட்டம்' என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இந்தப் பகுதிக்கான உங்கள் படைப்புக்களையும் ஏதாவது சந்தேகங்களையும் விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.

**'இளவல்கள் வட்டம்',**
*'உதயன்', 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.*

பெயர் :-...............................................

முகவரி :- ...............................................

...............................................

........................ ........................
திகதி கையொப்பம்

### பரிசு

நான் முதன் முதலில் வாங்கிய பரிசு
அன்னையின் அன்பு முத்தம் - நான்
இன்று வைத்திய நிபுணர் எனும்
பட்டம் பெறும் போது வாங்கும் பரிசு
அன்னையின் கண்ணீர் துடைத்த
ஆனந்தம் பொங்கும் இன்பம்

### புத்தகம்

உலகத்தவர் அறியாதவற்றை
எழுத்து வடிவில் காலத்துக்குக்
காலம் அரிய பல தகவல்களை
ஒளிவு மறைவின்றித் தரும் ஆசான்

### ஆசான்

நான் இன்றொரு தெய்வத்தை
உயிருள்ள ஓவியமாக - என்னை
இருளினின்று மீட்டெடுக்கும்
இரட்சகராக காண்கிறேன் - என்
கண் முன்னே ஆசான் எனும்
முகவரியுடன்......

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீன்பிடிக்கான பாஸ் முறையை கிழக்கில் உடன் நீக்குங்கள்

## செல்வராசா எம்.பி. கோரிக்கை

மட்டக்களப்பு,டிசெ.15

கிழக்கு மீனவர்கள் மீன்பிடிப்பதற்கு விதிக்கப்பட்டுள்ள பாஸ் நடைமுறை முற்றாக நீக்கப்பட்டு அவர்கள் சுதந்திரமாக மீன்பிடிக்க அனுமதி வழங்கப்படவேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பொன். செல்வராசா கடந்த திங்கட்கிழமை நாடாளுமன்றில் கோரிக்கை விடுத்தார்.

வரவு - செலவுத் திட்டத்தில் கடற்றொழில் அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையின் மொத்த மீன் உற்பத்தியில் கிழக்கு மாகாணம் சமபங்கு வகிக்கின்றது. அங்கு மீன்பிடியில் முன்பு போல் பிரச்சினைகளைஎதிர்கொள்ளாத போதிலும் சில அசௌகரியங்களை மீனவர்கள் எதிர்கொண்டு வருகின்றனர். இவை உடன் நீக்கப்படவேண்டும்.

30 வருட கால யுத்தத்தால் மிகவும் பாதிக்கப்பட்ட கிழக்கு மீனவர்கள் யுத்தம் ஓய்ந்துள்ள நிலையில் தமது தொழிலை சுதந்திரமாக மேற்கொள்ள விரும்புகின்றனர். ஆனால், ஆழ்கடலில் சென்று மீன்பிடிக்க அவர்களுக்கு பாஸ் நடைமுறை விதிக்கப்பட்டுள்ளது. இது உடன் நீக்கப்படவேண்டும்.

கிழக்கு மாகாணம் இலங்கையின் மீன் உற்பத்தியில் சமபங்கு வகிக்கின்றபோது மீன் உற்பத்தி ஆராய்ச்சிகளை மேற்கொள்ளும் 'நாரா' நிறுவனத்தின் கிளை கிழக்கில் அமைக்கப்படவில்லை. அதை மட்டக்களப்பில் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

ஆழ்கடல் மீன்பிடிப்படகுகளைக் கொள்வனவு செய்வதற்காக கிழக்கு மாகாண மீனவர்கள் 91 பேர் இலங்கை வங்கியிடம் கடன்களுக்காக விண்ணப்பித்துள்ளனர்.

அவர்கள் வீடுகளையோ அல்லது வேறு சொத்துகளையோ அடகு வைத்தால் மாத்திரமே கடன் வழங்கப்படும் என்று இலங்கை வங்கி தெரிவித்துள்ளது.

இந்த விடயத்தில் கடற்றொழில் அமைச்சும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சும் தலையிட்டு இந்தக் கடன்களைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றார். (ச)

# கரையோரப் பிரதேச மீனவர்களின் வாழ்வாதாரம் மேம்படுத்தப்படும்

## இந்திய முகாமைத்துவக் கற்கை நிலையத்தின் இயக்குநர் தெரிவிப்பு

அம்பாறை, டிசெ.15

கரையோரப் பிரதேசங்களின் மீன்பிடித் தொழிலை நவீனமயப்படுத்துவதோடு, மீனவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த வழிகாட்டுவேன்.

- இவ்வாறு அனைத்து இந்திய முகாமைத்துவக் கற்கை நிலையத்தின் இயக்குநர் மருதூர் ஹஸன் தெரிவித்துள்ளார்.

சாய்ந்தமருது பிரதேச கடலோரக் கிராம மக்களுடனான சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

அயல் நாடான இந்தியாவில் பளிங்குக் கற்கள், பாறைகள் அமைத்து கடலில் கூடுதலான மீன்கள் பிடிக்கப்படுகின்றன. இவைபோன்ற விடயங்களுடனான நவீன செயற்றிட்டங்களை அறிமுகம் செய்வதன் மூலம் எமது மீனவர்களுக்கு அதிக வருமானங்களை ஈட்டிக்கொடுக்க என்னால் எதிர்காலத்தில் முயற்சி எடுக்க முடியும்.

எமது பிரதேசத்தின் வருமானத்தில் மிகக் கூடுதலான வீதமானது கடற்றொழில் மூலமாகப் பெறப்படுகிறது. ஆனால், மீனவர்களுக்கான வசதிகள், தேவைகள் திருப்திகரமாக செய்யப்படவில்லை. இதனை எதிர்காலத்தில் நான் இயலுமான வரையில் செய்துச் கொடுக்க முயற்சி எடுப்பேன். அதுமட்டுமல்லாது, விவசாயிகளுக்கு விவசாயக்கடன் வழங்கப்படுவது போன்று மீனவர்களுக்கு கடன் வழங்கும் திட்டமொன்றை நடைமுறைப்படுத்த முயற்சி மேற்கொள்ளவுள்ளேன்- என்றார். (ச)

# நிதி ஒதுக்கீடு

கல்முனைக்குடி முகைதீன் ஜும்ஆப் பள்ளிவாசல் வீதியைக் கொங்கிறீட் வீதியாகச் செப்பனிடுவதற்கு கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி நீர்ப்பாசன அமைச்சர் எம்.எஸ். உதுமாலெப்பை 33 மில்லியன் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளார் என்று அமைச்சரின் ஊடக உத்தியோகத்தர் அப்துல் ஜப்பார் சமீம் தெரிவித்தார்.

கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தித் திணைக்களத்தின் ஊடாக ஜப்பானியக் கூட்டு நிறுவனமான ஜெய்க்காவின் கிராமிய வீதிகளை அபிவிருத்தி செய்யும் அனர்த்த அவசர புனரமைப்புத் திட்டத்தின் கீழ் இந்த வீதி புனரமைப்புச் செய்யப்படவுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச)



அக்குறணை பங்கொல்லாமட பிரதேசத்தில் தரிசு நிலமாக இருந்த காணியில் நெற்செய்கை நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை ஆரம்பிக்கப்பட்டது. மத்திய மாகாணசபை உறுப்பினர் ரிஸ்வி பாரூக் முதலாவதாக விதை நெல் தூவி நெற்செய்கையை ஆரம்பித்து வைத்துள்ளார்.

# அரசியல்வாதியின் செல்வாக்கால் அத்துமீறி கொட்டகை போட்ட நபர்

தியத்தலாவை, டிசெ.15

தியத்தலாவை கஹ கொல்ல வெவ கரையோரத்தில் அரச காணியொன்றுக்குள் கடந்த செவ்வாய்க்கிழமை அத்துமீறி தற்காலிகக் கொட்டகைகளை அமைத்ததாகக் கருதப்படும் அரசியல் செல்வாக்குடைய நபர் ஒருவருக்கு கொட்டகைகளை அப்புறப்படுத்துவதற்கு இருநாள் கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளதாக தியத்தலாவை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தக் கால எல்லைக்குள் அவர் கொட்டகைகளை அப்புறப்படுத்தாவிடின் அவருக்கு எதிராக வழக்குப் பதிவுசெய்யப்படும் என்று பொலிஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

அரசுக்கு சொந்தமான இந்தக் காணியில் அண்மையில் தாய்-சேய் சிகிச்சை நிலையமொன்று அமைக்கப்பட்டது.

அதேவேளை, குறிப்பிட்ட அரசியல் வாதிகளின் அடிவருடியான நபரும், அவர் சார்ந்த பெரும்பான்மை இனத்தவர்களும் அரச காணிக்குள் அத்துமீறி நுழைந்து தமக்குத் தேவையான முறையில் கொட்டகைகளை அமைத்துள்ளனர்.

இதனைக் கண்டித்த பொது மக்கள், கிராமசேவையாளருக்கு முறைப்பாடு செய்ததையடுத்து அவர் இந்த விடயத்தை பொலிஸார், பிரதேச செயலாளர், பிரதேசசபைத் தலைவர் உள்ளிட்டவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்ததையடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ச)

# ஆசிரியர்கள் மீது தாக்குதல்; கண்டித்துப் பெரும் ஆர்ப்பாட்டம்

தெஹியத்தகண்டிய கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலை ஒன்றில் ஆசிரியர் ஒருவரும், ஆசிரியைகள் இருவரும் தாக்கப்பட்டதை எதிர்த்து தெஹியத்தகண்டிய நகரில் கடந்த செவ்வாய்க்கிழமை ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தியே இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கிய கடந்த வெள்ளிக்கிழமை, இந்த ஆசிரியர்கள் மீது மற்றுமொரு ஆசிரியர் குழு பொல்லுத் தாக்குதலை மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தத் தாக்குதலை நிறுத்துவதற்குச் சென்ற மாணவர்களும் தாக்கப்பட்டுள்ளனர் என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ள பெற்றோர்கள் தெரிவித்தனர். (ச)

# ஆர்ப்பாட்டத்தில் தொடர்புடைய 28 பேர் கைது

தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் தொடர்புடைய சந்தேகநபர்கள் 28 பேரைத் தாம் கைது செய்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மரக்கறிகள் மற்றும் பழவகைகளைக் கொண்டு செல்வதற்காக நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டுள்ள புதிய சட்டமுறைக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்றுமுன்தினம் தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்தில் வர்த்தகர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனையடுத்து ஆர்ப்பாட்டக்காரர்களைக் கலைப்பதற்காகச் சென்ற பொலிஸாருக்கும் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் இடையில் மோதல் இடம்பெற்றதுடன் பொலிஸார் கண்ணீர்ப்புகைப் பிரயோகத்தையும் மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (ச)

# நட்டத்தில் இயங்கிவரும் பெருந்தோட்டங்களை தொழிலாளர்களுக்கு பிரித்துக் கொடுக்க வேண்டும்

## திகாம்பரம் எம்.பி. தெரிவிப்பு

நுவரெலியா, டிச.15

தோட்டங்கள் நஷ்டத்தில் இயங்குவதாக கூறுகின்ற பெருந்தோட்டத்துறை நிறுவனங்கள் அந்தத் தோட்டங்களை தொழிலாளர்களுக்குப்பிரித்துக்கொடுக்க வேண்டும். மாறாக தோட்டத் தொழிலாளர்களின் வேலைப்பளுவை அதிகரிக்க முற்பட்டால் தோட்டக் கம்பனிகளுக்கு எதிராகப் போராட வேண்டிய நிலைமை தொழிற்சங்கங்களுக்கு ஏற்படும் - என்று நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பி.திகாம்பரம் தெரிவித்துள்ளார்.

பெருந்தோட்ட நிறுவனங்கள் தொழிலாளர்கள் மீது செலுத்தி வருகின்ற கெடுபிடிகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து கடந்த ஞாயிற் றுக்கிழமை பொகவந்தலாவை நகரில் இடம்பெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இந்நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

நுவரெலியா மாவட்டத்திலுள்ள பெரும்பாலான தோட்டங்களில் தோட்டத்தொழிலாளர்கள் அடிப்படை சம்பளத்திற்காகப் பறிக்க வேண்டிய கொழுந்தின் நிறையை அதிகரிக்கக்கோரி தோட்ட நிர்வாகங்கள் வற்புறுத்தி வருவதாக தொழிலாளர்கள் முறைப்பாடு தெரிவிக்கின்றனர்.

ஞாயிற்றுக்கிழமைகளில் தொழில்புரிகின்ற தொழிலாளர் விடயத்தில் தோட்ட நிர்வாகங்கள் புதிய நிர்ப்பந்தங்களை ஏற்படுத்தி வருகின்றன. இவற்றை எவ்விதத்திலும் அனுமதிக்க முடியாது. இவ்வாறு தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிராக தன்னிச்சையான முடிவுகளை எடுக்கும் நிர்வாகங்களுக் கெதிராக தொழிற்சங்க ரீதியிலான நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய நிலைமை எமக்கு ஏற்பட்டுள்ளது.

பெருந்தோட்டங்களை அரசு பொறுப்பேற்றிருந்தபோது தோட்டங்களுக்குரிய உட்கட்டமைப்பு வசதிகளை தோட்ட நிர்வாகங்கள் மேற்கொண்டு வந்தன. ஆனால் தற்போது தோட்டங்களைப் பொறுப்பெடுத்துள்ள தோட்டக்கம்பனிகள் அவ்வாறு செயற்படுவதில்லை.

தோட்டங்களின் உட்கட்டமைப்பு வசதிகளுக்கு அரசு பெருமளவு நிதியை ஒதுக்கி வருகின்றது. இந்த நிலையில் இலாபத்தை மாத்திரம் அனுபவிக்கின்ற தோட்டக்கம்பனிகள் தாம் நட்டத்தில் இயங்குவதாக கூறுவதை எவ்விதத்திலும் அனுமதிக்க முடியாது. அவ்வாறு நட்டத்தில் இயங்குகின்ற தோட்டங்கள் தொழிலாளர் குடும்பங்களுக்கு பிரித்துக்கொடுக்கப்படவேண்டும்.

மாறாக தோட்டங்கள் நஷ்டத்தில் இயங்குவதாக கூறி நிர்வாகங்கள் தொழிலாளர்களை நிர்ப்பந்திப்பதை எவ்விதத்திலும் அனுமதிக்க முடியாது - என்றார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?



**மேடம்:**
மனதில் சந்தோஷம், அமைதி குடிகொள்ளும் நாள். குடும்ப உறுப்பினர்கள் பொறுப்போடு நடந்து, உங்களுக்குப் பெருமை சேர்ப்பர். பெரிய மனிதர்கள் சிலர் மூலம் பண உதவிகளைப் பெறலாம். கடந்த காலத்தில் நீங்கள் செய்த உதவியை மறக்காமல், ஒருவர் நன்றியுடன் நடந்து கொள்ளலாம். உடன் பிறப்புக்கள் நலனில் அக்கறை காட்டுவீர்கள்.



**இடபம்:**
குறைந்த செலவில் முடியும் என நினைத்த வேலை ஒன்றுக்கு அதிகமாகச் செலவாகலாம். உங்களிடம் பணம் இல்லாமல் ஒருவரிடம் கைமாத்தாக பணம் வாங்கி, சில காரியங்களைச் செய்வீர்கள். அரசியல்வாதிகள் கடும் அலைச்சல், திரிச்சல்களுக்கு ஆட்படலாம். சில விடயங் களில் சுயநலமாக நடந்து மற்றவர்களின் அதிருப்திக்கு ஆளாவீர்கள்.



**மிதுனம்:**
நீண்ட நாள்களாகப் பிற்போட்ட சில வேலைகளை இன்று செய்வீர்கள். சில பொருள்களை கடனுக்கு வாங்கலாம். ஒரு வேலையை சில மணி நேரம் காத்திருந்து முடிக்கலாம். பிரியமான உணவு வகைகளைச் சாப்பிடுவதில் நாட்டம் செல்லும். உதவிகள் கிடைப்பது தள்ளிப் போகலாம். திட்டமிட்ட வேலை ஒன்றில் தடை ஏற்படலாம்.



**கடகம்:**
நண்பர்கள், உறவினர்கள் மத்தியில் உங்களின் செல்வாக்கு அதிகரிக்கும். பண விவகாரங்களில் நாணயமாக நடந்து கொள்வீர்கள். அரசியல்வாதிகளை நம்பி எந்தக்காரியத்திலும் இறங்க வேண்டாம். பொறியியல் பணியாளர்கள் மகிழ்ச்சி, உற்சாகமாகக் காணப்படுவர். பெற்றோர் மீதான பாசம் அதிகரிக்கும். எதிர்பாராத உதவி கிட்டும்.



**சிங்கம்:**
போட்டி, எதிர்ப்புகளால் மன உளைச்சலுக்கு ஆள்படலாம். உங்களின் தொழில் ரீதியான செயற்பாடுகளை மற்றவர்கள் குறை சொல்லலாம். சில விடயங்களில் பிடிவாதமாக நடந்து கொள்வதன் மூலம், குடும்ப உறுப்பினர் களின் அதிருப்திக்கு ஆளாகலாம். மருந்துப் பொருள்கள் வாங்க கணிசமான பணத்தைச் செலவிடலாம். வேலை நெருக்கடி கூடும்.



**கன்னி:**
பயணங்கள் சந்தோஷம் தருவதாக அமையும். வீண் செலவுகளைக் குறைத்து, சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள். நீண்ட நாள்களாக வராத உறவினர் ஒருவர், உங்க ளின் வீட்டுக்கு வரலாம். சில வேலைகளை தாமதமாகத் தொடங்கினாலும், சரியான நேரத்துக்கு முடிப்பீர்கள். அடமானமாக வைத்த பொன், பொருள்களை மீட்கலாம்.



**துலாம்:**
உடன் பிறந்தவர்கள் வழியில், எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கலாம். பலர் பங்கேற்கும் நிகழ்ச்சி ஒன்றில், நீங்களும் கலந்து கொள்ளலாம். நட்பு வட்டம் விரிவடையும். தெரிந்தே சில தவறுகளைச் செய்வீர்கள். லட்சியம் ஒன்றை நிறைவேற்ற புதிய திட்டம் போடுவீர்கள். குடும்பத் தேவைகள் நிறைவேறும். இழுபறியாக இருந்த பணம் வரலாம்.



**விருச்சிகம்:**
மற்றவர்கள் செய்யத் தயங்கிய வேலை ஒன்றை, நீங்கள் துணிச்சலாகச் செய்வீர்கள். நண்பர்களுடன் கொண்டாட்டங்களில் பங்கேற்கலாம். உடன் இருப்பவர்களால் உருவான தொந்தரவுகள் குறையும். எதிலும் முன்னெச்சரிக்கையாக இருக்க நினைப்பீர்கள். ஒரு விடயம் குறித்து பெரிய அளவில் மனக்கோட்டை கட்டுவீர்கள்.

**தனுசு:**



ஆதாயமில்லாத அலைச்சல்களுக்கு ஆள்படலாம். பயணங்களின் போது, வாகனங்கள் பாதியில் பழுதாகி நின்று, வேறு வாகனங்களில் செல்ல நேரிடலாம். சிலர் உங்களின் மனம் புண்படும் வகையில் பேசலாம். எந்த விடயத்திலும் அவசரப்பட்டு முடிவுகள் எடுக்க வேண்டாம். வீண் பேச்சுக்களில் நேரத்தை வீணடித்து விட்டு, பின்னர் அவசரமாகச் செயற்படுவீர்கள்.



**மகரம்:**
புதுத் தெம்பு, புத்துணர்வுடன் செயற்படும் நாள். நீங்கள் தேடிச்சென்று பார்க்க நினைத்த நண்பர் ஒருவர், உங்களைத்தேடி வரலாம். பழகிய சிலர் மூலம் பண வரவுகளைப் பெறலாம். பிள்ளைகளுக்காக கணிசமான பணத்தைச் செலவிடுவீர்கள். மற்றவர்கள் மலைபோல் நினைத்த வேலை ஒன்றை, நீங்கள் எளிதாகச் செய்து முடிப்பீர்கள்.



**கும்பம்:**
வீட்டுக்குத் தேவையான சில பொருள்களை வாங்கிக் கொடுப்பீர்கள். உங்களின் வேலை ஒன்றை நண்பர்கள், சக ஊழியர்கள் மூலம் முடித்துக் கொள்வீர்கள். கனிவான பேச்சுக்களால், கல்மனம் படைத்த சிலரிடமும் காரியம் சாதிப்பீர்கள். அதிக எதிர்பார்ப்போடு இருந்த காரியம் ஒன்று, முடியாமல் இழுபறியாகலாம். கட்டணமிகுதிகளைச் செலுத்துவீர்கள்.



**மீனம்:**
தொழில் ரீதியாக சில தர்ம சங்கடமான சூழ்நிலைகளை எதிர்கொள்ளலாம். உடல் உபாதைகளால் உற்சாகம் குறைந்து வெறுப்பு, விரக்தி ஆள்கொள்ளும். எப்படியும் முடிந்து விடும் என்று நினைத்த காரியத்தில், எதிர்பாராத சிறு சுணக்கம் ஏற்படலாம். தொழில் ரீதியாகவோ, வேறு விடயமாகவோ சிலரிடம் யோசனை கேட்கலாம்.

# இலங்கை பற்றிய கொள
# மீள்பரிசீலனை செய்தே

*யூர்ஏசியா ரிவியூ (eurasiareview) இணையத் தளத்தில் அமைதி மற்றும் முரண்பாட்டுக் கற்கைகளுக்கான நிலையத்தின் ஆய்வு அதிகாரியான ஜே.ஜெகநாதன் எழுதிய கட்டுரையின் தமிழாக்கம்.*



இலங்கை அமைதி முயற்சிகள் வெற்றி பெறவேண்டும் என்ற அக்கறை
வதில் அது அதிக அக்கறை செலுத்தியமையுமே, இராணுவ வழித் தீர்வில்
அடைவுகள், அறிக்கை கூறுகின்றது. இதனாலேயே பல்ல பிரக்கணக்க

இலங்கையில் 1997-2003 காலப்பகுதி வரை நோர்வேயால் இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட சமரச முயற்சிகள் பற்றிய மீள்மதிப்பீட்டு அறிக்கையை 'அமைதிக்கான அடைவுகள்' என்ற பெயரில், நோர்வே வெளிவிவகார அமைச்சின் கீழ் இயங்கும் அபிவிருத்தி ஒத்துழைப்புக்கான நோர்வே அமைப்பு வெளியிட்டிருந்தது.

### தோல்வி பற்றிய ஆய்வு

இலங்கையில் நோர்வேயால் மேற்கொள்ளப்பட்ட சமரச முயற்சி தோல்வியடைந்தமைக்கான காரணம் என்ன? இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட சமரச முயற்சிகளின் எந்த நடவடிக்கைகள் அங்கு நிலவிய முரண்பாட்டைத் தீர்ப்பதில் தோல்வியடைந்தன? ஆகிய இரு முக்கிய 'வினாக்கள் தொடர்பாக இந்த அறிக்கையில் ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

மேற்கொள்ளப்பட்ட சமரச முயற்சிகள், அதற்காக நோர்வே இராஜதந்திர ரீதியில் இடைத் தரகராக வழங்கிய செயற்பாடுகள், போர் நிறுத்த உடன்படிக்கைக்கான நடுநிலையாளராக மேற்கொண்ட செயற்பாடுகள், 1997 முதல் 2003 வரை மனிதாபிமான மற்றும் அபிவிருத்திக்கான நிதி வழங்குனராக வழங்கிய உதவிகள் போன்றன குறித்து மிக விளக்கமாக இந்த அறிக்கையில் ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையின் தொடக்கத்தில், இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட சமரச முயற்சியில் நோர்வேயின் பங்களிப்பானது தோல்வி அடைந்திருந்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், இலங்கையில் இனப்பிரச்சினைத் தீர்வில் நோர்வேயின் பங்களிப்பானது சற்றுச் சிக்கலானதாக இருந்துள்ளது என்பதை மிக இலகுவான எடுகோளாக எடுத்துக் கொள்ளலாம்.

### அமைதி முயற்சி தோற்றது ஏன்?

நடுநிலையாளராகச் செயற்படுமாறு இலங்கை அரசு மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகளாலேயே நோர்வே அழைக்கப்பட்டது. ஆரம்பத்தில், இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட சமரச முயற்சிகள் வெளித் தரப்பினராலும் ஒப்புக்கொள்ளப்பட்டும் பாராட்டப்பட்டும் இருந்த போதிலும்கூட, தீர்வை எட்டுவதற்காக நோர்வேயால் எடுக்கப்பட்ட முயற்சிகள் அனைத்தும் இறுதியில் வீணாகிப் போய்விட்டன.

இந்தத் தோல்விக்கு, இலங்கையில் தொடர்ந்த இன மோதலானது அனைத்துலக மயப்படுத்தப்பட்டிருந்தமை மற்றும் இந்தியா போன்ற பிராந்திய செல்வாக்குமிக்க நாடுகளால் இந்த முயற்சிகள் ஓரங்கட்டப்பட்டமை ஆகிய இரு பிரதான காரணங்களைக் கவனிக்கத் தவறக்கூடாது. 2003ஆம் ஆண்டு வரை இலங்கையில் நோர்வே மிகவும் வினைத்திறனுடன் சமரச முயற்சிகளைக் கையாண்டது. கேணல் கருணாவின் பிளவின் பின்னரே இந்தச் சமரச முயற்சிகள் படிப்படியாக ஆட்டம் காணத் தொடங்கின. உண்மையில் இது நோர்வே அனுசரணையாளர்களால் எதிர்பார்க்கப்படாத ஒன்றாகவே இருந்துள்ளது.

இதேவேளையில், சமரச முயற்சியில்

> **போரால் நேரடியாகப் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் இந்தியா மற்றும் சீனா ஆகிய இரு நாடுகளின் பூகோ அரசியல் கொள்கை வகுப்புகளுக்கு இடையில் அகப்பட்டதாகவும், ராஜபக்ஷ அரசு இந்த நிலைப்பாட்டை தனது சுயநலத்துக்காகப் பயன்படுத்திக் கொண்டதாகவும் நோர்வேயின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.**

பங்குகொண்டிருந்த விடுதலைப் புலிகளைப் பலவீனப்படுத்துவதில் மிகப் பிரதான பங்காளியாக இந்தியாவே இருந்தது என்று அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### இந்தியச் செல்வாக்கு

பூகோள அமைவிட ரீதியிலும் இன ரீதியிலும் பெருமளவில் முக்கியத்துவத்தைக் கொண்டுள்ள இந்தியா, இலங்யையின் இன மோதலில் பிரதான தலையீட்டாளராகச் செயற்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக, இந்தியாவை ஆட்சி செய்த இந்திராகாந்தி தலைமையிலான அரசு, தனது பிராந்தியத்தில் அமெரிக்க அதிகாரத்தை எதிர்ப்பதற்கான இராஜதந்திர ரீதியான தடையாக விடுதலைப் புலிகள் அமைப்பைப் பயன்படுத்திக் கொண்டது. இது இந்தியாவின் பூகோள அரசியல் நலன்சார் செயற்பாடாக அமைந்திருந்தது.

இதேபோன்றே 2009இல் இலங்கையில் இடம்பெற்ற போர் நிறைவுக்கு வந்த போதும், சீனா, பாகிஸ்தான் ஆகிய இரு நாடுகளும் மூலோபாய ரீதியான இணக்கப்பாடுகளை மேற்கொண்டன. ஆனால் இந்தியா தனது நலன்சார் செயற்பாட்டையே மேற்கொண்டது.

இதற்கப்பால், நோர்வே இலங்
சமரச முயற்சிகளை ஆரம்பித்தபோது
பெரிதும் ஈடுபாடு காட்டாததுடன்,
கையுடனான உடன்படிக்கைக்கு
மைப்பின் 13ஆவது திருத்தம்) அ
செல்வதிலும் இந்தியா தயக்கம் கா

2004இல் காங்கிரஸ் அரசு இ
வில் மீண்டும் ஆட்சிக்கு வந்தபோ
டும் இந்தியாவின் இந்த நிலைப்பா
படுத்தப்பட்டது. இலங்கையின் இ
சினையில் இந்தியாவின் தனிப்பட்
யற் கோட்பாடுகள் மிகப் பெரிய செ
கைச் செலுத்தியுள்ளன என்பதை
காட்டுகின்றது.

### தூரநோக்கற்ற இந்தியா

இலங்கை மீதான சீனா மற்றும்
தானின் இராஜதந்திரப் பங்களிப்
தனக்குள் உள்ளடக்க இந்தியா தவ
தாக பிரதான மூலோபாய விமர்
பிரமா சலேனி உறுதிப்படுத்தியுள்

இதற்கும் மேலா 2004இல்
தேசிய காங்கிரஸ் மீளவும் ஆட்சிப்
பிற்கு வந்தமை மற்றும் தமிழ்நாட்
யல் மீது இலங்கையின் செல்
வீழ்ச்சியடைந்தமை தொடர்பாகவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காள்கையை இந்தியா
# ப்தே ஆகவேண்டும்



என்ற அக்கறையுடன் இந்தியா செயற்படாமையும், விடுதலைப் புலிகள் இயக்கத்தை பலவீனப்படுத்து
வழித் தீர்வில் இலங்கை அரசு தீவிரம் காட்டுவதற்கு வழிகோலியது என்று நோர்வேயின் 'அமைதிக்கான
...பிரக்கணக்கான உயிரிழப்புக்களுடன் லட்சக்கணக்கானோர் அகதிகளாகியும் உள்ளனர்.

**ழ் மக்கள்**
**ரின் பூகோள**
**இடையில்**
**இந்த**
**காகப்**
**வேயின்**
**து.**

நார்வே இலங்கையில்
ஆரம்பித்தபோது அதில்
காட்டாததுடன், இலங்
ன்படிக்கைக்கு (அரச
திருத்தம்) அப்பால்
ா தயக்கம் காட்டியது.
கிரஸ் அரசு இந்தியா
சிக்கு வந்தபோது மீண்
ந்த நிலைப்பாடு வலுப்
லங்கையின் இனப்பிரச்
வின் தனிப்பட்ட அரசி
மிகப் பெரிய செல்வாக்
ான என்பதையே இது

**ற்ற இந்தியா**

சீனா மற்றும் பாகிஸ்
ரப் பங்களிப்புகளை
இந்தியா தவறியுள்ள
லாபாய விமர்சகரான
திப்படுத்தியுள்ளார்.
2004இல் இந்திய
ாவும் ஆட்சிப் பொறுப்
றும் தமிழ்நாட்டு அரசி
கயின் செல்வாக்கு
தொடர்பாகவும் நோர்

வேயின் அறிக்கையில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தியா, இலங்கையில் வாழும் தமிழ் மக்களின் அரசியல் அவாக்களுக்கு இப்போதும் தனது ஆதரவை வழங்குகின்றது. ஆனால் அதே பிரச்சினையை ராஜபக்ஷ அரசு இராணுவ வழியில் எதிர்கொள்வதற்கு முடிவு செய்தபோது அதற்கு எதிராக இந்தியா ஒருபோதும் அழுத்தம் கொடுக்கவில்லை என்பதும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஒட்டுமொத்தமாக இந்த அறிக்கையில் சமரச முயற்சி தொடர்பாக நோர்வே பெற்றுக் கொண்ட அனுபவங்கள் ஐந்து பிரதான தலைப்புகளின் கீழ் வகுக்கப்பட்டுள்ளன. அதாவது சமரச முயற்சியால் ஏற்படுத்தப்பட்ட எதிர்பார்க்காத மற்றும் தற்செயலான விளைவுகள், வன் மற்றும் மென் முறை அதிகார சக்திகளுக்கிடையில் பேணப்பட்ட சமநிலைகள், உரிமை அணுகுமுறை, அரசியலுக்காகப் பயன்படுத்தப்பட முடியாதிருந்த உதவி, மோதல் பரிந்துரைக்கான 'ஆசிய மாதிரி' பேன்றவையே அந்தப் பிரதான ஐந்து வகைப்பாடுகள்.

இந்த அறிக்கையின் படி, வெஸ்ட்பாலியன் (Westphallan) கருத்து முறைமையின் கீழ் தலையீடற்ற இறையாண்மை உருவாக்கப்பட்டிருந்தமை, மிகப் பலம் பொருந்திய அபிவிருத்தியடைந்து வரும் நாடாக இருந்தமை, தீவிரவாதத்தை ஒழிப்பதற்கு இராணுவ வழித் தீர்வை நாடியமை போன்றவற்றின் அடிப்படையில் மோதல் தவிர்புக்கான ஆசிய மாதிரிப் பரிந்துரைகள் உருவாக்கப்பட்டமை போன்றவையாலேயே அமைதி முயற்சிகள் தோல்வியடைந்தன.

**பிராந்திய நலன்களால் நசுங்கிய தமிழர்கள்**

போரால் நேரடியாகப் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் இந்தியா மற்றும் சீனா ஆகிய இரு நாடுகளின் பூகோள அரசியல் கொள்கை வகுப்புகளுக்கு இடையில் அகப்பட்டதாகவும், ராஜபக்ஷ அரசு இந்த நிலைப்பாட்டை தனது சுயநலத்துக்காகப் பயன்படுத்திக் கொண்டதாகவும் நோர்வேயின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையில் இருந்து எழும் கேள்வி, இலங்கை விவகாரத்தில் நோர்வே பெற்றுக் கொண்ட அனுபவத்திலிருந்து இந்தியா, எதனைக் கற்றுக் கொள்ள முடிந்துள்ளது? என்பதுதான்.

இலங்யையில் பெரும் விலை கொடுக்கப்பட்டும் - இந்தியாவின் அமைதி காக்கும் படையினரால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் தோல்வியைச் சந்தித்த பின்னர், இந்தியா இது போன்று எந்தவொரு மீள்மதிப்பீடுகளையும் மேற்கொள்ளவில்லை என்பது கவலைக்குரியது.

இந்தியா தனது வெளியுறவு மற்றும் பாதுகாப்புக் கொள்கைகள் தோல்வியடைந்தமைக்கான காரணங்களை ஆராய்ந்து கற்றுக் கொள்ளவேண்டும் என நோர்வேயின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

**மறுமதிப்பீடு தேவை**

அதாவது இந்திய அமைதி காக்கும் படையினரால் இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் பற்றி மீளாய்வு செய்து கொள்வதுடன், இறுதியில் இடம் பெற்ற ஈழப்போராட்டம் தொடர்பாகத் தன்னால் வரித்துக் கொள்ளப்பட்ட கொள்கை தொடர்பாகவும் இந்தியா மீளாய்வொன்றைச் செய்வது அவசியம்.

எந்தவொரு சமரச முயற்சியில் ஈடுபடும் போதும் அதனுடன் தொடர்புபட்டவன் மற்றும் மென் முறைசார் வளங்களுக்கிடையில் எத்தகைய சமநிலையை ஏற்படுத்திக் கொள்ளவேண்டும் என்பதில் நோர்வேயின் அனுபவங்கள் இந்தியாவுக்கு எச்சரிக்கையாக அமைந்துள்ளன.

இந்தியா தான் கண்ட தோல்விகளிலிருந்தும் நோர்வே பெற்றுக்கொண்ட தோல்விகளிலிருந்தும் பாடங்களைக் கற்றுக் கொள்வதில் தயக்கம் காட்டினால், இலங்கையை நோக்கி இந்தியா ஒருபோதும் உறுதிப்பாடான, பயனுறுதி மிக்க வெளியுறவு மற்றும் பாதுகாப்பு மூலோபாயக் கொள்கையை வகுத்துக் கொள்ள முடியாது.

# உலகம் நல்லதா? கெட்டதா?



உலகம் மிகவும் கெட்டுப் போய் விட்டது. அந்தக் காலத்தில் இந்த மாதிரி அக்கிரமம் நடக்குமா? என்று சொல்லி அலுத்துக் கொள்வார்கள் கொஞ்சப்பேர்.

''இந்த உலகம் மிகவும் முன்னேறி இருக்கிறது; அடுத்த கிரகத்துக்குப்போய் வீடு கட்டலாம் என்று யோசிக்கின்ற அளவுக்கு வந்துவிட்டோமே'' என்று சிந்திக்கும் அளவுக்கு வந்துவிட்டோமே என்று கூறுவார்கள் கொஞ்சப்பேர்.

அதுசரி, நிஜமாகவே இந்த உலகம் நல்லதா, கெட்டதா? என்று கொஞ்சம் நிதாகமாக யோசித்துப் பாருங்கள். உங்களுக்கு ஏதாவது பதில் கிடைக்கும். அப்படி ஒரு முடிவுக்கு வரவில்லை என்றால் அதற்காகக் கவலைப்பட வேண்டாம். வாருங்கள் இராமகிருஷ்ணரிடம் போவோம்.

அவர் இந்தக் கேள்விக்கு ஒரு கதை மூலம் பதில் சொல்லியிருக்கின்றார்.

உலகம் நல்லதா, கெட்டதா? என்று ஒருவர் பெரியவர் ஒருவரிடம் கேட்டார். அதற்கு அந்தப்பெரியவர், கேள்வி கேட்டவரையே நிமிர்ந்து பார்த்து, ''அதற்கு நான் பதில் சொல்கிறேன். அதற்கு முன்னால் நான் ஒரு கேள்வி கேட்கின்றேன். அதற்குப் பதில்'' சொல்லு என்றார்.

''சரி கேளுங்கள்'' என்றார் அவர்.

''பூனைக்கு பல் இருக்கின்றதே; அது நல்லதா, கெட்டதா?'' என்று கேட்டார். இதைக் கேட்டதும் அவர் குழம்ப ஆரம்பித்தார். '' என்னது? நாம் உலகம் நல்லதா கெட்டதா என்றுதானே கேட்டோம். அதற்கு இவர் பூனையின் பல் நல்லதா, கெட்டதா? என்று என்னிடம் திருப்பிக் கேட்கின்றாரே!'' என்று யோசித்தார்.

பின்னர் அவர் ''எனக்கு எதுவுமே புரியவேயில்லை'' நீங்களே பதில் சொல்லுங்கள் என்றார். அதற்கு அவர் விளக்கம் கொடுத்தார்.

''ஒரு பூனைக்கு இருக்கின்ற பல் நல்லதா, கெட்டதா? என்று கேட்டால் என்ன பதில் வரும்? யாரிடம் அந்தக் கேள்வியைக் கேட்கின்றோமே அதற்குத் தகுந்த மாதிரித்தான் பதில் வரும். பூனையின் பல் நல்லதா, கெட்டதா? என்று பூனையின் குட்டியிடம் கேட்டால் அது என்ன பதில் சொல்லும்.

''எனது அம்மாவுக்கு இருப்பது வெறும் பல் இல்லை. அது கருணையின் வடிவம். அந்தப் பல்லால்தான் பாதுகாப்பான இடங்களுக்கு என்னைக் கௌவித் தூக்கிச்செல்லும். எங்கள் அம்மாவிடம் இருப்பது பல்தான். அது இல்லை என்றால் நான் இல்லை;'' என்றுதானே பதில் சொல்லும்.

அதனால் பூனையின் பல் நல்லதா, கெட்டதா? என்று ஒரு எலியிடம் போய்க்கேளுங்கள். அது என்ன சொல்லும் தெரியுமா?

''பல்லா அது? இயமன். கடவுள் பூனையைப் படைத்ததோடு விட்டிருக்கக்கூடாதா? அதற்குப் பல்லை எதற்குப் படைத்தார். குத்தூசி மாதிரி. அந்தப் பல்லின் கொடுமையை என்னவென்று சொல்லுவது? கடிபடுகின்ற எனக்குத்தானே அதைப்பற்றித் தெரியும்'' என்று புலம்பும் எலி.

பூனையின் பல்லை குட்டிப்பூனை பார்க்கின்ற பார்வை ஒரு விதம்; எலி பார்க்கின்ற பார்வை வேறுவிதம்.

அதேமாதிரித்தான், இந்த உலகம் நல்லதா, கெட்டதா? என்று கேட்டால் இந்த உலகத்தின் தன்மையைப் பார்ப்பவர்களைப்'பொறுத்தது அது.

இந்த உலகம் உள்ளவரை இந்த உலகம் நல்லது என்று சொல்பவர்களும் இருப்பார்கள்.அதேமாதிரி இந்த உலகம் கெட்டது என்று சொல்பவர்களும் இருப்பார்கள்.

ஒருநாள் எப்போதும் சந்தோசமாக இருக்கின்ற இரண்டு பேர் சந்தித்துக் கொண்டனர். உங்கள் சந்தோசத்துக்கு என்ன காரணம் என்று ஒருவரை ஒருவர் பார்த்துக் கேட்டனர்.

''என் அத்தையின் பெண் பிள்ளை என்னைத்தான் திருமணம் செய்து கொள்வேன் என்று ஒற்றைக்காலில் உறுதியாகச் சொல்லி விட்டாள். அதுதான் நான் சந்தோசமாக இருக்கின்றேன் என்றார் ஒருவர்.

''என் அத்தையின் பெண் என்னைத் திருமணம் செய்யமாட்டேன் என்று உறுதியாகக் கூறிவிட்டாள். அதுதான் நான் சந்தோசமாக இருக்கின்றேன் என்றார் இன்னொருவர்.

**கோ.சுவாமிநாதன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் உள்ளூராட்சி வார நிறைவு நாள் நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப் படுகின்றனர். (100)

# பார்வையற்ற பிள்ளைகளுக்கு வழிகாட்டிய அன்னலட்சுமிக்கு நினைவாலயம் அமைக்கப்பட்டமையானது சிறப்பான விடயமாகும்

## நல்லை ஆதீன முதல்வர்

சுன்னாகம், டிசெ.15

வாழ்வில் பிரமச் சாரியத்தைக் கடைப்பிடித்தவாறு இல்லறத்தில் ஒரு தாய் ஆற்றக்கூடிய சிறப்பான பணியை ஆற்றி, பார்வையற்ற பிள்ளைகளை வளர்த்தெடுத்து நல்வழி காட்டிய ஒரு பெருந்தகை அமரர் செல்வி அன்னலட்சுமி சின்னத்தம்பி அம்மையார். அவருடைய நினைவு வாழும் இடத்தில் மனதை ஒரு நிலைப் படுத்தித் தியானிக்கும் வகையில் நினைவாலயம் அமைக்கப் பட்டுள்ளமை சிறப்பானதாகும். இவ்வாறுநல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள் தெரிவித்தார்.

சுன்னாகம் விழிப்புல வலுவிழந்தோர் வாழ்வகத்தின் நிறுவுநர் அமரர் கலாநிதி அன்னலட்சுமி சின்னத்தம்பி நினைவாக நினைவாலயத் திறப்பு விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை கலாநிதி ஆறு. திருமுருகனால் திறந்து வைக்கப்பட்டது. வாழ்வகத் தலைவர் ஆ. ரவீந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்நிழ்வில் கலந்துகொண்டு ஆசியுரை வழங்கும் போதே நல்லை ஆதீன முதல்வர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் உரையாற்றும் போது. தனது வாழ்க்கையைப் பார்வையிழந்த பிள்ளைகளின் மேம்பாட்டுக்காக அர்ப்பணித்த பெருமகளாக அவர் விளங்கினார். இந்த நினைவாலயம் அவரது பிள்ளைகள் மன ஒருமைப்பாட்டுடன் தியானிக்கின்ற ஒழுக்க விழுமியங்களைப் பேணுகின்ற இடமாக மிளிர்ந்து அவர்களை நல்ல சமூகப் பிரஜை களாக வளர்த் தெடுக்கும்- என்றார்.

இந்நிகழ்வில் 'உயிர்மை' என்ற சிறப்பு மலரொன்றும் வெளியிடப்பட்டது. இதனை யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைப் பேராசிரியர் கலைவாணி இராமநாதன் வெளியிட்டுவைத்து உரையாற்றினார். கலாநிதி ஆறு. திருமுருகன், வட மாகாண கல்விப் பணிப்பாளர் ப. விக்னேஸ்வரன், முன்னாள் மாகாண கல்விப் பணிப்பாளர் செல்வி தி. பெரியதம்பி ஆகியோர் வாழ்த்துரைகளை வழங்கினர். (எ-38)

# தேசிய வாசிப்பு மாதம் அனுஷ்டிக்கப்படுவதால் மாணவர்களின் கல்வி·அறிவு ஆற்றல் பெருகும்

## தென்மராட்சி பிரதேச சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்

வரணி, டிசெ.15

''தேசிய வாசிப்பு மாதம் ஏன் அனுஷ்டிக்கப்படுகின்றது. ஏன் அந்த நிகழ்வை கொண்டாடுகிறோம். அதன் பலா பலன்கள் என்ன? இது குறிப்பாக மாணவர்களின் அறிவு ஆற்றலை மேம்படுத்தவும் அதன் மூலம் மாணவர்கள் தம்மைக் கல்விப் பின்புலத்தில் முதன்மை நிலை வகிக்கவும் இந்த நிகழ்வுகள் பயன்படுகிறது'' என்றார் தென்மராட்சி பிரதேச சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி ஜெ.செல்வராணி''வரணி பொது நூலக தேசிய வாசிப்பு மாத பரிசளிப்பு நிகழ்வின் போது சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றும் போது: இந்தப் பிரதேசத்தில் நூலகங்கள் நான்கு பராமரிக்கப்பட்டு வருகின்றமை மகிழ்சியடையக் கூடிய விடயமாகும். வடமாகாணத்தில் 5 நூலகங்கள் சிறந்த நூலகங்களாகத் தெரிவு செய்யப்பட்டு அவை அண்மையில் கொழும்பில் வைத்து பரிசில்களைப் பெற்றுள்ளமை உங்களுக்குத் தெரியும். அந்த 5 நூலகங்களும் சாவகச்சேரி பிரதேசசபையின் நிர்வாகத்தில் இயங்குபவை என்பதில் பெருமையடைகின்றேன்.

தற்சமயம் மாணவர்களிடையே வாசிப்புப் பழக்கம் அருகி வருகின்றமை மன வேதனை யைத் தருகிறது. வருடத்தில் ஒரு மாதத்தை தேசிய வாசிப்பு மாதமாக அரசு அறிவித்து அது நிகழ்வுகளாகவும் பல இடங்களில் கொண்டாடப்பட்டும் வருகின்றது. ஒரு கிராமம் அபிவிருத்தியடைய வேண்டும்எனில், மக்கள் அறிவுசார் பிரஜைகளாக வளரவேண்டும். அதற்கு புத்தகங்களை அதிகம் வாசிக்க வேண்டும்.சாவகச்சேரி பிரதேச சபை 5 பிரதேச நூலகங்களைஅமைத்து மாணவர் கல்விப் பணிக்காக பெரிய பங்களிப்பை வழங்கிவருகின்றது. (எ-122)

# நிதியையும், நிபுணத்துவ ஆலோசனை வழிகாட்டலையும் வழங்குவதற்கு இலங்கை வங்கி தயாராக உள்ளது

## தலைவர் கலாநிதி காமினி விக்கிரமசிங்கா தெரிவிப்பு

அச்சுவேலி, டிசெ.15

யாழ். மாவட்ட மக்களின் தொழில் முயற்சிகளை நவீனமயப்படுத்தி ஏற்றுமதி பொருளாதாரக் கட்டமைப்புக்கு உரியதாக மாற்றுவதற்குரிய நிதி வளத்தையும், நிபுணத்துவ ஆலோசனை வழிகாட்டளையும் வழங்குவதற்கு இலங்கை வங்கி தயாராக உள்ளது. இதனை உரிய முறையில் பயன்படுத்தி தமது வாழ்க்கைத் தரத்தை மேல் நிலைப்படுத்திக் கொள்வதற்கு மக்கள் முன் வரவேண்டும் என இலங்கை வங்கியின் தலைவர் கலாநிதி காமினி விக்கிரமசிங்கா தெரிவித்தார்.

அச்சுவேலி இலங்கை வங்கிக் கிளையில் வாழ்வாதார மேம்பாட்டிற்கான குத்தகைச் சந்தை நிகழ்வு வங்கி முகாமையாளர் த.புவனேந்திரன் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே கலாநிதி காமினி விக்கிரம சிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில், இலங்கை வங்கி யாழ். மாவட்ட மக்களின் பொருளாதார வளர்ச்சிக்குச் சகல மட்டங்களிலும் நிதி உதவியையும்நிபுணத்துவ ஆலோசனையையும் மக்கள் உரிய முறையில் பயன்படுத்தி தமது தொழில் முயற்சிகளை மேம்படுத்திக் கொள்ள வேண்டும்.

யாழ். மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் உற்பத்திகள் வெளி மாவட்டங்களுக்கும், வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்பட வேண்டும். அதற்கு ஏற்ற தர நிலையில் தமது தொழில் முயற்சிகளை விரிவுபடுத்திக் கொள்ளவேண்டும். இதற்குக் குறைந்த வட்டியில்நிதிவளத்தை இலங்கை வங்கி வழங் கத்தயாராக இருப்பதோடு அதற்கான நிபுணத்துவ ஆலோசனையையும் வழங்கத்தயாராக இருக்கின்றது.

அச்சுவேலி இலங்கை வங்கிக் கிளை தேசிய மட்டத்தில் வங்கிகளுக்கு இடையே நடத்தப் பட்ட "கடன்வழங்கல் கடன் தொகையை மீளப் பெறல்'' வேலைத் திட்டத்தில் முதலாம் இடத்தை பெற்று மத்திய வங்கியின் பாராட்டையும் விருதையும் பெற்றுள்ளது என்றார். (எ-11)

# புதிய நிர்வாக உறுப்பினர் தெரிவு

வலி.வடக்கு,டிசெ.15

வடக்கு கிழக்கு மாகாண நிர்வாகக் கிராம அலுவலர்களின் தொழிற் சங்கக் கூட்டம் அண்மையில் கொழும்பில் இடம் பெற்றது. இக்கூட்டத்தில் பின்வருவோர் நிர்வாகக்குழு உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

தலைவர் நா. நவரத்தினராசா-யாழ்ப்பாணம், உப தலைவர் எ. ஆர்.நிஜமுதீன் -திருகோணமலை, செயலாளர் எஸ்.எ.பெர்ணான்டோ-மன்னார், இணைச்செயலாளர் ஆர்.ஸ்ரீஸ்கந்தராசா- மட்டக்களப்பு, பொருளாளர் என்.நசீர்- அம்பாறை.

மேலும் நிர்வாகக்குழு உறுப்பினர்களாக தெரிவுசெய்யப்பட்டோர் எம்.கோமளேஸ்வரன்-மட்டக்களப்பு, கே.விஜயரெட்ணம் -வவுனியா, வை.சந்திரசேகரம்-மன்னார், ஆர். ஒளித்திலகன்-முல்லைத்தீவு, கே.மகேந்திரன்-கிளிநொச்சி, வி.கே.சண்முகநாதன்- யாழ்ப்பாணம், எஸ். ஸ்ரீஸ்கந்தராசா- யாழ்ப்பாணம், ஆர்.அருந்தவச்செல்வம்-திருகோணமலை, ப.அன்ரனி-திருகோணமலை, கே.குருநாத பிள்ளை- மட்டக்களப்பு, கணக்காய்வாளர்-ஜே.தவராசா-திருகோணமலை. (எ-86)

# சைவ பரிபாலன சபையினரின் கட்டுரைப்போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம் சைபரிபாலன சபையினரால் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் குருபூசை தினத்தை யொட்டி நடத்தப்பட்ட பேச்சுப் போட்டி கட்டுரைப் போட்டி முடிவுகள் பின்வருமாறு:

**பேச்சுப்போட்டி**

கீழ்ப்பிரிவு:

முதலாம் இடம் லோஜிகா பரமேஸ்வரன்- மானிப்பாய் மகளிர் கல்லூரி, 2ஆம் இடம் மயூரகரன் கஜவரன்- அருணோதயக் கல்லூரி, 3ஆம் இடம் ரினோஜிதா திருக்கேதீஸ்வரன்- மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம்.

ஆறுதல்பரிசு:

விநோதினி செல்வரத்தினம்- உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, சிறிஸ்கந்தராசா ஜனுபன்- யாழ். இந்துக்கல்லூரி.

மத்திய பிரிவு:

முதலாம் இடம் தர்ஷா சிவனேந்திரன்-அருணோ தயக் கல்லூரி, 2ஆம் இடம் கணேசலிங்கம் நிரூபன்- சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி, 3ஆம் இடம் உதயமாலினி அருள்செல்வம்- நயினாதீவு ஸ்ரீகணேசா கனிஷ்ட மகாவித்தியா லயம்.

ஆறுதல்பரிசு:

இரவீந்திரன் சஞ்சீவ்- கொடிகாமம் திருநாவுக்கரசு- மகா வித்தியாலயம், சாந்திகா உருத்திரமூர்த்தி-கொக்குவில் இந்துக் கல்லூரி.

மேற்பிரிவு:

முதலாம் இடம் ஆன்டனியா செல்வராஜன்- கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தியாலயம், 2ஆம் இடம் மேகலா சூரியகாந் காந்தன்- வட்டுக்கோட்டை மத்திய கல்லூரி, 3ஆம்இடம்நிரூஜா சுப்பிரமணியம்- மகாஜனக் கல்லூரி.

ஆறுதல்பரிசு:

ரவீந்திரன் தினேஸ்- மானிப்பாய் இந்துக்கல்லூரி, ஜனகா நிக்கிலாஸ்- கிளி/களிநொச்சி மத்திய கல்லூரி.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பிஞ்சுகளின் தேவை உளநல மேம்படுத்தல்

யாழ். மாவட்ட வைத்தியசாலைகளில் பாடசாலை மாணவர்களுக்கான விசேட உளநல வைத்திய பிரிவுகள் ஆரம்பிக்க வேண்டுமென புத்திஜீவிகள் பலரும் கருத்து வெளியிட்டுள்ளனர்.

தென்மராட்சி வரணிப் பகுதியில் உளரீதியாகப் பாதிக்கப்பட்ட 15 வயது மாணவி ஒருவர் தற்கொலை செய்து கொண்ட விடயம் புத்திஜீவிகள் மத்தியில் பல்வேறுபட்ட கருத்துக்களைத் தோற்றுவித்துள்ளது.

மாணவப் பருவத்தில் 12 வயது தொடக்கம் 17 வயது வரையான காலப் பகுதியில் தாம் எடுக்கும் முடிவுகள் எல்லாமே சரியானவை என அவர்கள் எண்ணுகிற பருவமாகும். இந்த வயதில் எந்தவொரு ஆலோசனைகளையும் அறிவுரைகளையும் ஏற்றுக் கொள்ளக் கூடிய மனோபக்குவம் அவர்களுக்கு இல்லாமல் இருப்பதால் பல்வேறு விபரீதமான, தவறான முடிவுகளை அவர்கள் எடுக்க நேரிடுகிறது.

இந்தப் பருவத்தில் மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளில்குறைபாடுகள் காணப்பட்டால், அவர்களை ஆசிரியர்கள் ஏசுவதையோ அல்லது கண்டிப்பதையோ அவர்கள் விரும்பமாட்டார்கள். ஆசிரியர்களின் கண்டிப்பானது மாணவர்களின் சிந்தனையோட்டத்துக்கு எதிர்மறையான செயலாகவே காணப்படும். ஒரு மாணவரின் கல்விச் செயற்பாட்டில் குறைபாடு காணப்படின் அல்லது அவரது நடவடிக்கைகளில் மாற்றம் காணப்பட்டால் உடனடியாக அவரது பெற்றோரை அழைத்து அவர்களது குறைகளை ஆசிரியர்கள் தெரிவிக்க வேண்டும்.

ஆசிரியரால் மாணவரைப் பற்றித் தெரிவிக்கப்படும் கருத்தினை பெற்றோர் கலந்தா லோசித்து மாணவர்களக்குப் பாடத்திட் டத்தில் குறைபாடு ஏற்படக் காரணம் எதுவாக இருக்கலாதென நன்கு ஆராய்ந்து அதனை நிவர்த்தி செய்ய முயற்சிக்க வேண்டும். மாறாக தமது பிள்ளைகளை பெற்றோர் கண்டிக்கவோ, தண்டிக்கவோ கூடாது.

உதாரணத்துக்கு ஒரு மாணவன் ஒரு பாடத்தில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட பாடங்களில் குறைவான புள்ளிகள் பெற்றிருந்தால் ஆசிரியரால் அது பற்றித் தெரிவிக்கப்படும் கருத்துக்கு பெற்றோர்கள் செவிசாய்க்க வேண்டும். பின்னர் அதற்குரிய காரணத்தை அறிந்து குறித்த பாடங்களில் கூடிய புள்ளிகள் பெறுவதற்கான வழிமுறைகளை மாணவருக்குத் தெரியப்படுத்தி அவரின் சிந்தனையை ஒரு நிலைப் படுத்த முயற்சிக்க வேண்டும்.

இந்த இளவயதில் பெற் றோரின் அறிவுரைக்கும் ஏனையோரின் அறிவுரைக்கும் நிறைய வேறுபாடுகள் இருக்கின்றன. அதனைப் பிள்ளைகளும் இனங்காண்பார்கள். பரீட்சை முடிவுகளில் பெறுபேறுகள் குறைவாகக் கிடைக்கும் பட்சத்தில் சில மாணவர்கள் தற்கொலை முயற்சியில் ஈடுபட்டதை நாம் அறிவோம். பெற்றோரின் வழிநடத்தலில் உள்ள எதிர்மறையான தன்மைகளே இத்தகைய விபரீத முயற்சிகளுக்கு மாணவர்களைத் தூண்டுகின்றன.

ஒவ்வொரு பெற்றோரும் தமது பிள்ளைகள் பாடசாலையில் கற்று வரும் பாடங்களின் மதிப்பீட்டை, அவர்கள் பாடசாலைகளிலிருந்து கொண்டு வரும் கொப்பிகளை அடிக்கடி பார்த்தால் பிள்ளைகளின் நிலையை அவர்களின் குறைகளைப் புரிந்து கொள்ளலாம். படித்த பெற்றோர் பலர் கூட இவ்வாறு தம் பிள்ளைகளைக் கண்காணிப்பதில்லை. மாதத்தில் ஒரு தடவை, ஒரு தவணைக்கு ஒரு தடவை பரீட்சைகள் நடைபெற்று மதிப்பீட்டுப் புத்தகங்கள் மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. இந்த மதிப்பீட்டுப் புத்தகத்தில் உள்ள புள்ளிகளைப் பார்க்கும் பெற்றோர்கள் தம் பிள்ளைகள் குறைவான புள்ளிகள் பெற்றிருந்தால் அதனைக் கண்டிப்பார்களே தவிர குறைவான புள்ளிகள் பெறுவதற்கான காரணத்தைக் கண்டறிய முயற்சிப்பதில்லை.

அதனைச் சீர் செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் சில பெற்றோர் கூட தொடர்ந்து அடுத்து வரும் பரீட்சையில் கூடுதல் புள்ளிகள் பெற்றதும் தமது கண்காணிக்கும் செயற்பாட்டை குறைத்த விடுகின்றனர்.

ஆரம்பப் பிரிவு வகுப்புக்களில் பயிலும் பிள்ளைகளில் அக்கறை எடுக்கும் பெற்றோர் இடைநிலைப் பிரிவு வகுப்புக்களில் பயிலும் பிள்ளைகள் மீது பெரிதாக அக்கறை கொள்வதில்லை. பெற்றோரின் தீவிர கண்காணிப்பு இல்லையெனின் இடைநிலை வகுப்பு மாணவர்களின் கல்வித் தரம் குறைவடைந்துவிடுகிறது. மாண்வர்களின் உளநலம் பாதிப்பதற்கு பல்வேறு காரணங்கள் இருக்கின்றபோதிலும் பின்வரும் நிலையில் உள்ள மாணவர்களின் செயற்பாடுகளின் மீது ஆசிரியர்கள் கண்டிப்பாக முழுமையான கவனம் செலுத்தி, வாராந்தம் அவர்களது செயற்பாட்டினை அறிக்கையாகத் தயாரித்து வைக்க வேண்டும். அது மாணவர்களுக்கு எதிர்கால்த்தில் ஏற்படக் கூடிய பாதிப்புக்களைத் தவிர்க்கும் நிலையை உருவாக்க உதவும்.

1. பெற்றோரை இழந்த பிள்ளைகள்.

2. தாய் அல்லது தந்தை இரண்டாம் தாரம் திருமணம் செய்த குடும்பத்தைச் சேர்ந்த பிள்ளைகள்.

3.பெற்றோரின் கண் காணிப்பிலிருந்து விடு பட்டு இன்னொரு வீட்டில் தங்கியிருக்கும் பிள்ளைகள்.

4. தாய் அல்லது தந்தையின் உறவுகளின் வீடுகளில் தங்கியிருக்கும் பிள்ளைகள்.

5. படித்துக் கொண்டிருக்கும் வேளையில் மது போதையில் வந்து ரகளை செய்யும் தந்தையுள்ள குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகள்.

6. பாடசாலை சென்றுவரும்வேளையில் வீதியில் நிற்கும் இளைஞர்களின் அச்சுறுத்தல், பயமுறுத்தல்கள் போன்றவற்றினால் பாதிக்கப்படும் பெண் பிள்ளைகள்.

7. ஒரு குடும்பத்தின் உறவுகள் யாரும் தற்கொலை செய்து கொண்டால் அதனைப் பார்த்து அந்தச் சிந்தனையிலேயே வாழும் பிள்ளைகள்.

இவ்வாறான பல்வேறு காரணங்களால் பாதிக்கப்பட்ட இடைநிலைக் கல்வி மாணவர்களை இனங்கண்டு அவர்களைத் தீவிரமாக ஆசிரியர்கள் கண்காணிக்க வேண்டும்.

ஒவ்வொரு பாடசாலையிலும் உள வைத்தியத்துறையுடன் தொடர்புடைய ஆசிரியர்கள் பயிற்சியளிக்கப்பட்டு கடமை புரிகின்றனர். இந்த ஆசிரியர்கள் மேற்குறித்த பாதிப்புக்கு உள்ளான மாணவர்களை நிச்சயமாக இனங்கண்டு, கண்காணித்து, அவர்கள் பற்றிய தகவல்களை வாராந்தம் அறிக்கையாகத் தயாரிக்க வேண்டும். கண்காணிப்பின் போது வித்தியாசமான நடத்தையுடைய மாணவர்களை இனங்கண்டு உளநலத் துறை மருத்துவ நிபுணரிடம் அழைத்துச் செல்ல வேண்டும்.

யாழ். மாவட்டத்தில் உளநலத் துறைக்கான மருத்துவ நிபுணர்கள் குறைவாகவே உள்ளதால் இந்த நிபுணர்களால் பயிற்சியளிக்கப்பட்ட உளவளத்துறையாளர்கள் வாரத்தில் ஒரு தடவை ஒரு வைத்தியசாலையில் பாதிக்கப்பட்ட மாணவர்களின் உளநலத்தினை சரிபடுத்தும் நடவடிக்கையில் ஈடுபடுதல் வேண்டும். இவ்வாறான நடவடிக்கைகள் மூலம் மாணவர்கள் தவறான முடிவை எடுக்கும் சந்தர்ப்பங்களை இல்லாமல் செய்துவிடும் என்பது புத்திஜீவிகள் பலரின் கருத்தாகும்.

இந்தக் கருத்துக்கள் நல்ல பயனைத் தரும் என்பதால் உரிய அதிகாரிகள் கூடிய விரைவில் கவனம் எடுத்து எமது பிள்ளைளை நல்ல சிந்தனையுடன் வாழ வைக்க உதவ வேண்டும்.

இடைநிலைப் பிரிவு மாணவர்களும் எமது பிள்ளைகள் தான் என்ற சிந்தனை எம்மத்தியில் விழிப்புணர்வாக ஏற்பட்டால் இவ்வாறான இழப்புக்களைத் தடுக்க முடியும்.

**தென்னவன்**

## மரண அறிவித்தல்

### திருமதி செல்லம் இரத்தினசிங்கம்



பலாலி கிழக்கு, பலாலியைப் பிறப்பிடமாகவும் சங்கானை வீதி, அச்சுவேலியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி செல்லம் இரத்தினசிங்கம் 12.12.2011 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை-இளையபிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் சின்னையா-சின்னாச்சி தம்பதியரின் மருமகளும் இரத்தினசிங்கத்தின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்ற ஆச்சிப்பிள்ளை மற்றும் தெய்வானைப்பிள்ளை தங் கம்மா, ராசம்மா, செல்லையா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஶ்ரீகந்தராசா (லண்டன்), ஜெயக்கந்தராசா (லண்டன்), கேமளா, கேதினி ஆகியோரின் பாசமிகு தாயும் ரஞ்சினி, சசீந்தினி, பிரதீபன் (யாழ். மாநகரசபை), முகுந்தன் ஆகியோரின் மாமியும் நிவிதன் (லண்டன்), நிவிஷா (லண்டன்), நிதுஷன் (லண்டன்), நிலாஸ் (லண்டன்), றபீஷன், றாகீஷன், கஜறதன், காருன்யா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (15-12-2011) வியாழக் கிழமை மு.ப 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் ஈமக்கிரியைக்காக தீத்தாங்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**சங்கானை வீதி,**
**அச்சுவேலி.**

சி-6886 -3.6.9

**தகவல்:**
**இரத்தினசிங்கம் (கணவர்)**

Dr.Pimple
TRICHOLOGY CENTRE
Hair and Pimple Clinic
முகப்பருக்களுக்கு
International
Skin Peeling
சிகிச்சை முறைமூலம்
நிரந்தரத்தீர்வு

Care
எதிர்வரும் 16 ,17 ஆம் திகதிகளில் யாழ் கிளையில் மருத்துவ ஆலோசனை நடைபெறவுள்ளது.
வவுனியாவில் 19 ஆம் திகதியில்.... முன்பதிவுகளுக்கு -021 -2220288
V care Colombo - No.190, George R.De Silva Mawtha colombo 13.
V Care Colombo - No. 21, Frazer Avenue, Dehiwela. 011 - 4874854, 011 - 4376078, 011 - 2735715.
V Care Vavuniya - No. 162/5, Jaffna Road, Vavuniya. 024 - 4925807, 024 - 4924940.
V Care Jaffna - No. 26, Brown Road, Jaffna (Opposite Technical College). 021 - 4923416, 021 - 2220288.

## மரண அறிவித்தல்



### சின்னத்தம்பி நடேசு

வண்மேற்கு, பெரியதம்பிரான் கோயிலடியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி நடேசு நேற்று (14.12.2011) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி-கற்பகம் தம்பதியரின் புதல்வனும், காலஞ்சென்ற சின்னப்பொடி - நாகம்மா தம்பதியரின் மருமகனும், முத்துப்பிள்ளையின் அன்புக்கணவரும், கந்தையாவின் சகோதரரும் காலஞ் சென்ற இரத்தினசிங்கம், துரைசிங்கம் (மெக்கானிக் சிங்கம்), யோகேஸ்வரி ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற கிருஷ்ணாசாமி, எட்னா ரஞ்சினி ஆகியோரின் மாமனும், அருள்செல்வன் (பிரான்ஸ்), ஜெயச்சித்திரா, கிருஷ்ணகுமார் (அவுஸ்திரேலியா), சுமித்திரா (அவுஸ்திரேலியா), நந்தகுமார், கெமிதா, அஜந்தன், தர்சிகன் ஆகியோரின் அன்புப் பேரனும், பிரணவன் (பிரான்ஸ்), விதுஷன் (பிரான்ஸ்), நிரோசா (பிரான்ஸ்), றொனிசன், ஜெயசுயா, விதுசா ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.12.2011) வியாழக்கிழமை மு.ப 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**பத்திரகாளி கோயில் வீதி,**
**வண்மேற்கு, யாழ்ப்பாணம்.** (11880) (3.6.9)

**தகவல் :**
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலேசிய EVERSENDAI வியாபார குழுமத்துடன் இணைந்த



# டோஹா கட்டார்



## கிளைக்கு வெற்றிடங்கள் 100

நல்ல வசீகரமான தோற்றமுடைய 19 முதல் 40 வயதிற்குட்பட்ட
தமிழ் பேசத்தெரிந்தவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்

# கை உதவியாளர்கள் (ஆண்கள்)

சம்பளம்
QR 600 + இலவச சாப்பாடு + OT



AL/2541/Advt/16/11

கட்டார் ரியால் 1 = ரூபா 31/-

**சேவை நிபந்தனைகள்**

- ஒப்பந்தக்காலம் 02 வருடம்.
- உணவு, தங்குமிடம், மருத்துவம், போக்குவரத்து இலவசம்.
- நாளொன்றுக்கு 08 மணித்தியால வேலை மற்றும் மேலதிகநேரக் கொடுப்பனவு.
- ஒப்பந்த நிறைவில் திரும்பி வர விமான டிக்கட் இலவசம்.
- ஏனையவை கட்டார் தொழில் சட்டத்திற்கேற்ப.

நேர்முகப்பரீட்சை
டிசம்பர் 16 வெள்ளிக்கிழமை, 17 சனிக்கிழமை
தினங்களில் மட்டும்
**Green Grass** Hotel & Restaurant
No.33, Aseervatham Lane, Hospital Road, Jaffna.
மேற்குறிப்பிடப்பட்ட முகவரியில் நடைபெறும்

HOTLINE
**072 712 4415 / 072 312 4409**




அறவீடுகள்: வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவகம் அனுமதித்த கட்டணம் மாத்திரமே.



License No. 2541

## இக்ரா வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்

இல: 634 1/1 - 1/2, மருதானை வீதி, மருதானை, கொழும்பு-10. (ஆனந்தா கல்லூரிக்கு முன்னால்)
தொலைபேசி : 0094 115 544 333 தொலை நகல் : 0094 115 544 337
E-mail : info@ikralk.com

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உரும்பிராய் மூன்று கோயில்களில் காலத்தால் மூத்த கருணாகரப் பிள்ளையார்

(சென்றவாரத் தொடர்ச்சி)

மூன்று கோயில்களில் காலத்தால் மூத்த கல்வெட்டு ஆதாரங்களைக் கொண்ட கருணாகரப் பிள்ளையார் நம்பியவர்களுக்கு நல்லருள்பாலித்து அவர்களின் துன்பம் துயர் போக்கியதோடு பிறவிப் பிணி போக்கி தனக்கே உரிய தனித்துவத்தோடு துலங்கி வருகின்றார்.

ஈழத்து சைவ ஆலயங்களை டச்சுக்காரர் இடித்து அழித்த வேளையில் கருணாகரப் பிள்ளையார் ஆலயமும் சேதப்படுத்தப்பட்டதுண்டு. அந்தக் காலப்பகுதியில் மூல மூர்த்தியை மறைப்பதற்குத் தூக்கிச் சென்ற சிலர் அதனை நினைத்த பிரகாரம் தூக்கிச் செல்லமுடியாமையால் குறித்த இடத்தில் கைவிட்டுச் சென்றனர் அந்த வேளையில் விக்கிரகம் நிலத்தில் மறையுண்டு அந்நியர் கண் களுக்குப் படாமல் மறைந்து இருந்தது. டச்சுக்காரர் ஆட்சி அகன்று மீண்டும் சைவ ஆலயங்கள் புத்துயிர் பெற்ற காலப் பகுதியில் நிலத்தை அகழும் வேளை யில் விக்கிரகத்தில் மண்வெட்டி பட்ட தால் எதிர்பாராத ஓசை எழுந்தது. அதனையடுத்து விக்கிரகத்தில் இரத்தம் பீறிட்டுப் பாய்வதைக் கண்டு தொழிலாளர்கள் குறையிரந்து விநாயகப் பெருமானிடம் மன்னிப்புக் கோரி வழிபட்டு, மீண்ட விக்கிரகத்தை உரிய முறையில் பிரதிட்டை செய்து கோயில் கட்டி வழிபட்டதாகவும் ஆலயத்தின் அற்புதச் சிறப்புப் பற்றி கூறப்படுகின்றது. இது கர்ண பரம்பரைக் கதையாகப் பேசப்படுகின்றது.

அந்தணரின் பரம்பரைச் சொத்தாகவும் காலம் காலமாக அந்தணர்களே ஆலய தர்மகர்த்தாக்களாகவும் இருந்து பரிபாலனம் செய்து வரும் கருணாகரப்பிள்ளையாரின் ஆரம்பகால ஆலய பரிபாலகராகவும் பூசகராகவும் கருணாகர ஐயர் குறிப்பிடப்படுகின்றார். கருணாகர ஐயருக்குப் பின்னர் பரமஐயர் அப்புக்குட்டி ஐயர், வைத்தீஸ்வரக் குருக்களின் வழித்தோன்றலால் பரிபாலனம் செய்யப்பட்டு வருவதாகவும் ஆலயத்திருப்பணியை ஊர் மக்கள் அனைவரும் ஒருமித்து காலத்துக்குக் காலம் நியமிக்கும்



திருப்பணிச் சபை, ஆலயத்தை பரிபாலனம் செய்யும் பூசகர்களின் ஆலோசனைக்கு அமைய மேற் கொண்டு வருகின்றது.

அப்புக்குட்டி ஐயரின் காலத்தில் ஆலயத்துக்கு மகா மண்டபம், நிருத்த மண்டபம், தம்ப மண்டபம் என்பன நிர்மாணிக்கப்பட்டன. 1910ஆம் ஆண்டு உரும்பிராயைச் சேர்ந்த பிரபல வைத்தியர் வைரநாதன் வல்லிபுரம் கொடித்தம்பம் ஒன்றைச் செய்து கொடுத்தார். அந்த வருடம் தொடக்கம் ஆவணிச் சஷ்டியில் துவஜாரோகணத் துடன் மகோற்சவம் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது. 10 தினங்கள் நடைபெறும் வருடாந்த மகோற்சவத்தில் அடியவர்கள் தமது நேர்த்திக் கடன்களை நிறைவு செய்வதும் ஆலயத்தின் அயலில் உள்ள கிணற்றில் நீராடி ஆலயத்தை வழிபடுவதும் அடியவர்களின் ஆத்மிக ஈடேற்றத்துக்கு வழிப்படுத்துவதாக அமைந்துள்ளன.

இற்றைக்கு 50 வருடங்களுக்கு முன்பிருந்தே ஆலயத்தில் கூட்டுப் பிரார்த்தனையும் பஜனையும் நடைபெற்று வருகின்றன. வெள்ளிக் கிழமை தோறும் மற்றும் விசேட உற்சவங்களிலும் மகோற் சவ காலத்திலும் மாலை வேளைகளில் கூட்டுப் பிரார்த்தனையும் பஜனையும் நடைபெற்று வருகின்றன. பஜனை கூட்டுப் பிரார்த்த னையில் அடியவர்கள் ஒன்று திரண்டு ஆர்வத்தோடு பங்கு பற்றி வருகின்றனர்.

கருணாகரப் பிள்ளையார் ஆலயத்தில் பழமை வாய்ந்த கல்வெட்டு உண்டு. கல்வெட்டை வரலாற்றுத்துறை சிரேஷ்ட பேராசிரியர் கலாநிதி கா. இந்திரபாலா பார்வையிட்டு எழுத்துக்களை படியெடுத்து ஆய்வு செய்துள்ளார். கருணாகரப் பிள்ளையாரின் சிறப்புப் பற்றி புலவர்கள் பலர்பதியங்களைப் பாடியுள்ளனர். இந்த வகையில் இணுவில் சிதம் பரநாதப் புலவர் ஆசுகவி கல்லடி வேலுப் பிள்ளை ஆகியோர் உள்ளடங்கியவர்களின் பாடல்கள் இன்றும் படிக்கக் கூடிய வகையில் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. மிக உயர்ந்த தூலலிங்கமாகி மகா கோபுரத்துடன் கூடிய மூடு மண்டபம் உட்பிரகாரத்தையும் திராவிடச் சிற்பக் கலை நுட்பத்துடன் கூடிய அலங்கார வளைவுடன் கூடிய முகப்பு மண்டபத்துடனும் கூடிய கருணாகரப் பிள்ளையாருக்கு அழகான சித்திரத்தேர் அமைக்கப்பட்டு 2010ஆம் ஆண்டு வெள்ளோட்டம் விடப்பட்டதோடு கருணாகரப் பிள்ளையார் புதிய சித்திரத் தேரில் ஆரோகணித்து அடியவர்களுக்கு அருள் பாலித்து வருகின்றார்.

ஆலயத்தின் திருப்பணி வேலைகளிலும் வைதீக கிரியைகள் உற்சவங்களை உரிய முறையில் மேற்கொள்வதிலும் ஆசிரியமணி அ.பஞ்சாட்சரத்தின் பங்கும் பணியும் பசுமையுடன் நினைவு கூரப்படுவதோடு ஆசிரியமணி வாழ்நாள் முழுவதும் கருணாகரப் பிள்ளையாரின் மெய்யடியாராக

ஞானஆதவன்

வாழ்ந்து பணியாற்றியுள்ளார். 2007 ஆம் ஆண்டு ஆசிரியமணியின் மறைவை அடுத்து அவர் மேற்கொண்டு வந்த பணிகளை ஆசிரியமணியின் பெறாமகனும் உரும்பிராய் இந்துக் கல்லூரியின் அதிபருமான அ.ஈஸ்வரநாதன் பொறுப்பேற்று மேற்கொண்டு வருகின்றார்.

கருணாகரப்பிள்ளையார் அருள் பெற்று உய்வோமாக.

(முற்றும்)

**கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி கோயில் (புதுக்கோயில்)**

**விசேட பொதுக்கூட்ட அறிவித்தல்**

மேற்படி கோயிலை பாலஸ்தாபனம் செய்ய இருப்பதால் அதற்கான குழு ஒன்று அமைப்பதற்காக 31.12.2011 சனிக்கிழமை பி. ப. 3 மணிக்கு ஆலய மண்டபத்தில் விசேட பொதுக்கூட்டம் நடைபெறவுள்ளது. இக்கூட்டத்தில் அங்கத்தவர்கள் யாவரும் பங்குபற்றுமாறு தயவாக வேண்டிக் கொள்கின்றேன்.

செ. செல்வரஞ்சன்,
செயலாளர்.

ச. பாலாபரணம்,
தலைவர்.

கொக்குவில் கிருபாகர
சிவசுப்பிரமணியசுவாமி கோயில்,
காங்கேசன்துறை வீதி, கொக்குவில்.

**பணிப்பெண் தேவை**

நாள்தோறும் வந்து போய் வேலை செய்யக் கூடிய (வீட்டுவேலை) பணிப் பெண் தேவை. சம்பளம் நாளுக்கு ரூபா 350/=
தொடர்பு: 0217900637

## ஓராண்டு நினைவஞ்சலி

திருமதி மகேஸ்வரி சுந்தரமூர்த்தி



தோற்றம்: 03.03.1944

திதி: கார்த்திகை திங்கள் பஞ்சமி

மறைவு:26.11.2010

இந்த மண்ணில் பெரு வாழ்வு வாழ்ந்து குடும்பத்தை வழி நடத்தி வாழும் காலத்தில் எமக்கு உறுதுணையாக விளங்கி வந்ததை நாம் மறக்காது உங்கள் நினைவுகளுடனே வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். அம்மையாரின் ஆத்மா பண்ணாகம் விசவத்தனை வேலவர் பாதத்தை பற்றி வாழ்வார் என்று ஆறுதல் பெறுகின்றோம்- பிரார்த்திக்கின்றோம்.

கடந்த 26.11.2010 அன்று இறைபதம் எய்திய எம் குடும்பத்த தலைவி அவர்களின் ஓராண்டு நினைவு தினம் இன்று (15.12.2011) வியாழக்கிழமை எமது இல்லத்தில் மு.ப. 10 மணிக்கு இடம்பெறும் ஆத்மாசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கணவர் : சு. சுந்தரமூர்த்தி குடும்பம்,
க. அருமைநாதன் குடும்பம் (டென்மார்க்)

பண்ணாகம்,
சுழிபுரம்.

(11667)(6-8-8)

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து




யாழ்ப்பாணம், கலைப்புலவர் வீதியைச் சேர்ந்த
திரு.திருமதி ஜெயசீலன்-தாரிணி தம்பதிகளின்
செல்வப் புதல்வி அர்ஷஹி (ARSHAHI)

தனது முதலாவது பிறந்த நாளை இன்று (15.12.2011) வியாழக்கிழமை இறைவன் ஆசியுடன் கொண்டாடுகின்றார். எமது பட்டுக் குட்டியை தாத்தா, அம்மம்மா, அப்பப்பா, அப்பம்மா, ராணி பெரியம்மா, தித்தி பெரியப்பா, லக்கி மம்மி, பபி மாமா, வதனி மாமி, நித்தி பெரியப்பா, றோசி மம்மா, சுவீற்றி மம்மா மற்றும் குட்டிகள் ஹனி, ப்ருது, அஹி, ஷஞ்சு, ஷர்ஜா, ஸ்ரீஸ், ஷனா, ஷரா ஆகியோர் சந்நிதி முருகன் துணையுடன் சகல ஐஸ்வர்யங்களுடன் நோய் நொடியின்றி நீடூழி வாழ வாழ்த்துகின்றனர்.

18, கலைப்புலவர் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
A.P.சுப்பிரமணியம் (தாத்தா)

(11618) (6,9,10)

## 20 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் செல்லத்துரை கனகசபாபதி

(முன்னாள் உதவி அரசாங்க அதிபர், ஒட்டுசுட்டான்)



தோற்றம்: 22.03.1941

திதி: கார்த்திகை மாத அபரபக்கப் பஞ்சமி (இன்று)

மறைவு: 26.11.1991

இருபதென்ன ஈராயிரம் சென்றாலும்
ஈர நினைவுகள் என்றும் எம்முடன்....

அரசகேசரி விநாயகர் வீதி,
நீர்வேலி.

குடும்பத்தினர்.

(சி/6871)(6,8,9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைமைப் போட்டியை பேசித் தீர்க்க ஐ.தே.க.நடுநிலைக்குழு வலியுறுத்து

கொழும்பு,டிசெ.15

கட்சிக்குள் பூதாகரமாக உருவெடுத்துள்ள தலைமைத்துவப் பிரச்சினையை போட்டியின்றி சுமுகமான முறையில் தீர்த்துக்கொள்ளுமாறு கோரி ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு அக்கட்சியில் நடுநிலைமை வகிக்கும் 15 பேர் அடங்கிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவொன்று எழுத்துமூலம் கோரிக்கை விடுக்கவுள்ளது.

லக்ஷ்மன் கிரியெல்ல, கபீர் ஹாசீம், பாலித ரங்கே பண்டார, விஜயதாஸ ராஜபக்ஷ ஆகியோர்உள்ளடங்கிய குழுவே நேற்று புதன்கிழமை உத்தியோக பூர்வமாக இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளது.

கட்சித் தலைவர், எதிர்க்கட்சித் தலைவர் ஆகிய பதவிகளை ரணிலும், கருவும் பகிர்ந்துகொள்ளவேண்டும் எனவும், இதில் யார் எந்தப் பதவியை வகிப்பது என்பது தொடர்பாக இறுதி முடிவை அவர்களே எடுக்கவேண்டும் என்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு சுட்டிக்காட்டியுள்ளது.

கட்சியின் எதிர்கால அரசியல் நடவடிக்கைகளை ஆராயும்பொருட்டு கடந்த திங்கட்கிழமை ஐக்கிய தேசியக் கட்சியில் நிடுநிலை வகிக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவொன்று கூடி பல்வேறு விடயங்கள் குறித்து விரிவாகக் கலந்துரையாடியுள்ளது. நாடாளுமன்றக் கட்டடத்தொகுதியில் இடம்பெற்ற சந்திப்பிலேயே தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

உட்கட்சிப்பூசல் வலுத்து கட்சிக்குள் தலைமைத்துவப் பிரச்சினை பூதாகரமாக உருவெடுத்து ரணிலும்,கருவும்முட்டி மோதும் நிலையில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளதானது முக்கியத் துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகின்றது. (ச)

# சர்வதேச மத்தியஸ்த நிலையம் கொழும்பில்

## அமைச்சர் ஹக்கீம் தகவல்

கொழும்பு,டிசெ.15

சர்வதேச மத்தியஸ்த நிலையமொன்று அடுத்த வருடம் கொழும்பில் நிறுவப்படவுள்ளதாக நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

அவர் நீதி அமைச்சில் நேற்று புதன்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்த நிலையம் உலக வர்த்தக மைய கட்டடத் தொகுதியிலேயே அமைக்கப்படவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் முதலீட்டு சபையுடனும் நீதி அமைச்சு பேச்சு நடத்துவதாக அவர் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையம் நிறுவப்பட்டால் பிணக்குகள் தொடர்பான சட்டத் தரணிகளின் வருகை அதிகரிக்கும் என்று அவர் குறிப்பிட்டார். இதற்குத் தேவையான நிதியுதவியினை உலக வங்கி வழங்கவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச)

# அரசின் அடாவடிக்கு ஐ.தே.கவின் பலவீனமே காரணம்: சுமங்கலதேரர்

கொழும்பு,டிசெ.15

ஐக்கிய தேசியக் கட்சி பலவீனமாக இருப்பதனாலேயே அரசு தான்தோன்றித்தனமாகச் செயற்படுகிறது என்று மல்வத்த மகாநாயக்கர் வண. திப்பட்டுவாவே சிறி சுமங்கல தேரர் நேற்றுமுன் தினம் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் கண்டிக்குச் சென்ற ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜயசூரிய தலைமையிலான குழுவினர் மல்வத்தை மற்றும் அஸ்கிரிய பீடங்களின் மகாநாயக்க தேரர்மாரைச் சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

கட்சியின் உறுப்பினர்கள் பலர் விடுத்த வேண்டுகோளுக்கமையவும், நாட்டின் தற்போதைய நிலைமையைக் கருத்திற்கொண்டு தாம் கட்சியின் தலைமைப் பதவிக்காகப் போட்டியிடத் தீர்மானித்துள்ளார் என்று இங்கு மகாநாயக்க தேரர்களிடம் சுட்டிக்காட்டிய கரு ஜயசூரிய, கட்சியை பலப்படுத்தி நாட்டில் ஜனநாயக ஆட்சியொன்றை ஏற்படுத்துவதே தமது நோக்கமென்றும் தெரிவித்துள்ளார்.

இங்கு கருத்து வெளியிட்டுள்ள மல்வத்த மகாநாயக்க தேரர், ஐ.தே.க. தலைவர்கள் பதவிகளில் தொங்கிக்கொண்டிருக்காமல், மக்கள் குறித்தும் கட்சி உறுப்பினர்கள் தொடர்பிலும் நினைத்துப் பார்த்துச் செயலாற்றவேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

(ஒ-சி)

# போலித் தங்கக் குற்றியை விற்க முயன்றவர் கைது

கொழும்பு,டிசெ.15

போலி தங்கக் குற்றி ஒன்றினை 250 லட்சம் ரூபாவுக்கு விற்பனை செய்ய முயற்சித்த சந்தேகநபர் ஒருவரை கெக்கிராவைப் பொலிஸார் நேற்று புதன்கிழமை கைது செய்துள்ளனர்.

இந்தவிடயம் தொடர்பில் பொலிஸாருக்குக் கிடைத்த தகவல் ஒன்றின் அடிப்படையில் சந்தேகநபரைக் கைது செய்தனர்.

சந்தேகநபர் களுத்தறை, தொடங்கொடை பிரதேசத்தை சேர்ந்தவர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ச)

# பதவி மாற்றம் எதுவும் நடக்காது

## ரணில் தெரிவிப்பு

கொழும்பு,டிசெ.15

இலங்கையின் எதிர்க்கட்சித் தலைவர் பதவியில் எவ்வித மாற்றங்களும் ஏற்படாது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுபுதன் கிழமை ஆளும்கட்சி பிரதம கொரடா தினேஸ் குணவர்த்தன எழுப்பிய கேள் விக்குப் பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

எதிர்கட்சித் தலைவர் பதவிக்கு ஒருவரையும் கட்சித் தலைவர் பதவிக்கு ஒருவரையும் நியமிக்க எதிர்பார்த்துள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளதை ஊடகங்கள் ஊடாக வெளிவந்துள்ளது என்று தினேஸ் குணவர்த்தன குறிப்பிட்டுள்ளார்.

இந்தமுறை வரவு - செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யும்போது எதிர்கட்சித் தலைவர் மற்றும் ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ஆகியோருக்கு வெவ்வேறாக நிதி ஒதுக்க வேண்டி ஏற்பட்டால் அது தொடர்பில் முன்கூட்டியே அறிவிக்குமாறு அமைச்சர் தினேஸ் குணவர்த்தன ரணில் விக்கிரமசிங்கவிடம் கேட்டுக்கொண்டார்.

இதற்கு பதிலளித்த அவர் அரசில் மாற்றம் ஏற்படுமே தவிர எதிர் கட்சிப் பதவிகளில் அல்ல என்று தெரிவித்துள்ளார். (ச)

பாராட்டி வாழ்த்துகிறோம்

விக்கினேஸ்வரன் பாலசேந்தன்



இந்த வருடத்திற்கான தேசிய மட்ட ஆசிரியர் தின விளையாட்டுப்போட்டியில் 100m ஓட்டத்தில் தங்கம், 200m ஓட்டத்தில் வெள்ளி, (4X100) அஞ்சலில் வெள்ளி ஆகிய பதக்கங்களை வென்று சாதனை படைத்த எமது ஆசிரியர் வி.பாலசேந்தன் அவர்களை உளமாரப் பாராட்டுவதோடு மேலும் உயரிய பல விருதுகள் பெற்று வாழ்வாங்கு வாழ பாராட்டுகின்றோம்.

ஆசிரியர் நலன்புரி மன்றம்,
மு/வள்ளிபுனம் கனிஸ்ட உயர்தர வித்தியாலயம்.

(C/6878) (6,9,10)

Children's World
Pre School
ஆங்கில மொழி பாலர் பாடசாலை
Open The Door To Your Child's Future

சிறுவர் அபிவிருத்தி மகளீர் விவகார அமைச்சின் தேசிய கொள்கைக்கு அமைவானது

- Language Development
- Knowledge Development
- Skill Development
- Values Development
- Speach & Drama Class.
- Gama Abacus in Rainbow Programme.

[மனக்கணிதம், ஞாபகக் கலை என்பவற்றை விருத்தி செய்யும் விசேட பயிற்சி நெறி]

ஆரம்பம் 04.01.2012

அனுமதிகள் 2 1/2 வயது முதல்



K.K.S. வீதி கோண்டாவில் மேற்கு
[உபதபாலகம் அருகில்]
முன் அனுமதிக்கு
0777729525

இலங்கையில் உள்ள ஒரே ஒரு தலைமுடியியல் சிகிச்சை மற்றும் ஆராய்ச்சிமையம் இதுவே

V Care

DR.HAIR
TRICHOLOGY CENTRE
Hair and Scalp Clinic



தலைமுடி உதிர்தல். ஆண்.பெண் வழுக்கை. பொடுகு. இளநரை. புளுவெட்டு. Psoriasis போன்ற பிரச்சினைகளுக்கு இலங்கை. இந்திய மருத்துவர்களின் நேரடி கண்காணிப்பில் சிகிச்சை வழங்கப்பட்டு வருகின்றது.

தலைமுடி உதிர்வதை எண்ணி கவலையா..? கவலையை விட்டுத்தள்ளுங்கள்!

எதிர்வரும் 16 ,17 ஆம் திகதிகளில் யாழ் கிளையில் மருத்துவ ஆலோசனை நடைபெறவுள்ளது.
வவுனியாவில் 19 ஆம் திகதியில்.... முன்பதிவுகளுக்கு -021 -2220288

V Care Colombo - No.190, George R.De Silva Mawatha colombo 13.
V Care Colombo - No. 21, Frazer Avenue, Dehiwela. 011 - 4874854, 011 - 4376078, 011 - 2735715.
V Care Vavuniya - No. 162/5, Jaffna Road, Vavuniya. 024 - 4925807, 024 - 4924940.
V Care Jaffna - No. 26, Brown Road, Jaffna (Opposite Technical College). 021 - 4923416, 021 - 2220288.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் பட்ட சிங்கள காயமே ஆறவில்லை அதற்குள் கேரளமும் தமிழனைச் சீண்டுவதா

## வைரமுத்து ஆவேசம்

சென்னை,டிசெ.15

''தமிழர்கள் பட்ட சிங்களக் காயமே இன்னும் ஆறவில்லை. அதற்குள் முல்லைப் பெரியாறு அணை விவகாரத்தில் கேரளா எமது இனத்தைக் கீறுவதா?'' என்று கவிஞர் வைரமுத்து ஆவேசத்துடன் தெரிவித்தார்.

முல்லைப் பெரியாறு பிரச்சினை தொடர்பாக கவிஞர் வைரமுத்து விடுத்த அறிக்கை ஒன்றிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

முல்லைப் பெரியாறு பிரச்சினை நாளுக்குநாள் தீவிரம் அடைவது கவலை தருகிறது. அந்தத் தண்ணீர் குடித்து வளர்ந்தவன் என்பதால் இன்னும் அதிகமாக வலிக்கிறது.

கேரளம் ஒன்றை மறந்து விட்டது. முல்லைப் பெரியாற்று தண்ணீரில் கேரள சகோதரனுக்கும் சேர்த்துத்தான் எங்கள் தமிழன் நெல் விளைவிக்கிறான். மரக்கறியைப் பயிரிடுகிறான்.

கேரளம் தமது உணர்வுக்கு எதிராகவும், எமது உணர்வுக்கு எதிராகவும் நடந்து கொள்வ



தில் என்ன நியாயம்? உடைந்த சோவியத் யூனியன் என் நினைவில் வருகின்றது. மூன்றாம் உலகப் போர் மூண்டால், அது தண்ணீருக்காகத்தான் இருக்கும் என்ற கணிப்பு ஒன்று உண்டு.

அந்தப் போர் எங்குமே நிகழக் கூடாது. குறிப்பாக, இந்தியாவில் ஆரம்பிக்கக் கூடாது. அணை பலவீனமாகி விட்டது என்ற உண்மைக்குப் புறம்பான குற்றச்சாட்டு சொல்லப்பட்டு 33 ஆண்டுகள் கழிந்து விட்டன.

அதன்பின்னர் நவீன தொழில் நுட்பத்தோடு அணையும் வலிமைப் படுத்தப்பட்டு இருக்கிறது. 33 ஆண்டுகள் உடையாத அணையை உங்கள் சுய நலம் உடைக்கப் பார்க்கிறது. எங்களைப் போன்ற படைப்பாளிகள் கலக்கத்தோடு கவனித்துக் கொண்டிருக்கிறோம். நியாயத்தின் அடிப்படையில் தமிழர்களுக்கு சாதகமாக ஒரு நிரந்தரத் தீர்வு இதில் எட்டப்படாவிட்டால், எம்மைப் போன்றவர்களையும் காலம் களத்தில் இறக்கிவிடலாம்.

பச்சைத்தமிழ்நாடு பாலைவனமாக சம்மதிக்க மாட்டோம். போராடுவோம். முல்லைப் பெரியாற்றை விடமாட்டோம். மலையாளிகளை அணுகமாட்டோம் என்ற முழக்கத்தோடு முன்னேறுவோம்.

தமிழர்கள் பட்ட சிங்கள காயமே இன்னும் ஆறவில்லை. அதற்குள் கேரளா வேறு எங்கள் இனத்தைக் கீறுவதா? விதியே விதியே என் செய நினைத்தாய் தமிழ் சாதியை? தமிழ் இனமே ஒன்றுபடு. இந்திய அரசே தலையிடு - என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (வ)

# வலுவான ஜன லோக்பாலில் பிரதமரை இணைக்க வேண்டும்

## மாயாவதி கருத்து

இந்தியாவில் சமூக சேவகர் அன்னா ஹசாரேவின் வலுவான ஜன லோக் பாலில் பிரதமர் இடம்பெறவேண்டும் என்று உத்தரப் பிரதேச மாநில முதல்வர் மாயாவதி கூறியுள்ளார்.

இந்திய மாநிலமான உத்தரப்பிரதேச முதல்வர் மாயாவதி செய்தியாளர்களுக்கு பேட்டியளிக்கையில்:

உத்தரப்பிரதேச அரசு ஊழலுக்கு எதிராக கடும் நடவடிக்கைகளை எடுப்பதில் முன்னிலையில் உள்ளது.

இந்தியாவில் வலுவான ஜன லோக்பால் பிரேரணையை எதிர்ப்பதன் மூலம் காங்கிரஸ் கட்சி ஊழல் செய்துள்ளது என்பது உறுதியாகியுள்ளது.

மேலும் நான் முதல்வராக இருக்கும் நேரத்தில் பல ஊழல் அதிகாரிகளின் மீது நடவடிக்கை எடுத்துள்ளேன்.



வலுவான ஜன லோக்பால் பிரேரணையில் பிரதமர் மற்றும் மத்திய புலனாய்வுத் துறையை சேர்க்க வேண்டும் என்பதை பகுஜன் சமாஜ் கட்சி வலியுறுத்தும்.

எனவே வலுவான லோக்பால் பிரேரணையில் மத்திய அரசு தேவையான மாற்றங்களை மேற்கொள்ள வேண்டும் - என்றார். (வ)

# கேரள, தமிழக அரசுகளின் மனு உச்ச நீதிமன்றத்தால் நிராகரிப்பு

## முல்லைப் பெரியாறு அணை விவகாரம்

சென்னை, டிசெ.15

இந்திய மாநிலமான கேரளாவில் உள்ள முல்லைப்பெரியாறு விவகாரம் தொடர்பாக கேரள தமிழக அரசுகள் தாக்கல் செய்த மனுவை உச்ச நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

கேரளாவில் உள்ள முல்லைப் பெரியாறு அணை விவகாரம் தொடர்பாக உச்ச நீதிமன்றத்தில் தமிழக மற்றும் கேரள அரசுகள் மனுக்களை தாக்கல் செய்திருந்தன.

இந்த மனுக்களின் மீதான விசாரணை நீதிபதிகள் டி.கே.ஜெயின், ஆர்.எம்.லோதா, தீபக் வர்மா, சி.கே.பிரசாத் மற்றும் ஏ.ஆர்.டேவ் ஆகியோர் அடங்கிய அமர்வு முன்பு நேற்று முன்தினம் பிற்பகல் 3.30 மணிக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன.

விசாரணையின்போது முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை 136 அடியில் இருந்து 120 அடியாகக் குறைக்கக் கோரும் கேரள அரசின் மனுவை விசாரித்த நீதிபதிகள், அணையின் நீர்மட்டத்தை நிர்ணயிப்பது, பாதுகாப்பு ஆகியவை குறித்து ஆராய முன்னாள் உச்ச நீதிமன்ற நீதிபதி ஏ.ஏஸ்.ஆனந்த் தலைமையில் குழு அமைக்கப்பட்டுள்ளது.

இந்தக்குழுவின் 2 தொழில் நுட்ப நிபுணர்கள் எதிர்வரும் 21 ஆம் 22 ஆம் திகதிகளில் அணையை நேரில் சென்று பார்வையிடவுள்ளனர். எனவே இந்த நிலையில் கேரள அரசின் மனுவுக்கு அவசியம் இல்லை என்று தெரிவித்தனர்.

மேலும் ஏ.ஆஸ்.ஆனந்த் தலைமையிலான குழுவின் அறிக்கையே இறுதியானது என்றும் நீதிபதிகள் தெரிவித்துள்ளனர். இதையடுத்து கேரள சட்டத்தரணி தனது மனுவை திரும்பப் பெறுவதாக தெரிவித்ததையடுத்து மனு திரும்பப் பெறப்பட்டு நிராகரிக்கப்பட்டதாக நீதிபதிகள் அறிவித்தனர்.

இதேபோல முல்லைப் பெரியாறு அணையின் பாதுகாப்புக்கு மத்திய தொழிலக பாதுகாப்புப் படை வீரர்களை நிறுத்த வேண்டும் என்ற தமிழகம் மற்றும் தி.மு.கவின் கோரிக்கை குறித்து நாளை வியாழக்கிழமைக்குள் விளக்கம் அளிக்குமாறும் மத்திய அரசுக்கு நீதிபதிகள் உத்தரவிட்டுள்ளனர். (வ)



நடந்த 2001 ஆம் ஆண்டி நாடாளுமன்ற தாக்குதல் சம்பவத்தின் போது வீரமரணம் அடைந்த பாதுகாப்புப்படையினருக்கு நாடாளுமன்ற வளாகத்தில் மலரஞ்சலி செலுத்தினார் காங்கிரஸ் கட்சித்தலைவர் சோனியா.

# கள்ளச்சாராயம் குடித்த 7பேர் சாவு

கன்னிங், டிசெ.15

மேற்கு வங்க மாநிலம் தெற்கு பர்கனாஸ்' மாவட்டத்தில் கள்ளச் சாராயம் குடித்த 7 பேர் பலியாகி உள்ளனர்.

மேலும் பலரின் உடல் நிலை பாதிக்கப்பட்ட நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

கள்ளச்சாராயம் குடித்ததால் வயிற்று வலி, வாந்தி மற்றும் வயிற்றுப் போக்கு ஆகியவற்றால் கடுமை யாகப் பதிக்கப்பட்டிருந்த 7 பேரும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக டாக்டர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தச்சம்பவத்தால் கோபமடைந்த உள்ளூர் மக்கள், சம்பந்தப்பட்ட சாராயக் கடையை அடித்து நொருக்கி சேதப்படுத்தியுள்ளனர். (வ)

# திருப்பதி ஏழு மலையானுக்கு குண்டு துளைக்காத கதவுகள்

## தீவிரவாதிகள் மிரட்டல்

நகரி, டிசெ.15

திருப்பதி ஏழுமலையான் கோயிலுக்கு வரும் பக்தர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இந்தக் கோயிலுக்கு தீவிரவாதிகள் மிரட்டல் இருப்பதாக மத்திய-மாநில உளவுத் துறைகள் எச்சரிக்கை விடுத்திருந்தன.

இதையடுத்து கோயிலில் பாதுகாப்பை அதிகரிக்க தேவாஸ்தாணம் திட்ட மிட்டுள்ளது. கோயிலில் பாதுகாப்பை பலப் படுத்துவது பற்றி தேவஸ்தான் அதிகாரிகள் ஆலோசனை நடத்தினர். பின்னர் தேவஸ்தான பாதுகாப்பு அதிகாரி எம்.கே.சிங் செய்தியா ளர்களிடம் கூறுகையில்:திருப்பதி கோயிலைச் சுற்றி 24 மணி நேரமும் துப்பாக்கி ஏந்திய பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

கோயிலுக்குள் செல் போன் மற்றும் மின்னியக்கப் பொருள்கள் கொண்டு செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது. ஆனாலும் பாதுகாப்பை மீறி சிலர் செல்போன்களுடன் கோயிலுக்குள் சென்று விடுகிறார். (வ)

# மஹாராஷ்டிராவில் விமான விபத்து விமானிகள் மயிரிழையில் தப்பினர்

இந்திய மாநிலமான மஹாராஷ்டிரா மாநிலத்தின் முக்கிய நகரான புனே அருகே நேற்று முன்தினம் பிற்பகல் விமானம் ஒன்று விபத்துக்குள்ளானது.

மஹாராஷ்டிரா மாநிலத்தில் முக்கிய நகரான புனே அருகே உள்ள வதீபோலாய் கிராமத்தில் இந்திய விமானப் படைக்குச் சொந்தமான விமானம் ஒன்று நேற்று முன்தினம் பிற்பகலில் கீழே விழுந்து விபத்துக்குள்ளானது.

புனேவின் லோஹிகாவோன் விமானத் தளத்தில் இருந்து பிற்பகல் 12.45 மணியள வில் புறப்பட்ட இந்த விமானம் சில நிமிடங்களிலேயே 1.10 மணியளவில் கீழே விழுந்து விபத்துக்குள்ளானதாகத் தகவல் தெரிவிக்கின்றன. இந்த விபத்து ஏற்படும் முன்னரே விமானிகள் விமானத்தில் இருந்து குதித்து விட்டதாகவும், அவர்களைத் தேடி வருவதாகவும் விமானப்படை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (வ)

# பழநிக்கு அருகில் விபத்து 3 பேர் சாவு 7 பேர் காயம்



பழநிக்கு அருகில் காரும் வானும் நேருக்கு நேர் மோதியதில் மருத்துவர் உட்பட 3 பேர் உயிரிழந்துள்ளனர். 7பேர் காயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது:

பழநி அருகேயுள்ள கணக்கன் பட்டியைச் சேர்ந்தவர் நீதிமணி(வயது 38). இவர் அரச மருத்துவமனையில் டாக்டராக பணி புரிகிறார். இவர் தனது கார் மூலம் சென்னைக்கு பயணம் செய்தார். எதிரே சிதம்பரத்திலிருந்து வந்த கார் நேருக்கு நேர் மோதிக் கொண்டது. இதில் டாக்டர், அவரது கார் சாரதி, ஐய்யப்ப பக்தர்கள் என 3 பேர் உயிரிழந்தனர். இறந்த ஏனைய இருவரைப் பற்றிய விபரங்கள் இதுவரை தெரியவில்லை. சம்பவம் குறித்து பொலிஸார் விசாரித்து வருகின்றனர். (வ)

# குளிர்காலத்தில் மக்களைப் பாதுகாக்க நீதிமன்றம் உத்தரவு

இந்தியாவில் குளிர்காலத்தில், வீடில்லாத நிலையில் இருக்கும் மக்களுக்கு போதிய அளவுக்கு தங்கும் இடங்களை ஏற்படுத்திக் கொடுக்குமாறு மாநில அரசுகளுக்கு உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இந்தியாவின் வட மாநிலங்களில் வருடம் தோறும் குளிர் காலங்களில் பலர் உயிரிழக்க நேரிடுகிறது. கடந்த ஆண்டில் மாத்திரம் ஐம்பதுக்கும் அதிகமானவர்கள் இவ்வாறு பலியாயினர்.நாட்டின் தலைநகர் புதுடில்லியில் மட்டும் நூற்றுக்கணக்கானவர்கள் நடைபாதைகள் மற்றும் பூங்காக்களில் எவ்விதமான பாதுகாப்பும் இல்லாமல் தூங்குகின்றனர்.

இவ்வாறானவர்களுக்காக அமைக்கப்படும் தங்கும் இடங்கள் இந்த ஆண்டு பெருமளவில் குறைந்து போயுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கூட்டம் ஒத்திவைப்பு

(வசாவிளான் மீள் குடியமர்வு தொடர்பானது)

வசாவிளானில் இன்னமும் மீளக் குடியமர அனுமதிக்கப்படாத இடங்களில் மக்களின் மீள் குடியமர்வு தொடர்பாக ஆராய்வதற்காக, 17-12-2011 சனிக்கிழமை நடைபெறுவதாக அறிவிக்கப் பட்டிருந்த கூட்டம் மறுநாள் 18-12-2011 ஞாயிற்றுக்கிழமைக்கு ஒத்திவைக்கப்பட்டுள் ளது.

ஞான வைரவர் ஆலய
பரிபாலன சபை,
வசாவிளான் தெற்கு, ப.உமயவேல்,
வசாவிளான். (11631) (6,9,10) செயலாளர்.

## புதுக்குடியிருப்பு பிரதேச சபை

1987 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 149, 150,151, 152 ஆம் பிரிவுகளுக்கமைவான

## அறிவித்தல்

புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் வியாபார அனுமதிப்பத்திரம் இன்றி சபையின் அதிகார எல்லைக் குட்பட்ட பிரதேசங்களில் தொழில் முயற்சிகளில் ஈடுபடுதல் மேற்படி சட்டத்தின் கீழ் தண்டனைக்குரிய குற்றமாகும்.

எனவே 2012 ஆம் ஆண்டுக்கான வியாபார அனுமதிப்பத்திரத்தினை 31.01.2012 ஆம் திகதிக்கு முன்பதாக இந்தப் பிரதேச சபையிலிருந்து வழங்கப் படும் படிவத்தின் மூலம் விண்ணப்பம் செய்து பெற்றுக் கொள்ளலாம்.

மேலதிக விவரங்களை பிரதேச சபை பணி மனையில் அறிந்து கொள்ளலாம்.

புதுக்குடியிருப்பு
பிரதேச சபை, சி.அ. ஆனந்தகுமார்,
றெட்பானா, விசுவமடு. செயலாளர்,
15.12.2011. புதுக்குடியிருப்பு பிரதேச சபை.
(C/6854)(6-9-8)


## நாவலர் குருபூசையை முன்னிட்டு வினாடிவினா போட்டி

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் குரு பூசையை முன்னிட்டு அகில இலங்கை சைவப் புலவர் சங்கம் நடத்தும் வினாடி வினாப் போட்டி எதிர்வரும் 18 ஆம் திகதி வண்ணை நாவலர் ம.வி.யில் காலை 8 மணிக்கு நடைபெறவுள்ளது.

யாழ்.மாவட்ட பாடசாலை களில் ஜீ.சீ.ஈ. உயர்தரம் கற் கும் மாணவர்கள் பங்குபற்ற முடியும். விண்ணப்பங் களை நாளை வியாழக்கிழமைக்கு முன்னர் தலைவர், அகில இலங்கைச் சைவப் புலவர் சங்கம், 153 கே.கே. எஸ்.வீதி கொக்குவில் எனும் முகவ ரிக்கு அனுப்புமாறு கேட்டக்கப்பட்டுள் ளது. (வ)


## மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பம் U.K. இல் P.R. உள்ள 39 வயதுடைய விவாகரத்துப் பெற்ற மண மகனுக்கு மணமகள் தேவை.

குறிப்பு:- பொருத்தம் அவசியமில்லை. சீதனம் எதிர்பார்க்கப்படமாட்டாது. குடும்ப விவரத்துடன் அண்மையில் எடுத்த புகைப்படத்துடன் கீழ் காணும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

C/O.உதயன், விளம்பர இல:4205,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## சனல் இன பால் ஆடு தேவை

பால் எடுக்கக் கூடிய நிலையில்
சனல் ஆடும் குட்டியும் தேவை.
தொடர்பு: 0775758836

## விற்பனைக்கு

யம்பு நாவல், பலாக்கட்டைகள், மாங்கன்று கள் கட்டையில் காய்க்கும் அன்னாசி (மொறிஸ்) க்கன்றுகள், குறோட்டன் வகைகள், செவ்வரத்தை வகைகள், இந்தியன் முருக்கந் தடிகள், பப்பாசிக் கன்றுகள் (ரெட்லேடி, சின்ரா), தக்காளி, கத்தரி, மிளகாய்க்கன்று கள், பூச்சாடிகள் விற்பனைக்கு உள்ளன.

தொடர்பு: மீருஜா மல்ரி பாம் சென்ரர்
ரெயில் வேலேன், கச்சாய் வீதி, சாவகச்சேரி
தொ.பே.இல. 0775292141


## சிறுவர் முன்பள்ளிக்கு கட்டடம் அமைக்க நிதியுதவி

சாவகச்சேரி, டிசெ.15

மட்டுவில் வடக்கு சந்திபுரம் அம்பாள் சனசமூக நிலைய வளாகத்தில் நடத்தப்பட்டு வந்த அம்பாள் மழலைகள் கல்விப் பூங்காவுக்கு கட்டடம் அமைப்பதற்கு நிதி 15 லட்சம் ரூபா நிதி ஒதுக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. கல்விப் பூங்காவுக்கான கட்டடம் 32 அடி நீளமும், 24 அடி அகல மும் கொண்டதாக அமைக்கப்பட் டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

வேள்ட் விசன் நிறுவனம் இதற்கான நிதி ஒதுக்கீடு செய்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ம-131)


## அறிவித்தல்

### வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை, கரவெட்டி

எமது சபையின் 6917 - 6950 வரையான இலக்க முடைய பற்றுச்சீட்டு கைதவறவிடப்பட்டுள் ளது. எனவே அதனைக் கண்டெடுத்தவர்கள் உடனடியாக வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையின் தவிசாளரிடமோ அல்லது நெல்லியடி பொலிஸ் நிலையத்திலோ கையளிக்குமாறு தயவுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

மேலும் இந்த இலக்கமுடைய பற்றுச்சீட்டு தொடர்பான எதுவித கொடுக்கல் வாங்கல் களையும் மேற்கொள்ள வேண்டாம் எனவும், இவ் விடயம் தொடர்பாக எதுவித தகவல்களும் தங்களுக்குக் கிடைக்கப்பெறின் அதனை உடனடியாக வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையின் தவிசாளரிடம் தெரிவிக்கும்படியும் கேட்டுக்கொள்கின்றேன்.

தவிசாளர்,
12.12.2011 (சி/6883)(2-6-9) வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை

## பண்டத்தரிப்பு பரிஷ் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வரையறுக்கப்பட்டது)

### கிளைக்குழு உறுப்பினர் தெரிவு தொடர்பான

## அறிவித்தல்

வடக்குக் கிழக்கு மாகாணக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் பதிவாளரும் அவர்களினால் ஆக்கப்பட்டு 1998.05.19 ஆம் திகதிய 1028/6 இலக்கங்கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான ''வடக்கு கிழக்கு மாகாண எல்லைக்குட்பட்ட பகுதியில் இயங்கிவரும் வரையறுக்கப்பட்ட பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் கிளைக் குழுக்களைத் தெரிவு செய்வதற்கான விதிகள்'' இதற்கு அமைய யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராகிய நான் 2009.04.08 ஆம் திகதி 1596/17 இலக்கங் கொண்ட அதிவிசேட வர்த்தமானி மூலம் எம்மீது பாரிக்கப்பட்ட அதிகாரங்களின்படி மேற்படி சங்கத்தின் துணைவிதி 23 இற்கமைய மேற்படி சங்கத்தின் சகல கிளைகளுக்குமான கிளைக்குழுத்தெரிவுக்கான கிளைப் பொதுச் சபைக் கூட்டங்கள் பின்வரும் கால அட்டவணையின்படி நடைபெறுவதற்காக இக்கூட்டங்களை அழைப்பதற்கும் அவற்றின் தவிசா ளராகக் கடமையாற்றுவதற்கும் பின்வரும் அலுவலர்களை பெயர் குறித்து நியமித்துள்ளேன்.

1. இதற்கமைய இக்கூட்டங்களில் சமுகமளித்து வாக்களிக்க உரிமையுள்ள உறுப்பினர்களுக்கு தனித்தனி அறிவித்தல்கள் சம்பந்தப்பட்ட அலுவலர்களினால் அனுப்பி வைக்கப் பட்டுள்ளது.
2. கிளைப் பொதுச் சபைக் கூட்டத்திற்கான நிறைவெண் கூட்டத்திற்கு சமுகமளித்து வாக்களிக்கத் தகுதியுள்ள உறுப்பினர்களின் நான்கிலொரு (¼) பங்கினர் அல்லது 25 பேர் எது குறைவோ அத்தொகையாகும்.
3. தவிசாளர் குறித்த கிளையின் பொதுச் சபையிலிருந்து கிளைக்குழுவிற்கான ஒன்பது (09) உறுப்பினர்களை தெரிவுசெய்யும்படி கிளையின் பொதுச் சபையைக் கோருவார். இவர்களுள் ஆகக்குறைந்தது இருவர் (02) 18 வயதிற்கும் 35 வயதிற்கும் இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.
4. சபையில் இருந்து கிடைக்கப்பெறும் முன்மொழிவுகள் (09) ஒன்பது பேருக்கு மேற்படி தவிசாளர் இரகசிய வாக்கெடுப்பின் மூலம் தெரிவினை மேற்கொள்வார்.
5. இரண்டு வேட்பாளருக்கு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட வேட்பாளர்களுக்கிடையே சம வாக்குகள் கிடைக்கப்பெறும் பட்சத்தில் திருவுளச் சீட்டு மூலம் தெரிவு மேற்கொள்ளப்படும்.
6. தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர்களை தவிசாளர் கிளையின் பொதுச் சபையில் பிரகடனப்படுத்துவதுடன் சங்கச் செயலாளருக்கும் எனக்கும் எழுத்து மூலம் அறிவிப்பார்.

### கிளைப்பொதுச்சபைக் கூட்டங்கள் தொடர்பான விவரங்கள்

| தொ.இல | கிளை இல. | கிளையின் பெயர் | தவிசாளர் பெயர் | காலம் | மு.ப. | கிளைப்பொதுச்சபைக் கூட்டம் |
|---|---|---|---|---|---|---|
| 01. | 01 | மாதகல் | வி. ஜெயந்தன் | 17.12.2011 | 10 மணி | மாதகல் விவாசயக் கட்டடம் |
| 02. | 02 | மாதகல் மத்தி | இ. தயாகரன் | 17.12.2011 | 10 மணி | மாதகல் மத்தி விவசாயக் கட்டடம் |
| 03. | 03 | மாதகல் பரிஷ் | பொ. மோகன் | 17.12.2011 | 10 மணி | புனித தோமையார் சனசமூக நிலையம் , மாதகல் |
| 04. | 04 | மாதகல் நுணசை | ஆர் பாலச்சந்திரன் | 17.12.2011 | 10 மணி | மாதகல் மத்தி கிராமிய வங்கிக் கட்டடம் |
| 05. | 05 | மாரீசன்கூடல் | சி. குணாளன் | 17.12.2011 | 10 மணி | கிளை இல.05 இன் கட்டடம் |
| 06. | 06 | பெரியவிளான் | தி. வித்தககலாநிதி | 17.12.2011 | 10 மணி | கிளை இல. 06 இன் கட்டடம் |
| 07. | 07 | சித்திரமேழி | க. நிமலன் | 17.12.2011 | 10 மணி | பழனியானந்தம் சனசமூக நிலையம், சித்திரமேழி |
| 08. | 08 | சரஸ்வதி | ஜெ. தர்சினி | 17.12.2011 | 10 மணி | முருகன் ஆலயமடம், பிரான்பற்று |
| 09. | 09 | பண்டத்தரிப்பு | பா. கலைச்செல்வி | 17.12.2011 | 10 மணி | கிளை இல. 09 இற்கு முன்னால் கிராம அபிவிருத்திச் சங்கம், பண்டத்தரிப்பு |
| 10. | 10 | சில்லாலை | வே. பிரதீஸ்குமரன் | 17.12.2011 | 10 மணி | கிளை இல. 10 இன் கட்டடம் |
| 11. | 11 | வடலியடைப்பு | வை. கைலைநாதன் | 17.12.2011 | 10 மணி | கிளை இல. 11 இன் கட்டடம் |
| 12. | 12 | இளவாலை | க. திசாகரன் | 17.12.2011 | 10 மணி | கிளை இல. 12 இன் கட்டடம் |
| 13. | 13 | பாரத்தனை | அ. விமல்ராஜ் | 17.12.2011 | 10 மணி | கிராம அபிவிருத்திச் சங்கம் வடலியடைப்பு (கிளை இல.13 இற்கு அருகில்) |

கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பணிமனை,
857, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம். 01.12.2011

ஒப்பம்: V.K. அருந்தவநாதன்
(கூ.அ.உ. ஆணையாளர், யாழ். மாவட்டம்.)

(C76889)(6-7-8)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் வாக்குறுதிகளைப்போல பரீட்சைப் பெறுபேறுகளையும் பிற்போடுகிறீர்களா?

''தேர்தல் வாக்குறுதிகளை பிற்போடுவது போலத்தான் ஜீ.சி.ஈ உயர்தரப் பரீட்சை முடிவுகளையும் பிற்போட்டுக் கொண்டு வருகின்றீர்களா?''

இவ்வாறு மாத்தளை மாவட்ட ஐக்கிய தேசியக்கட்சி உறுப்பினர் புத்திக்க பத்திரன ஒரு இடைக்கேள்வியை கேட்டு அரச தரப்பைத் திக்கு முக்காடச் செய்து விட்டார்.

நாடாளுமன்றம் நேற்று சமல் ராஜபக்ஷ தலைமையில் கூடிய போதே புத்திக்க பத்திரன இப்படிக் கேட்டார்.

''மாத்தளை மாவட்டத்தில் உள்ள பாடசாலை ஒன்று நீண்ட காலமாக மூடப்பட்டுள்ளது. அங்கு கல்வி பயின்ற மாணவர்கள் கல்வியை இடைநடுவில் விட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இந்தப் பாடசாலையை மீண்டும் திறக்க கல்வி அமைச்சு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர் கூறினார்.

இவருடைய கேள்விக்குப் பதில் அளிக்க சபையில் கல்வி அமைச்சர் இல்லை. இதனால் ஆளும் கட்சியின் பிரதம கொறடாவான தினேஸ் குணவர்த்தனவே வழமை போல் பதில் அளிக்க நேரிட்டது.

''இப்பாடசாலையின் கட்டட பணிகள் ஆரம்பிக்கப்பட்டு தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது. கூடிய விரைவில் மீண்டும் திறக்க நடவடிக்கை எடுக்கப்படும்'' என அவர் பதில் அளித்தார்.

அப்போது இடைமறித்த புத்திக்க பத்திரன இடைக்கேள்வி ஒன்றை எழுப்பினார்.

''அமைச்சர் அவர்களே! உங்களுடைய பதிலும் தேர்தல் காலங்களில் வழங்கப்படும் வாக்குறுதிகளைப் போலவே இருக்கிறது. வாக்குறுதிகளை நிறைவேற்றாமல் அவற்றைப் பிற்போடுவது போல்தான் இதுவுமா?'' என்றார். இதற்கு அமைச்சரிடம் பதில் இல்லை.

அப்போதும் விடவில்லை புத்திக்க பத்திரன. ''அமைச்சர் அவர்களே, இப்பொழுது ஜீ.சி.ஈ உயர்தரப்பரீட்சை பெறுபேறுகளும் வெளிவராமல் பிற் போடப்பட்டுள்ளன. அது ஏன்? அதையும் இப்படித்தான் பிற் போட்டுவிட்டீர்களா?'' என்றார்.

''ஐயா! இது உறுப்பினரின் கேள்வியுடன் தொடர்பு இல்லாத ஒன்று. எனவே இதற்குப்பதிலளிக்க முடியாது'' என்று முடித்து விட்டார் அமைச்சர்.

### நாடாளுமன்ற உறுப்பினர்களின் கேள்விக்கு பதில் அளித்தே ஆக வேண்டும் - சபாநாயகர்

''நாடாளுமன்ற உறுப்பினர்கள் சபையில் எழுப்பும் கேள்விகளுக்கு அமைச்சர்கள் கட்டாயமாகப் பதில் அளிக்க வேண்டும். சாக்கு போக்குச் சொல்லக் கூடாது'' என சபாநாயகர் சமல் ராஜபக்ஷ அமைச்சர்களுக்கு கண்டிப்பான உத்தரவு ஒன்றைப் பிறப்பித்தார்.

கொழும்பு மாவட்ட ஐ.தே.க உறுப்பினர் ரவி கருணநாயக்க நிதி அமைச்சரிடம் ஒரு கேள்வியை எழுப்பினார்.

''எட்டுவருடங்களில் எதிர்பார்க்கப்படும் உள்நாட்டு உற்பத்தி எவ்வளவு? கடந்த எட்டு வருடங்களில் ஏற்பட்ட இலாப நட்டங்களைக் கூறமுடியுமா?'' என்றார்.

### அவகாசம் கேட்டு மாட்டிக்கொண்டார் பிரதி அமைச்சர்

இக்கேள்விக்கு பிரதி நிதி அமைச்சர் கீதாஞ்சனா ''பதில் அளிக்க ஒருமாத கால அவகாசம் வேண்டும்'' என்றார்.

இதனை ஆட்சேபித்த ரவி கருணநாயக்க, ''சபாநாயகர் அவர்களே, நாம் இப்போது வரவு செலவுத் திட்ட உரை மீது விவாதிக்கின்றோம். இந்தச் சந்தர்ப்பத்தில் நிதி அமைச்சர் பதில் அளிக்க அவகாசம் கேட்பது கவலைக்குரியது. இக்கேள்வி மூன்றாவது தடவையாக கேட்கப்படுகிறது'' என்று குறிப்பிட்டார்.

அப்போது மூக்கை நுழைத்தார் அமைச்சர் தினேஷ் குணவர்த்தன.

''ஐயா! ஒவ்வொரு அமைச்சிலும் வருடாவருடம் அறிக்கை சமர்ப்பிக்கப்படுகின்றன. அதில் எல்லா விடயங்களும் உள்ளன. அத்தோடு இவர் எட்டு வருடங்களுக்கான தகவல்களைக் கேட்கிறார். எப்படித் தருவது?'' என்றார்.

''இப்படி சாக்குப் போக்கு கூறமுடியாது. உறுப்பினர்கள் எழுப்பும் கேள்விகளுக்கு அமைச்சர்கள் பதில் அளித்தே ஆக வேண்டும்.'' என அமைச்சரின் தலையில் குட்டாமல் குட்டி விட்டார் சபாநாயகர்.

### எதிர்க்கட்சித் தலைவர் யார்?

கேள்வி நேரம் முடிந்த பின் அமைச்சர் தினேஷ் குணவர்த்தன ஒருவிடயத்தைக் கிண்டினார். ''சபாநாயகர் அவர்களே, நாடளுமன்றத்தில் ஜனாதிபதி, பிரதமர் போன்று எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் எதிர்க்கட்சி பிரதம கொரடாவுக்கும் நிதி ஒதுக்கப்படுகின்றது. எனவே நாடாளுமன்றத்தில் பொறுப்புக்கூற வேண்டிய கடப்பாடு அவர்களுக்கும் உண்டு.

கடந்த வாரம் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அஸ்கிரிய பீடாதிபதியை சந்தித்துள்ளனர். அப்போது ஐக்கிய தேசியக் கட்சியைக் காப்பாற்றும்படி கரு ஜயசூரிய விடம் அஸ்கிரிய பீடாதிபதி கேட்டுக் கொண்டார் என சிங்கள பத்திரிகையில் செய்தி ஒன்று வெளிவந்துள்ளது. அப்படியானால் எதிர்க்கட்சித் தலைவர் பதவியிலும் மாற்றம் ஏற்படுமா?'' என்று கேட்டார்.

### அரசாங்கத்தைத்தான் மாற்ற வேண்டும்

அமைச்சர் தினேஷ் குணவர்த்தனவின் கூற்றுக்கு பதில் அளித்தார் எதிர்கட்சித் தலைவர் ரணில் விக்கரம சிங்க.

''சபாநாயகர் அவர்களே, எங்களுடைய கட்சியின் யாப்பின்படி வருடாவருடம் தேர்தல் நடைபெறும். நீங்கள் அலட்டிக் கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. நீங்கள் நினைப்பது போல் எதிர்கட்சித் தலைவரை மாற்ற எவரும் சிந்திக்கவில்லை. நாம் எதிர்பார்க்கும் ஒன்று, இந்த அரசாங்கத்தை மாற்றுவது மட்டும்தான்'' எனப் பதிலடி கொடுத்தார் ரணில்.

### விவசாயிகளுக்கு சாராயம் கொடுத்த வியாபாரிகள்

பிளாஸ்டிக் கூடை விவகாரம் நேற்றும் சபையில் கிளப்பப்பட்டது. ரவி கருணநாயக்க இதனைக்கிளப்பினார். ''சபாநாயகர் அவர்களே, பழங்கள் மற்றும் காய்கறிகள் பிளாஸ்டிக் கூடைகளில் தான் பொதி செய்யப்பட வேண்டும் எனக் கட்டாயப் படுத்தப்பட்டுள்ளது. அண்மையில் ஒன்பது பப்பாசிப் பழங்களை பையில் போட்டுக் கொண்டு வந்த விவசாயி ஒருவர் தண்டிக்கப்பட்டுள்ளார். இது எவ்வகையில் நியாயம்'' என்று கேட்டார்.

### விவசாயிகளுக்கு அல்ல வியாபாரிகளுக்கே சட்டம்

''சபாநாயகர் அவர்களே, இவர்கள் கூறுவதில் உண்மையில்லை. இந்தச் சட்டம் விவசாயிகளை எந்த வகையிலும் பாதிக்காது. இடைத்தரகர்களுக்கும் வியாபாரிகளுக்கும் தான் இந்தச் சட்டம். விவசாயிகள் போராட்டம் நடத்தியதாக இவர் கூறினார்.

உண்மையில் இடைத்தரகர்களாக கொள்ளை இலாபமடிக்கும் வியாபாரிகள் அப்பாவி விவசாயிகளுக்கு சாராயம் கொடுத்து ஆர்ப்பாட்டம் செய்யும் படி தூண்டிவிட்டுள்ளனர். விவசாயிகள் இதனை எதிர்க்கவில்லை'' என்று பதில் அளித்தார் வர்த்தக அமைச்சர் ஜோன்ஸ்ரன் பெர்னான்டோ.

இந்தச் சர்ச்சைகளுக்குப் பின் வெளிவிவகார அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடுகள் தொடர்பான குழுநிலை விவாதம் ஆரம்பமானது.

எதிரணியினரின் சார்பில் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர் லக்ஷ்மன் கிரிஎல்ல விவாதத்தை ஆரம்பித்தார்.

இதன்போது தமிழீழ விடுதலைப் புலிகள், புலம்பெயர் தமிழ் மக்கள், நல்லிணக்க ஆணைக்குழு, நிபுணர் குழு அறிக்கை, போர்க்குற்ற விசாரணை, கடத்தப்பட்டோர், காணாமல் போனோர் தொடர்பாகவே பெரிதும் விவாதிக்கப் பட்டது.

### அஸ்வர் எம்.பியின் ஆதங்கம்

லக்ஷ்மன் கிரிஎல்ல பேசிக் கொண்டிருந்தபோது ஆளும் கட்சி உறுப்பினரான அஸ்வர் அடிக்கடி இடையூறு செய்தார். ''நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரிஎல்ல புலிகள் சார்பில் ஆஜராகும் ஒரு சட்டத்தரணி போன்




றல்லவா பேசுகிறார். இவர்கள்தான் புலிகளை வளர்த்துவிட்டவர்கள்'' என்றும் குற்றஞ்சாட்டினார்.

அஸ்வரின் பேச்சு கிரிஎல்லவுக்கு எரிச்சலை ஏற்படுத்திவிட்டது.

''ஐயா! இந்த மனிதர் கூறுவது போல் எதுவும் இல்லை. பாதிக்கப்பட்ட தமிழர்களும் இலங்கையர்கள் என்பதாலேயே இவ்வாறு பேசுகின்றேன்'' என அஸ்வரின் வாயை மூடிவிட்டார் கிரிஎல்ல.

### கோமாளிகளுக்கு இந்த சபையில் வேலை இல்லை

ஆனாலும் அஸ்வர் எம்.பி. தனது செயலை மாற்றிக் கொள்வதாக இல்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் உரையாற்றிக்கொண்டிருக்கும் போதும் அஸ்வர் எம்.பி. அடிக்கடி இடையூறு செய்து கொண்டிருந்தார்.

சம்பந்தர் எப்போதும் ஆத்திரப்பட மாட்டார், ஆவேசப்படவும்மாட்டார், ஆனால் அஸ்வரின் போக்கு நேற்று சம்பந்தரையே ஆத்திரப்பட வைத்து விட்டது. ''சபாநாயகர் அவர்களே இப்படியான (பபூன்) கோமாளிகளால்தான் சபையில் குழப்பமே ஏற்படுகின்றது. அதனை அனுமதிக்கக் கூடாது. உறுப்பினர்கள் பொறுப்புடன் பேசும் போது இந்தக் கோமாளிகளுக்கு என்ன வேலை? வெளியே போய் கூத்தடிக்கலாமே'' என்று காட்டமாக கூறினார் சம்பந்தர்.

இரா. சம்பந்தன் மற்றுமொரு விடயத்தையும் கூறினார்.

''ஜனாதிபதி என் மீது தனிப்பட்ட நம்பிக்கை வைத்துள்ளார். நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பாக நான் இப்போது எதையும் விமர்சிக்கத் தயாரில்லை. அறிக்கை வெளியான பின்னரே அது பற்றி ஆராயமுடியும்'' என்றார்.

### ஆடுகளம் போல் ஆரவாரப் பட்டது நாடாளுமன்றம்

மதிய போசன இடைவேளைக்குப் பின் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் அபிவிருத்தி அமைச்சுகளுக்கான விவாதம் ஆரம்பமானது. விளையாட்டுத்துறை அல்லவா?

அதனால்தானோ என்னவோ நாடாளுமன்றமும் ஆடுகளம் போல் ஆரவாரமாகக் காணப்பட்டது.

### ஸ்ரீரங்காவும் பிரபாவும் கனவு காண வேண்டாம்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் விநோநோகராதலிங்கம் பல சூடான விடயங்களைக் கொட்டித்தீர்த்தார். ''இந்த சபையில் உள்ள தமிழ் உறுப்பினர்கள் பொறுப்புடன் நடந்துகொள்ள வேண்டும். விளையாட்டு வேறு, அரசியல்வேறு. அரசியலையும் விளையாட்டையும் முடிச்சு போட்டு கூட்டமைப்புக்குள் குழப்பம் விளைவிக்கும் குள்ளநரித் தனமாகப் பேசுகின்றார்கள். ஸ்ரீரங்காவும் பிரபாவும் கனவு காண்கின்றார்கள். இவர்களுடைய கனவு பலிக்காது. கூட்டமைப்பை இவர்களால் உடைக்கமுடியாது'' என்று சூடு போட்டார் விநோ.

### அழகு ராணிப்போட்டி யாருக்கு வேண்டும்

''இளைஞர் விவகார அமைச்சர் வன்னியில் அழகு ராணிப் போட்டி நடத்தப் போகின்றாராம். நாம் பாரம்பரிய கலாசாரத்தை பேணிப் பாதுகாப்பவர்கள். எங்களுடைய பெண்கள் மேடைகளில் அழகு காட்டத் தயாரில்லை'' என்றார் விநோ. அப்போது குறுக்கிட்ட அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே, ''ஏன் வெள்ளவத்தையில் உள்ளவர்கள் கலந்து கொள்கின்றார்கள் தானே?'' என்றார்.

இதனை மறுத்தார் விநோ.

''ஐயா வெள்ளவத்தை வேறு. வன்னி வேறு என்பதை நீங்கள் உணர வேண்டும்'' என்று பதிலடி கொடுத்தார் விநோநோகராதலிங்கம்.

விவாதத்தின் பின்னர் அமைச்சுகளுக்காக நிதி ஒதுக்கீடுகள் கீழ் நிலையில் அங்கீகரிக்கப்பட்டன.

---

## வடக்கு... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதேவேளை, காலதாமதமின்றி தெளிவான காலவரையறைக்குள் வடக்கிலும், கிழக்கிலும் இராணுவமயமாக்கல் முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

சமீபத்தில் இலங்கைக்குப் பயணம் மேற்கொண்ட ஜியோப்ரி, இங்கு ஜனாதிபதி, சிரேஷ்ட அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோரைச் சந்தித்துள்ளார். அதுபோல அரசினதும் எதிரணியினதும் அரசியல் கட்சிகள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகியவற்றையும் சந்தித்துள்ளார்.

ஏற்கனவே போரினால் சிதைவுற்ற நாட்டின் வடக்கு, கிழக்குப் பகுதிகளுக்குத் தாம் மேற்கொண்ட பயணத்தின்போது இவர் வடக்கு, கிழக்குப் பிராந்திய ஆளுநர்கள், யாழ். ஆயர், இராணுவத் தளபதிகள், அநேக உள்ளூர்வாசிகள் ஆகியோரையும் சந்தித்துப் பேசியுள்ளார்.

அத்துடன், பூசாவிலுள்ள தடுப்பு முகாம், ஆழிப்பேரலை அழிவுக்குப் பின்னர் கட்டி எழுப்பப்பட்ட வெலிகம கிராமம் ஆகியவற்றுக்கும் சென்று பார்த்திருந்தார்.

இந்த பயணத்துக்குப் பின்னர் ஜியோப்ரி வெளியிட்டுள்ள கருத்து[illegible]

போர் முடிவடைந்தமையால் ஏற்பட்டுள்ள மனதிம்மதியை எனது பயணத்தின்போது அவதானிக்கமுடிந்தது. எதிர்கால சுபீட்சத்தைக் கருதி, தற்போது பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதில் நாடு அதீத ஈடுபாடு கொண்டுள்ளது. கடந்த மூன்று தசாப்தங்களாக நாட்டைச் சீர்குலைத்து வந்த ஆயுதப்போர் மீள உருக்கொள்ளாமல் தவிர்ப்பதற்கு நல்லிணக்கப்பாடும், அரசியல் ஒருமைப்பாடும் அவசியம்.

கற்றுக்கொண்ட பாடங்களுக்கும் நல்லிணக்கப்பாட்டுக்குமான ஆணைக்குழு வெளிப்படுத்தும் அறிகுறிகளால் நான் உற்சாகமடைகிறேன். ஆணைக்குழு காத்திரமான முடிவுகளோடு வெளிப்பட்டுள்ளது. அநேக சர்வதேச எதிர்பார்ப்புகளை இம்முடிவுகள் நிறைவு செய்யக்கூடும். இதன் அறிக்கை மிகவிரைவில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

அதேவேளை, இலங்கையர்கள் தங்களின் சொந்த வழியிலேயே இந்த விவகாரங்களைக் கையாளவேண்டும். இதுவிடயத்தில் வேண்டுமானால் எங்களின் ஆதரவையும், ஊக்குவிப்பையும் கோரலாம். மனித உரிமை துஷ்பிரயோகங்கள் சம்பந்தப்பட்ட முறையீடுகளும் எழுந்துள்ளன. இதில் சந்தேகமில்லை. கடந்தகால இடர்பாடுகளிலிருந்து மீள்வதற்கு அரசு, இம்முறையீடுகளுக்குத் தக்கவகையில் பரிகாரம் காண முயல வேண்டும்.

[illegible] தமிழ் வாக்குகளை ஈட்டியுள்ள தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கூட பிரிவினைவாதத் திட்டத்தைத் தொடர்ந்தும் கைக்கொள்ளவில்லை. பல்லினங்களைக் கொண்ட இலங்கைக்குள் தாங்களும் சங்கமிப்பதற்கான ஆவலையே அவர்கள் நேரடியாக என்னிடம் தெரிவித்துக்கொண்டார்கள்.

நீண்டகாலத் தீர்வுக்கு ஒத்துழைக்கவும் முன்வந்துள்ளார்கள். அதேசமயம், தனது பேச்சாளர்கள் வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொள்ளும்போது சாதகமான செய்தியையே விடுக்க வேண்டுமென்பதை தமிழ்க் கூட்டமைப்பு உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டும்.

''பிரிட்டனிலும் இதர நாடுகளிலும் வசிக்கும் இலங்கை வம்சாவளித் தமிழர்களில் பெரும்பாலானோர் ஆக்கிரமிப்பாளரின் தலையீடு இல்லாமலிருந்தால் தம் தாய்நாட்டு மக்களில் பெரும்பாலானோரின் மேம்பாட்டுக்கு உதவத் தயாராகவே இருக்கின்றார்கள்.

இவர்கள் இலங்கைக்குப் பயணிக்க வேண்டும். இங்கு நிலவும் சூழ்நிலையை அவர்களே அவதானிக்க வேண்டும். அத்துடன், வர்த்தகங்களை ஆரம்பிப்பதற்கும் அபிவிருத்தித் திட்டங்களுக்கும் அவர்கள் முதலீடு செய்யவேண்டும்.

இத்தகைய கூட்டமைப்புத் திட்டங்களுக்கு ஏற்ப தற்போது வெளிநாடுகளில் நிதி திரட்டப்படுவதற்கான அறிகுறி தோன்ற ஆரம்பித்துள்ளது.

இந்த முன்னெடுப்புகளுக்கு உதவ சாதகமான, இதயபூர்வமான ஆதரவு சர்வதேச சமூகத்திடமிருந்து இலங்கைக்குக் கிடைக்கவேண்டும்.

- இப்படி அவர் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்னாபிரிக்கா - இலங்கை டெஸ்ட் மோதல்; முதல் ஆட்டம் செஞ்சூரியனில் இன்று ஆரம்பம்

தென்னாபிரிக்க-இலங்கை அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி தென்னாபிரிக்காவின் செஞ்சூரியன் மைதானத்தில் இன்று ஆரம்பமாகிறது.

தென்னாபிரிக்காவுக்குக் கிரிக்கெட் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணி, அந்த அணிக்கு எதிராக 3 போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரிலும், 5 போட்டிகளைக் கொண்ட ஒருநாள் தொடரிலும் விளையாடவுள்ளது. இதில், மூன்று போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது போட்டி இன்று செஞ்சூரியன் மைதானத்தில் ஆரம்பமாகிறது.

இரு அணிகளுக்குமிடையிலான இதுவரை நடைபெற்ற போட்டிகள் அடிப்படையில் தென்னாபிரிக்க அணியே முன்னிலை வகிக்கிறது.

இரு அணிகளும் விளையாடிய 17 டெஸ்ட் போட்டிகளில் தென்னாபிரிக்க அணி 8 போட்டிகளிலும் இலங்கை அணி 4 போட்டிகளிலும் வெற்றிபெற்றுள் ளன என்பது குறிப்பிடத்தக்கது.

இது இவ்வாறிருக்க, இரு அணிகளுக்குமிடையில் இன்று டெஸ்ட் தொடர் ஆரம்பமாகிறது.

ஏற்கனவே, ஆஸ்திரேலியாவிடம் இலங்கை அணி தனது சொந்த மண்ணில் வைத்தும், பாகிஸ்தானிடம் ஐக்கிய அரபு இராச்சியத்தில் வைத்தும் டெஸ்ட் தொடரைப் பறிகொடுத்த இலங்கை அணி, மிகவும் பலவீன மான நிலையில் இன்றைய போட்டியில் களமிறங்குகிறது.

மறுமுனையில் தென்னாபிரிக்க அணி, தனது சொந்த மண்ணில் நடந்த ஆஸ்திரேலியாவுக்கு எதிரான இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரை 1-1 என்ற கணக்கில் சமநிலையில் முடித்தது. அந்தப் போட்டியில் அந்த அணியின் சிறப்பான ஆட்டம் வெளிப்பட்டது. அந்தப் பலத்துடன் தென்னாபிரிக்க அணி களமிறங்குவதாலும், சொந்த மண்ணில் எதிரணியை எதிர்கொள்வதாலும் அந்த அணி பலமிக்கதாகவே காணப்படுகிறது.

எனவே, தென்னாபிரிக்க அணியை அதன் சொந்த மண்ணில் வைத்து இலங்கை அணி எவ்வாறு எதிர்கொள்ளப் போகிறது என்பதே தற்போதைய கேள்வி.



தென்னாபிரிக்க அணிக்கு எதிராக இன்று ஆரம்பமாகும் டெஸ்டில் இலங்கை அணியின் துடுப்பாட்ட வீரரான குமார் சங்கக்கார, காயம் காரணமாக விளையாடுவதில் சந்தேகமான நிலை நீடிக்கிறது.

இதனால், இலங்கை அணி பெரும் பின்னடைவு நிலையை அடையக் கூடிய நிலை ஏற்பட்டுள்ளது.

சங்கக்கார விளையா டுவாரா விளையாட மாட் டாரா என்பது குறித்த உத்தியோகபூர்வ அறிவிப்பு எதுவும் வெளிவராதமை யால் இன்று இலங்கை அணி களமிறங்கும்போதே அது தெரியவரும்.

## 2011 இன் சம்பியன்கள்!

இந்த ஆண்டில் டென்னிஸில் கலக்கிய செர்பிய வீரரான நோவக் ஜோகோவிச், செக்குடியரசு வீராங்கனை பெட்ரா கிவிடோவா ஆகியோர் 2011ஆம் ஆண்டின் உலக டென்னிஸ் சம்பியன்களாக அறிவிக்கப்பட்டுள்ளனர்.

இந்த உயரிய விருது ஆண்டுதோறும் சர்வதேச டென்னிஸ் சம்மேளனம் சார்பில் வழங்கப்பட்டுவருகிறது.

ஜோகோவிச், இந்த ஆண்டு ஆஸ்திரேலிய ஓப்பின், விம்பிள்டன், அமெரிக்க ஓப்பின் ஆகிய பட்டங்களை வென்றதுடன், முதலிடத்தையும் தட்டிச் சென்றார். பெடரர், நடால் இருவரும் இல்லாத வீரர் ஒருவர் இந்த விருதைப் பெறுவது 2003ஆம் ஆண்டுக்குப் பின்னர் இதுவே முதல் முறையாகும்.

இதேபோல 21 வயதான கிவிடோவா முதல் முறையாக விம்பிள்டன் பட்டத்தை வென்றதுடன் தரவரிசையிலும் 2ஆவது இடத்திற்கு முன்னேறினார். இதன் காரணமாக அவருக்கு ஆண்டின் சிறந்த வீராங்கனைக்கான விருது வழங்கப்படுகிறது.

இந்த விருதை நோவாக், கிவிடோவா, இருவரும் முதல் முறையாகப் பெறுகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.



ஆகக்குறைந்த அனுமதிக்கட்டணம் (Admission Fees) முதல் வருடத்திற்கு மட்டுமே!

சர்வதேச தரம் வாய்ந்த BBS பாலர் பாடசாலையின் அனைத்து வளாகங்களிலும் January 2012 ற்கான புதிய அனுமதிகள்

* இதுவரை BBS இன் வளாகங்களில் கல்வி கற்ற ஆயிரக்கணக்கான சிறுவர்களில் 95 வீதமானோர் யாழ்குடாநாட்டின் அதிசிறந்த பாடசாலைகளில் கற்பதற்கான அனுமதி பெற்றிருப்பதுடன் 5 ஆம் ஆண்டு புலமை பரிசிலிலும் சித்தியடைந்துள்ளார்கள்
* உங்கள் வசதி கருதி யாழ்குடாநட்டின் பல்வேறு இடங்களிலும் சர்வதேச தரத்திலான தனியார் பாடசாலை.

BBS இன் சர்வதேச பாலர் பாடசாலைகள் → Dr.Maria Montessori & Canadian Early Learning Method
ஆங்கில மொழிமூல பாடசாலை செயற்பாடுகள்

பாலர் பிரிவுகள்

* Play Group (2+சிறார்களுக்கு)
  Sensorial Activities
  விளையாட்டுக்களுடன் கூடிய அதிநவீனகற்கை நெறிகள்
  Song, Poems, Drama & Dialogue
* Montessori (3+சிறார்களுக்கு)
  மொழி அறிமுகம் - ஆங்கிலம்
  (Speech Skills) - தமிழ்
  எழுத்து அறிமுகம் - ஆங்கிலம்
  (Writing Skills) - தமிழ்
  எண்பயிற்சிகள் (Arithmetical Operations)
  Sensorial Activities
  Song, Poems, Drama & Dialogue
* Pre-School (4+சிறார்களுக்கு)
  எண், எழுத்து கருதுகோள்
  ஆங்கில பேச்சுத்திறன் செயற்பாடுகள் Audio, Visual
  Sensorial Activities
  Song, Poems, Nursery Rhumes, Drama & Dialogue
  அடுத்த கல்வியாண்டிற்கான முழுத்தகுதி நிலை

பாலர பாடவிதானம்

பாடசாலை ஆரம்பம் காலை - 7.30
பாடசாலை முடிவு மதியம் - 12.30

வாரத்தின் 25 மணித்தியாலங்களுக்கான கல்விச்செயற்பாடுகள்

| | |
|---|---|
| Language Skills - English | - 5 hrs |
| Language Skills - Tamil | - 4 hrs |
| - Maths | - 4 hrs |
| Sensorial Activities | - 2 hrs |
| Songs, Poem, Drama, Dialog | - 2 hrs |
| Art and Craft | - 2 hrs |
| Play Activities | - 3 hrs |
| Baratha Natyam | - 1.5 hrs |
| Computing | - 1.5 hrs |

எம் அனைத்து சிறார்களும் பங்குபெற்றும் கல்விசார் நிகழ்வுகள்

English Day & Concert
Sports Day
Bharatham Festival
Art & Craft Exhibition
Muthamilzh Vizhla
Pre-School Graduation and Crol Ceremony

BBS இன் 10 வளாகங்கள்

| | |
|---|---|
| நல்லூர் | - 140, கோவில் வீதி, நல்லூர் |
| கோப்பாய் | - பருத்தித்துறை வீதி, கோப்பாய் மத்தி |
| நீர்வேலி | - 1ம் கட்டை, இராசவீதி, நீர்வேலி. |
| சாவகச்சேரி | - சாவகச்சேரி இந்து ஆரம்பபாடசாலை அருகாமை |
| மானிப்பாய் 1 | - 252, ஆலடி சந்தி, யாழ்வீதி, மானிப்பாய். |
| மானிப்பாய் 2 | - சங்கரப்பிள்ளை வீதி, மானிப்பாய். |
| சுண்ணாகம் | - Lakshmi (புதியநீதிமன்றம் அருகாமை) K.K.S.வீதி மல்லாகம் |
| புலோலி | - ஸ்ரீ பத்மநாதன் இல்லம், மந்திகை. |
| அச்சுவேலி | - அச்சுவேலி அரசினர் வைத்தியசாலை அருகாமை |
| சங்கானை | - நிகர வைரவர் கோவிலடி, AGA Office அருகாமை |

SPECIAL ENGLISH CLASSES
For Professionals Including
Doctors, Engineers, Nurses
& Government Officials

ENGLISH CLASSES FOR CHILDREN
சிறுவர்களுக்கான ஆங்கில பாடநெறிகள்
Pre-Foundation, Foundation- Level 1,2,3,4
School Syllabus Covered

Certificate in English,
Diploma in English,
Advanced Diploma in English

BRITISH COUNCIL IELTS
அங்கிகரிக்கப்பட்ட பரீட்சைப்பதிவு நிலையம்

British Business School
Where Students Come First

BRITISH BUSINESS SCHOOL
140, கோவில் வீதி நல்லூர். Contact : 021 2225796, 077 3627055, 0776646357

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்கின் ஆவணங்கள் சிக்கின



ஹர்பஜன் சிங்கிடம் இருந்து திருடப்பட்ட முக்கிய ஆவணங்களில்சிலவற்றை இந்தியாவின் அரியானா மாநில காவல் துறையினர் மீட்டுள்ளனர். எஞ்சிய ஆவணங்களையும் திருடிய கும்பலையும் வலை வீசித் தேடிவருகின்றனர்.

இந்திய கிரிக்கெட் வீரர் ஹர்பஜன் சிங் தனது நண்பருடன் டெல்லி வந்திருந்தார். இவர் கர்னால் அருகில் உள்ள மதுபான் என்ற இடத்தில் காரை நிறுத்திவிட்டு ஹோட்டலுக்குச் சென்றார். அப்போது அங்கு வந்தமர்மக் கும்பல்ஒன்று ஹர்பஜனின் கார்க் கண்ணாடியை உடைத்து கடவுச்சீட்டு, பணம், சாரதி அனுமதிப் பத்திரம் கடனட்டை உட்படபலவிலை மதிப்பு மிக்க முக்கிய ஆவணங்களை திருடிச் சென்றது. இந்தத் திருட்டு குறித்து கர்னால் காவல்துறையினரிடம் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதுகுறித்து தேடுதல் வேட்டையில் ஈடுபட்ட காவல்துறையினர் நேற்று கர்னாலில் உள்ள செக்டர் 13 என்ற இடத்தில் சில முக்கிய ஆவணங்களை கண்டுபிடித்தனர்.

இதில் 5 கடனட்டைகள் மற்றும் ஹர்பஜனின் உறவினரின் ஒரு கிரீன் அட்டை ஆகியவை இருந்தன. ஆனால் ரூ. 9,500 பணம் (இந்திய ரூபாய்), கடவுச்சீட்டு, சாரதி அனுமதிப் பத்திரம் போன்ற முக்கிய ஆவணங்கள் இல்லை.

காணாமல் போன எஞ்சிய பொருள்களையும் திருட்டு கும்பலையும் கண்டுபிடிக்க ஐந்து குழுவாக காவல்துறையினர் தீவிரமாக தேடி வருகின்றனர். விரைவில் இவர்கள் பிடிபடுவார்கள் என்று கர்னால் காவல்துறை உயரதிகாரி ஜோகிந்தர் ராதி தெரிவித்துள்ளார். (ங-15)

# பொன்டிங்கா? மைக் ஹசியா?

இந்தியாவுடனான டெஸ்ட் கிரிக்கெட் தொடருக்கான ஆஸ்திரேலிய அணியிலிருந்து ரிக்கி பொன்டிங் அல்லது மைக்கல் ஹஸியை நீக்கவேண்டிய நிலைக்கு ஆஸ்திரேலிய கிரிக்கெட் தேர்வுக் குழுவினர் தள்ளப்படுவர் என்று அந்த அணியின் முன்னாள் தலைவர் அலன்போர்டர் கூறியுள்ளார். நியூஸிலாந்துடனான டெஸ்ட் தொடரில் இவ்விரு வீரர்களும் பிரகாசிக்கத் தவறியமையே இதற்கான காரணமாகும்.

'வயதான வீரர்களில் ஒருவர் வெளியேறுவார் என்று நான் எண்ணுகிறேன். ஹஸி அல்லது பொன்டிங் வெளியேறக்கூடும்' என்று தொலைக்காட்சி நிகழ்ச்சியொன்றில் பங்குபற்றிய அலன் போர்டர் கூறினார்.

ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் தலைவரான ரிக்கி பொன்டிங் டெஸ்ட் கிரிக்கெட்டில் சதமொன்றைக் குவித்து ஏறத்தாழ இரு வருடங்களாகின்றன. அண்மைக்காலமாக அவர் பிரகாசிக்கத் தவறி வருகிறார். எனவே அவராகவே ஓய்வு பெறாவிட்டால் தேர்வாளர்கள் பெரும் நெருக்கடியை எதிர்நோக்க நேரிடும் என்று முன்னாள் வீரர்கள் பலர் கருதுகின்றனர் - என்றார்.

'பொன்டிங் கிரிக்கெட் விளையாட்டின் மிகச் சிறந்த வீரர்களில் ஒருவர். ஆஸ்திரேலிய அணியின் அற்புதமான வீரர்களில் ஒருவராகத் திகழ்ந்தார். இப்போது அவர் பிரகாசிக்கவில்லை. எனவே ஒவ்வொருவரும் அதைப்பற்றி பேசுகிறார்கள். அவர் தொடர்ந்து விளையாடத் தீர்மானித்தால் மோசமான சூழ்நிலையொன்று ஏற்படும்' என்று முன்னாள் சுழற் பந்துவீச்சு நட்சத்திரமான ஷேன் வோர்னும் கூறியுள்ளார். (ங-15)



சானியா மிர்சா

# மௌனத்தைக் கலைத்தார் கும்ளே

இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை (பி.சி.சி.ஐ) மற்றும் கும்ளே இடையிலான மோதல் முற்றுகிறது. தனது தொலை நோக்கு திட்டங்கள் நிராகரிக்கப் பட்டதால் தான், தேசிய கிரிக்கெட் அக்கடமியின் தலைவர் பதவியை ராஜினாமா செய்ததாக கும்ளே தெரிவித்துள்ளார்.

இந்திய கிரிக்கெட் அணியின் சுழல் ஜாம்பவான் கும்ளே. ஓய்வுக்கு பின்னர், பெங்களூரில் உள்ள தேசிய கிரிக்கெட் அக்கடமியின் தலைவராகப் பொறுப்பேற்றார். போதிய நேரம் இல்லாததால், இந்தப் பதவியை ராஜினாமா செய்வதாக கும்ளே திடீரென அறிவித்தார். இதனை இந்தியக் கிரிக்கெட் சபை (பி.சி.சி.ஐ.) ஏற்றுக்கொண்டது.

இந்தச் சூழலில் தனது ராஜினாமாவுக்கான காரணத்தை கும்ளே இப்போது போட்டு உடைத்துள்ளார். இது குறித்து இவர் கூறுகையில், தேசிய கிரிக்கெட் அக்கடமியை இன்னும் சிறப்பான மையமாக மாற்ற 3 ஆண்டுகளுக்கான தொலை நோக்கு திட்டத்தை வகுத்தேன். இந்தத் திட்டம் ஏற்கப்படும் என்ற நம்பிக்கையில், 10 முறை அதனை விளக்கிக்கூறினேன். ஆனால், குழுவின் உறுப்பினர்கள் யாரும் அதை ஏற்கத் தயாராக இல்லை. எனது பேச்சுக்கு மதிப்பு அளிக்காத நிலையில், வெறும் தலைவராக இருந்து பயன் இல்லை என்று நினைத்தேன். எனவே, ராஜினாமா செய்வதை தவிர எனக்கு வேறுவழி தெரியவில்லை என்றார்.

இது குறித்து பி.சி.சி.ஐ. அதிகாரி ஒருவர் கூறுகையில், வீரர்களைக் காயத்தில் இருந்து மீட்பது தொடர்பாக, கணினி தொழில்நுட்பத்துடன் கூடிய திட்டத்தை கும்ளே சமர்ப்பித்தார். இதற்கு செலவு அதிகம். தவிர, ஒரு குறிப்பிட்ட கணினி நிறுவனம் தான் இதனை கையாள வேண்டும் என்று நிர்ப்பந்தித்தார். இந்த நிறுவனத்திடம்இருந்து அவர் 'கமிஷன்' பெற வாய்ப்பு இருப்பதாக முறைப்பாடு கிடைத்தது. இதனால் தான் அவரது திட்டத்தை ஏற்க முடிய வில்லை என்றார்.

### கவாஸ்கர் ஆவேசம்

தேசிய கிரிக்கெட் அக்கடமியின் தலைவர் பதவியில் இருந்த கபில் தேவ் நீக்கப்பட்டார். அடுத்து வந்த ரவி சாஸ்திரியும் பதவி விலகினார். தற்போது கும்ளேயும் ராஜினாமா செய்துள்ளார். இது குறித்து முன்னாள் அணித்தலைவர் கவாஸ்கர் கூறுகையில், சர்வதேச ஆட்டங்களில் விளையாடியவர் கும்ளே. பல முறை காயம் அடைந்த அனுபவம் அவருக்கு உண்டு. அவர்அளிக்கும் திட்டம் வீரர்களுக்கு பயனுள்ளதாகத் தான் இருக்கும். இந்தத் திட்டம் குறித்து குறைந்த பட்சம் விவாதித்தாவது இருக்க வேண்டும். எடுத்த எடுப்பிலேயேநிராகரித்ததுசரியல்ல. ஐ.பி.எல். பணிகளுக்காக எனக்கு வழங்குவதாக உறுதி அளித்த 4 கோடி ரூபா இன்னும் அளிக்கப்படவில்லை. ஒட்டுமொத்தமாக பி.சி. சி.ஐ. மீதான நம்பிக்கை தகர்ந்துபோயுள்ளது- என்றார். (ங-15)

# தொடர்ச்சியாக விளையாடினால் காயம் வரத்தானே செய்யும்!

## விரைவில் போட்டிகளில் கலந்துகொள்வேன் என்கிறார் சானியா

ஒலிம்பிக் போட்டியில் சிறப்பாக விளையாடுவதற்கு முழு உடற்தகுதியோடு இருப்பது முக்கியமானது என்று இந்திய ரெனிஸ் வீராங்கனை சானியா மிர்சா தெரிவித்தார். மும்பையில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியொன்றில் பங்கேற்ற அவர் இது குறித்து மேலும் கூறியதாவது:

நான் இப்போது மகளிர் ஒற்றையர் தரவரிசையில் முதல் 100 இடங்களுக்குள் உள்ளேன். இதே போல் இரட்டையர் தரவரிசையில் 11 ஆவது இடத்தில் உள்ளேன். இப்போதைய நிலையில் இரட்டையர் பிரிவு ஆட்டங்களில் பங்கேற்பதே எனக்கு எளிதானது அதுதான் உடலளவில் மிகவும் இலகுவானது.

இந்த ரெனிஸ் சீசனின்முடிவில் ஒலிம்பிக் போட்டி வருகிறது. அதனால் ஒலிம்பிக் போட்டியில் விளையாட நல்ல உடற்தகுதியோடு இருக்க வேண்டும். கால் மூட்டில் ஏற்பட்ட காயத்துக்கு அறுவைச் சிகிச்சை செய்திருப்பதால் இன்னும் 3 மாதங்கள் விளையாடிய பிறகு தான் அதன் விளைவு எப்படி இருக்கும் என்று தெரியவரும். அதைப் பொறுத்து தான் எல்லாம் அமையும் என்றார்.

காயத்தைக் கருத்தில் கொண்டு ஒற்றையர், இரட்டையர் பிரிவுகளில் [illegible] டுமே கவனம் செலுத்து[illegible] என்று கேட்ட போது, ஒற்றையர் பிரிவில் முதல் 60 இடங்களுக்குள் இருப்பவர்களும், இரட்டையர் பிரிவில் முதல் 10 இடங்களுக்குள் இருப்பவர்களும் நேரடியாகவே ஒலிம்பிக் விளையாட தகுதி பெற்று விடுவார்கள்' என்றார்.

நீண்ட காலம் ரெனிஸ் விளையாடுவதற்காக தொடர்ச்சியாக போட்டிகளில் பங்கேற்பதை குறைத்துக் கொள்வீர்களா என்று கேட்டபோது, ஒரு விளையாட்டு வீராங்கனையாக அதுபோன்ற முடிவெடுப்பது கடினமானது. தொடர்ச்சியாக விளையாடினால் காயம் ஏற்படத்தான் செய்யும். அதுவும் விளையாட்டின் ஒரு பகுதிதான். அதை சமாளிக்கவும், தவிர்க்கவும் கற்றுக்கொள்ள வேண்டும். எல்லோருமே காயம் அடைகிறார்கள். சிலர் சிறிய அளவிலும், சிலர் பெரிய அளவிலும் காயம் அடைகிறார்கள் என்றார்.

தனது கால் மூட்டில் ஏற்பட்ட காயம் குறித்துப் பேசிய அவர், இப்போது வேகமாக குணமடைந்து வருகிறேன். மும்பையில் மகேஷ் பூபதியுடன் இணைந்து பயிற்சி பெற்று வருகிறேன்.

தினந்தோறும் 5 மணி நேரம் பயிற்சியில் ஈடுபடுகிறேன். இந்த மாதத்தின் கடைசியில் நியூஸிலாந்தில் நடைபெறவுள்ள ரெனிஸ் போட்டியில் பங்கேற்கிறேன். [illegible]லாந்து, ஆஸ்திரேலியா போட் [illegible] பெடரேஷன் கிண்ண போட்டிகளிலும் விளையாடவுள்ளேன் - என்றார். (ங-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## கந்தர் வல்லிபுரம்

(ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்)



கட்டப்பிராயைப் பிறப்பிடமாகவும், 572/1, கே.கே.எஸ். வீதியை (கலட்டி அம்மன் வீதி) வசிப்பிடமாகவும் கொண்ட கந்தர் வல்லிபுரம் நேற்று (14.12.2011) புதன்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

572/1, கே.கே.எஸ். வீதி,
(கலட்டி அம்மன் வீதி) யாழ்ப்பாணம்.

## திருமதி தங்கராணி திருஞானசம்பந்தர்

(இளைப்பாறிய சங்கீத ஆசிரியர்)



இல.20, அராலி வீதி, ஓட்டுமடத்தில் வசித்தவரும், தற்பொழுது செங்காளன், சுவிஸை வசிப்பிடமாகவும் கொண்ட திருஞானசம்பந்தர் தங்கராணி கடந்த 10.12.2011 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - நேசம்மா தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான சுந்தரம்- அம்மாக்குட்டி தம்பதியரின் மருமகளும், லோஜினி (சுவிஸ்), விநாயகராம் (லண்டன்) ஆகியோரின் தாயும், காலஞ்சென்றவர்களான பத்மாவதி, பத்மநாதன், சண்முகலிங்கம் மற்றும் சிவநாதன் ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்றவர்களான சிவபாலசிங்கம், ஈஸ்வரியம்மா, பரமேஸ்வரி, பத்மநாதன், லில்லிஜெயராணி, மகேஸ்வரி மற்றும் ராஜேஸ்வரி (லண்டன்), ராஜேஸ்வரி (யாழ்ப்பாணம்) ஆகியோரின் மைத்துனியும், பிரேம்குமார் (யாழ்ப்பாணம்), மற்றும் சுவிஸில் வசிப்பவர்களான பிரேம்குமார், சந்திரிக்கா, ராஜ்குமார், ஸ்ரீராம்குமார், சிவப்பிரியா, விநோதினி, பஞ்சகுமார்(லண்டன்), சாருஜா (இலங்கை), நேசமலர் (ஜேர்மனி), கோணேஸ்வரன், புவனேஸ்வரன் ஆகியோரின் மாமியும், பிரவின், சத்தியா, சில்வியா, அஸ்வின் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.12.2011) வியாழக்கிழமை செங்காளன், சுவிஸில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சுவிஸ். தொ.பே-0041712776891, 0041789120926 குடும்பத்தினர்.

## தமிழர்களும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல.

நேற்று வெளிவிவகார அமைச்சுக்கான நிதி ஒதுக்கீட்டுக் குழுநிலை விவாதத்தை ஆரம்பித்துப் பேசும்போதே அவர் இப்படித் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இன்று ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் அமைப்பும், சர்வதேச நாடுகளும் இலங்கைக்கு எதிராகப் பல குற்றச்சாட்டுகளை முன்வைத்துள்ளன.

காணாமல் போனவர்கள் எத்தனை பேர்? கைது செய்யப்பட்டு பின்னர் காணாமல் போனவர்கள் எத்தனை பேர்? சிவில் சமூகத்தவர்கள், பொதுமக்கள், ஊடகவியலாளர்கள் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கையில் அப்பட்டமாக மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளன. போர்க்குற்றங்கள் தொடர்பாக சர்வதேச விசாரணை நடத்தப்படவேண்டும் என்று சர்வதேச சமூகம் வலியுறுத்தியுள்ளது.

ஜனாதிபதியும், வெளிவிவகார அமைச்சர் உட்பட பல அமைச்சர்களும் கடந்த இரண்டு வருடங்களாகப் பிரசாரம் செய்தனர். அதனால் ஏற்பட்ட நன்மை என்ன? எதுவுமே இல்லை. மாறாக சர்வதேசத்தின் அழுத்தம்தான் அதிகரித்துள்ளது.

நிபுணர் குழு அறிக்கை தொடர்பாக உண்மை விசாரணையொன்று நடத்தப்படவேண்டும் என்று நாம் கூறினோம். அதை உதாசீனம் செய்துவிட்டீர்கள்.

ஆனால், இன்று சர்வதேச சமூகம் அதைத்தான் கேட்கின்றது. பதில் சொல்ல முடியாமல் தடுமாற்றம் அடைந்துள்ளீர்கள்.

அமைச்சர் மஹிந்த சமரசிங்க மனித உரிமைகள் தொடர்பான செயல்திட்டமொன்று உருவாக்கப்பட்டுள்ளது எனக் கூறியுள்ளார்.

ஆனால், அந்தச் செயல்திட்டம் என்ன என்பது யாருக்கும் தெரியாது. அதை சபையில் வெளிப்படுத்தவேண்டும். உள்நாட்டு விவகாரங்களை வெளிநாடுகளுக்குக் கொண்டுசெல்லக்கூடாது என்கின்றீர்கள். ஆரம்பத்தில் வெளிநாட்டுக்குக் கொண்டு சென்றது யார் என்பது எங்களுக்குத் தெரியும்.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்று தேவை. அதிகாரப்பரவலாக்கல் அவசியம். 13ஆவது அரசியல் திருத்தச் சட்டத்துக்கு மேல் சென்று தீர்வு காண்போம் என்றார் ஜனாதிபதி. அது தேர்தல் குண்டாகிவிட்டது. நாம் வெளிநாடுகளில் பேசினால் தேசத்துரோகம். ஆனால், கிரிக்கெட் குழுவினர் தமக்கு சம்பளமே வழங்கப்படவில்லை என்று தென்னாபிரிக்காவில் கூறியுள்ளனர். இதுவும் தேசத்துரோகமா?

நாங்கள் இங்கு பேசினால், புலிகளின் பிரதிநிதிகள் என்று கூச்சல் போடுகின்றீர்கள். தமிழர்கள் என்பதற்காக அல்ல, இலங்கையர்கள் என்ற உணர்வுடனேயே பேசுகின்றோம். தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு உள்ளார்ந்தமான தீர்வு காணப்படவேண்டும். அதற்கு ஐக்கிய தேசியக் கட்சி முழு ஆதரவையும் வழங்கும் - என்றார் அவர்.

## வாழ்த்துகின்றோம்



உயர் திரு
வ.செல்வராசா

வடமராட்சியின் கல்வி வளர்ச்சிக்கு நிகரில்லாத் துணை நின்று யாழ். வலயக் கல்விப் பணிப்பாளராகப் பதவியேற்றிருக்கும் அன்புக்கும் மதிப்புக்குமுரிய உயர் திரு வ.செல்வராசா அவர்கள் மேலும் பல உயர்வுகள் பெற்று நீடூழி வாழ வாழ்த்துகின்றோம்.

வடமராட்சி வலயக் கல்வி அலுவலகம்.

உதவிக் கல்விப் பணிப்பாளர்கள்,
ஆசிரிய ஆலோசகர்கள்,

## வாழ்த்துகின்றோம்



உயர் திரு.
செ.உதயகுமார்

எம் அன்புக்கும் மதிப்புக்குமுரிய உயர் திரு. செ. உதயகுமார் [பிரதிக்கல்விப் பணிப்பாளர்] அவர்கள் வடமராட்சி வலயக் கல்வி அலுவலகத்திலிருந்து மாகாணக் கல்விப் பணிமனைக்கு மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளராகப் பதவியுயர்வு பெற்றுச் செல்வதை வாழ்த்தி அவர் மேலும் பல பதவிகள் பெற்று வாழ வாழ்த்துகின்றோம்.

வடமராட்சி வலயக் கல்வி அலுவலகம்.

உதவிக் கல்விப் பணிப்பாளர்கள்,
ஆசிரிய ஆலோசகர்கள்,




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சர்வதேச போர்க்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போதே அவர் இதனை வலியுறுத்தினார். அவர் தொடர்ந்து உரையாற்றும்போது கூறியதாவது:-

முன்னாள் வெளிவிவகார அமைச்சர் காலஞ்சென்ற லக்ஷ்மன் கதிர்காமர் தனது காலப்பகுதியில் பெரும் பகுதியை சர்வதேசங்களில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தடைசெய்வதிலேயே கழித்தார். அதனால் ஐரோப்பிய ஒன்றியம் உட்பட பல சர்வதேச நாடுகள் புலிகள் இயக்கத்தைத் தடைசெய்தன.

அதேபோன்று புலிகள் இயக்கத்தை அடியோடு ஒழிப்பதற்கும் இந்த நாடுகள் பல வழிகளிலும் உதவிகளை வழங்கிப் பக்கபலமாக செயற்பட்டன.

இன்று இந்த நாடுகள்தான், "இலங்கையில் மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளன, போர்க்குற்றம் புரியப்பட்டுள்ளது, மனிதநேயம் மீறப்பட்டுள்ளது, சிறுபான்மையினர் பாதுகாக்கப்படவில்லை" என்று குற்றம்சுமத்துகின்றன. இந்தவிடயங்கள் தொடர்பாக சர்வதேச விசாரணை நடத்தப்படவேண்டும் என்று அவை வலியுறுத்தியுள்ளன.இலங்கை அரசு சர்வதேச மட்டத்தில் பல ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டுள்ளது. சர்வதேசம் வெளிப்புறத் தகவல்களை ஆய்வுசெய்வதை விருப்பத்துடன் ஏற்றுக்கொண்டு கைச்சாத்திட்டுள்ளது.இலங்கையில் மனித உரிமை மீறல் தொடர்பாக ஐ.நா. பொதுச்செயலாளர் நியமித்த நிபுணர் குழுவை உதாசீனப்படுத்தினீர்கள். அதேவேளை, நீங்கள் நல்லிணக்க ஆணைக்குழுவை நியமித்தீர்கள். எனினும், சர்வதேச விசாரணை ஆணைக்குழு, திருகோணமலையில் தமிழ் மாணவர்கள் படுகொலை, 16 தமிழர்கள் கொல்லப்பட்டமை, அம்பாறையில் முஸ்லிம்கள் கொல்லப்பட்டமை, கெப்பிட்டிக்கொல்லாவையில் சிங்களவர்கள் கொல்லப்பட்டமை தொடர்பாக ஆய்வுகளை நடத்தியது.

முன்னாள் தலைமை நீதிபதி பசுபதி தலைமையிலான கண்காணிப்புக் குழுவினரின் அறிக்கை என்ன கூறியுள்ளது?

இந்தக் குழுவினர் இலங்கை அரசுக்கு எதிராகப் பல்வேறு கூற்றுகளை முன்வைத்துள்ளனர். குறிப்பாக, மனித உரிமை மீறல் தொடர்பாக அரசியல் விருப்பு இன்றி விசாரணைகளை மேற்கொள்ள முடியாது. விசாரணை நடத்துவதற்கான சாதகநிலை இலங்கையில் இல்லை என்று குறிப்பிட்டுள்ளனர்.

புலம்பெயர் வாழ் தமிழர்கள், இலங்கை வாழ் தமிழர்களின் விடிவு தொடர்பாகத் தீவிரமாகச் செயற்படுகின்றனர் என்று குற்றம்சாட்டுகின்றீர்கள்.

சர்வதேச சமூகம் கூறுவதைத்தான் அவர்களும் கூறுகின்றனர்.

* உரையாடல்கள் மூலம் பிரச்சினைகள் தீர்க்கப்படவேண்டும்.

* பொதுமக்கள் பாதுகாக்கப்படவேண்டும். இராணுவத் துன்புறுத்தல்கள் நீக்கப்படவேண்டும்.

* சிறுபான்மை மக்களின் அபிலாஷைகளுக்கு அமைவான நிரந்தரத்தீர்வு காணப்படவில்லை - என்கின்றனர்.இதைத்தானே சர்வதேச சமூகமும் வலியுறுத்துகின்றது.நமது நாட்டில் பல ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன. பண்டா - செல்வா ஒப்பந்தம், டட்லி - செல்வா ஒப்பந்தம் போன்றவை தேசிய தலைவர்களால் கைச்சாத்திடப்பட்டவை. பின்னர் இலங்கை - இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. ஆனால், இவை எதுவுமே உருப்படியாக கவனத்தில் கொள்ளப்படவில்லை; நடைமுறைப்படுத்தப்படவில்லை.

இப்பொழுது மேலும் பல ஒப்பந்தங்கள் செய்துகொள்ளப்படவுள்ளன என அறிகின்றோம். அவை மேலும் பலமுள்ளதாக அமையும் என்றும் கூறப்படுகின்றது.இறுதிக்கட்டப் போரின்போது அங்கு வாழ்ந்த மக்களின் எண்ணிக்கை தொடர்பாக அமைச்சர்களும், ஆயுதப்படையினரும் வெளியிட்ட தகவல்கள் மாறுபட்டவையாகவே இருக்கின்றன.

இப்போது சர்வதேச மட்டத்தில் பல கேள்விகள் எழுப்பப்பட்டுள்ளன. ஐ.நா. மனித உரிமைகள் அமைப்பின் ஆணையாளர், தொடர்ச்சியாக இலங்கையில் மனித உரிமை மீறல்கள் இடம்பெறுகின்றன, சர்வதேச மனித உரிமைச்சட்டங்கள் மீறப்பட்டுள்ளன, சிறுபான்மை மக்களுக்குப் பாதுகாப்பு இல்லை, பொலிஸாரும் இராணுவத்தினரும் அளவுக்கு அதிகமாகப் பேணப்படுகின்றனர் என்று குற்றம் சுமத்தியுள்ளார். இங்கு ஐக்கிய நாடுகளின் பிரசன்னம் தேவை என வலியுறுத்தப்பட்டுள்ளது. இந்த நாடாளுமன்றத்தில் சாட்சிகளைப் பாதுகாத்தல் தொடர்பான சட்டவரைவு ஒன்று முன்வைப்பட்டது. ஆனால், அது அப்படியே காணாமல்போய்விட்டது.

சர்வதேச சமூகத்தைச் சமாளிக்க உங்களுடைய நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கைகளைக் காட்டி கால அவகாசம் கேட்பீர்கள். உண்மையாகவே கற்றுக்கொண்ட பாடம் என்ன? ஏற்படுத்தப்பட்ட நல்லிணக்கம் என்ன? இறைமையைப் பற்றிப் பேசுகின்றீர்கள். இறைமை என்பது மக்களுக்குத்தான்; அரசுக்கு அல்ல. எனவே, பொதுமக்களின் அடிப்படை உரிமை பாதுகாக்கப்பட்டால் அதுதான் இறைமை. பெண்கள், சிறுவர்கள் மற்றும் மக்களின் மனிதநேயம் பாதுகாக்கப்படவேண்டும். இன்று அவை கேள்விக்குறியாகிவிட்டன.

நாம் கடந்த இரண்டு வருடங்களாக அரசுடன் பேச்சு நடத்தி வருகின்றோம். நாம் தீர்வு காணப்பட வேண்டும் என்ற நம்பிக்கையுடன் பேசுகின்றோம். ஆனால், எந்தவிதமான அடிப்படை நன்மையும் எட்டப்படவில்லை. அரசின் பங்களிப்பு மூடுமந்திரமாகவே இருக்கின்றது - என்றார் சம்பந்தன். (உ-சி)

## காணி அதிகாரம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடைபெற்றது. இந்தப் பேச்சில் வடக்கு, கிழக்குப் பகுதிகளுக்கு காணி அதிகாரத்தைப் பெற்றுக்கொள்வது தொடர்பில் மாத்திரம் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது எனக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார். காணி அதிகாரம் குறித்த முழுமையான பேச்சு நேற்று நிறைவுபெறாத நிலையில் அடுத்தச் சுற்றுப் பேச்சு எதிர்வரும் 19 ஆம் திகதி இடம்பெறவுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

இந்தப் பேச்சில் அரச தரப்பில் அமைச்சர்களான நிமல் சிறிபால டி சில்வா, ஜி.எல்.பீரிஸ் மற்றும் எம்.பிக்களான சஜின் டி வாஸ் குணவர்த்தன, ரஜீவ விஜேசிங்க ஆகியோரும், கூட்டமைப்பின் சார்பில் தலைவர் சம்பந்தன், சுரேஷ் பிரேமச்சந்திரன், சுமந்திரன் மற்றும் ஜனாதிபதி சட்டத்தரணி கனக ஈஸ்வரன் ஆகியோரும் கலந்து கொண்டனர். அடுத்த சுற்றுப் பேச்சு எதிர்வரும் 19 ஆம் திகதி நடைபெறுகிறது. (சி)

## நவநீதம்பிள்ளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கருத்து வெளியிடும் போதே தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் கலாநிதி குணதாச அமரசேகர மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

இலங்கைக் கலாசாரத்தின்படி நவநீதம்பிள்ளையை அரசு வரவேற்கவேண்டும்.

நாட்டுக்குள் பிரவேசித்தவுடன் நமது நாட்டுத் தேயிலையில் மிகவும் சுவையாக தேநீர் தயாரித்து வழங்கவேண்டும். அவர் தேநீர் அருந்திய பின்னர், "போய் வாருங்கள் அம்மையாரே" எனக் கூறி வழியனுப்பி வைக்கவேண்டும்.

மாறாக, உள்நாட்டு விவகாரங்களில் மூக்கை நுழைப்பதற்கு நவநீதம்பிள்ளைக்கு இடமளிக்கப்படுமானால், அது எமது நாட்டுக்கு உகந்ததாக அமையாது.

அவர் போதிக்கும் ஞான உபதேசங்களை அரசு புறந்தள்ளிவிட்டு, ஏனைய விடயங்களைப் பற்றி சிந்திக்கவேண்டும். உள்நாட்டு விவகாரங்களில் தலையிடுவதற்கான அனுமதியை நாம் எவருக்கும் வழங்கக்கூடாது. இந்த விடயத்தில் அரசு உறுதியாக இருக்கவேண்டும் - என்றார்.

## போர்க்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மானது அல்ல. லத்தீன் அமெரிக்க நாடுகள் யாவும் அமெரிக்காவின் மேலாதிக்கத்துக்கு எதிராக அணிதிரண்டுள்ளன.

உலக அதிகாரம் ஆசியாவின் பக்கம் திரும்பியுள்ளது. சீனா, பிரேஸில், இந்தியா, ரஷ்யா ஆகியன வல்லரசுகளாக உருவாகி வருகின்றன. அவை [illegible] நாட்டின் கொள்கைகள் மாறியதால் சில நாடுகள் இலங்கையை [illegible] எனினும் இதற்கு இலங்கை அஞ்சாது- என்றார். (ங-சி)

## ரெலிக்கொம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேசி இணைப்புகளைச் சீர் செய்வதற்குக் கொழும்பில் இருந்து தொழில்நுட்பவியலாளர் குழு ஒன்று நேற்றுப் புதன் கிழமை யாழ்ப்பாணம் வருகை தந்தது. அத்துடன் சீர் செய்வதற்கான உபகரணங்களும் கொழும்பில் இருந்து எடுத்துவரப்பட்டன.

நேற்று முற்பகல் முதல் தொலைபேசி இணைப்புகளைச் சீரமைக்கும் பணிகள் இடம்பெற்றன.

பெரும்பாலும் இன்று முதல் தொலைபேசி இணைப்புகள் அனைத்தும் வழமைக்குத் திரும்பும் என ரெலிக்கொம் நிறுவன அதிகாரி ஒருவர் கூறினார்.

கேபிள் தொலைபேசி இணைப்புகள் செயலிழந்துள்ளபோதும் ரெலிக்கொம் நிறுவனத்தின் சி.டி.எம்.ஏ. தொலைபேசி இணைப்புகள் செயல்படுகின்றன.

கேபிள் தொலைபேசி இணைப்புகள் செயலிழந்துள்ளமை காரணமாக கடந்த மூன்று தினங்களாக அலுவலகங்களிலும் பணிகள் பாதிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-26-207)

# மரண அறிவித்தல்

## செல்லையா கணேசன்



துன்னாலையைப் பிறப்பிடமாகவும் அல்வாயை வசிப்பிடமாகவும் கொண்டவருமாகிய செல்லையா கணேசன் (ஓய்வுபெற்ற ஆசிரியர்) நேற்றுமுன்தினம் (13.12.2011) காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - இலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான செல்லையா- தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற செல்வேஸ்வரியின் அன்புக் கணவரும், பரிமளா (முன்னைநாள் ஆசிரியர், யா/ சோமஸ்கந்தாக் கல்லூரி), கிரிதரன் (ஆசிரியர்- யா/ உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, பகுதிநேர விரிவுரையாளர், இலங்கை திறந்த பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்), சனாதரன் (சுவிஸ்), கோசலா(சுவிஸ்), வினோதரன் (கணக்காளர், கொழும்பு) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ரவீந்திரன் (கணக்காளர்- கொழும்பு), வேல்நாதன் (சுவிஸ்), கீதாமணி (ஆசிரியர்- யா/ உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி), ஜெசிந்தாதேவி (முன்னாள் எழுதுவினைஞர், மாகாண சபை, திருகோணமலை), சுகிர்தா (கணினி இயக்குனர், கொ/ பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமனும், காலஞ்சென்ற திருமதி சோதிமுத்து- சின்னத்துரை, திருமதி யோகம்மா -செல்லபாக்கியம் ஆகியோரின் ஆருயிர் சகோதரரும், அமிர்தவர்ஷன், இராகவர்ஷன், விஷ்மிதரன், அர்ஷனன், அபினயா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.12.2011) பி.ப 2 மணியளவில் "அமிர்தஇராகம்" நாவலடி, உடுப்பிட்டியில் நடைபெற்று தகனக்கிரியை பருத்தித்துறை சுப்பர் மடம் இந்துமயானத்தில் நடைபெறும்.

தகவல்:
க.கிரிதரன் (மகன்)

## டேவிட் தேவதயாளன்

(முன்னாள் ஊழியர், லங்கா சிமெந்து நிறுவனம்)



தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும், கச்சாய் வீதி, கொடிகாமத்தை வசிப்பிடமாகவும் கொண்ட டேவிற் தேவதயாளன் நேற்றுமுன்தினம் (13.12.2011) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான டேவிற்- பாக்கியம் தம்பதியரின் அருமைப் புதல்வனும், அமலோதயராணியின் அன்புக் கணவரும், எட்வின், சுஜித், லசியா, துஷாந்(DIMO Automobile Training School, Colombo), கொன்சி (ABANS Chavakachcheri) ஆகியோரின் தந்தையும், தேவதிரவியம் காலஞ்சென்ற பிறேமாவதி மற்றும் தேவசகாயம், தேவநேசன், பிறேமரஞ்சினி, பிறேமசாந்தினி (நோர்வே) பிறேமலா(லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், றீற்றா, ஜேம்ஸ், மரியராணி, மாக்கிறேற், லூசியா, தேவராஜா, சிவநேசலிங்கம் (நோர்வே), தனராஜசிங்கம் (லண்டன்), புஸ்பராஜா, ஆனந்தராதா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னரின் பூதவுடல் இன்று (15.12.2011) வியாழக்கிழமை காலை 11 மணியளவில் கச்சாய் புனித இராயப்பர் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்நல்லடக்கத்துக்காக அல்லாரை சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கச்சாய் வீதி,
கொடிகாமம்.

தகவல்:
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்கள்

## கந்தையா செல்லத்துரை



கோப்பாய் மத்தி, கோப்பாயைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா செல்லத்துரை நேற்று (14.12.2011) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா- தங்கம்மா தம்பதியரின் சிரேஸ்ட புதல்வனும், காலஞ்சென்றவர்களான திருமதி அருளம்மா, தர்மலிங்கம், காலஞ்சென்ற சுப்பிரமணியம், மற்றும் நடேசபிள்ளை, திருமதி செல்லம்மா, நடராஜா (லண்டன்) ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்ற தர்மலிங்கம்-தவமலர் மற்றும் மகேஸ்வரி, கிருபைரட்ணஜோதி, நடராசா (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், பவானி (லண்டன்), காண்டீபன் (லண்டன்), சிற்சபேசன் (மருந்தாளர், போதனா வைத்தியசாலை-மட்டக்களப்பு), வாணி (லண்டன்), அவ்வை (லண்டன்), பரமசிவம் (லண்டன்), ஜீவகன் (கனடா), அனுசியா (நோர்வே) ஆகியோரின் அன்பு மாமனும், சர்வேஸ்வரன் (லண்டன்), சுந்தரேஸ்வரன் (லண்டன்), சியாமளா, லிங்கேஸ்வரன், துவாரகன், பிரபாகரன் (லண்டன்), விஜிதா (கனடா), கிருபாகரன் (லண்டன்), அஜந்தா (கனடா), கீதா (கனடா), தமிழ்ச்செல்வி (கல்முனை), சிவகுமார், இளமதி, வதனசோபா, சதீஸ்குமார் ஆகியோரின் சிறிய தந்தையுமாவார்.

அன்னாரின் பூதவுடல் (18.12.2011) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து தகனக்கிரியைகளுக்காக கோப்பாய் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கோப்பாய் மத்தி, கோப்பாய்.
க.நடேசபிள்ளை.

## பொன்னையா விநாயகமூர்த்தி

[இளைப்பாறிய ஆசிரியர், மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம் மற்றும் அல்லாரை அரசினர் தாழ்க்கலவன் பாடசாலை]



மீசாலை கிழக்கைப் பிறப்பிடமாகவும், நல்லூரை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திரு.பொன்னையா விநாயகமூர்த்தி நேற்று (14.12.2011) புதன்கிழமை அதிகாலை காலமானார்.

இவர் காலஞ்சென்றவர்களான பொன்னையா- விசாலாட்சி தம்பதியரின் மகனும், திருமதி சாந்தநாயகியின் (இளைப்பாறிய ஆசிரியர், மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம் மற்றும் அல்லாரை அரசினர் தாழ்க்கலவன் பாடசாலை)கணவரும், காலஞ்சென்ற திருமதி. தெய்வானைப்பிள்ளை, நடராஜா, மகாலிங்கம், ஆகியோரின் சகோதரனும் திருமதி கமலினி (ஆசிரியர், யாழ் இந்து மகளிர் கல்லூரி), வைத்திய கலாநிதி சிவகுமார் (மத்திய ஆயுர்வேத மருந்தகம், மடுகந்த), திருமதி ரஜீதா(ஆசிரியை, யாழ்.கனகரட்னம் மகாவித்தியாலயம்), தற்பரன்(கனடா), ஆகியோரின் தந்தையும் வைத்திய கலாநிதி சிவயோகன், வைத்திய கலாநிதி சாந்தினி, சுந்தரகுமார், திருமதி சர்மிலி ஆகியோரின் மாமனும் பாவனா, சாதனா, தாருகா, பவான், சியாமளன், சாம்பவி மற்றும் அபிஷேக் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நேற்று (14.12.2011) புதன்கிழமை நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
425, கோவில் வீதி, நல்லூர்.
பிள்ளைகள்.

## சரவணமுத்து தம்பிராசா (ராசு)



ஆதிமயிலிட்டியைப் பிறப்பிடமாகவும் கே.கே.எஸ். வீதி, 7ஆம் கட்டை மல்லாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சரவணமுத்து தம்பிராசா நேற்றுமுன்தினம் (13.12.2011) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து - நாச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - சின்னாச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் பொன்னம்மாவின் அன்புக் கணவரும் திருநாவுக்கரசு (ஈசன், யாழப்பாணம் - கொழும்பு போக்குவரத்து உரிமையாளர்), கமலாகரன் (சுவிஸ்), கமலராணி (வசந்தா), காலஞ்சென்ற சிறீதரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் சுமதி, தயாளினி (சுவிஸ்), முருகதாஸ் ஆகியோரின் அன்பு மாமனும் வாகினி, மிதிலா, நிரூசன், டிலக்சன் (யா/மகாஜனாக் கல்லூரி), நிலானி, செந்துஜன் (சுவிஸ்), ஜனந்தன் (பிரான்ஸ்), தர்சிகா, ஓம்முருகா (சுவிஸ்), கஜந்தன் (யா/மகாஜனக் கல்லூரி) ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை, தங்கப்பிள்ளை, செல்வநாயகி, சிவபாக்கியம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.12.2011) வியாழக்கிழமை பி.ப. 3 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மல்லாகம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கே.கே.எஸ்.வீதி,
7ஆம் கட்டை,
மல்லாகம்.

மனைவி, ஈசன்,
முருகதாஸ்,
கமலாகரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE

பல்கலைக்கழக மற்றும் உயர்கல்வி மாணவர், பட்டதாரிகள், இளைஞர் யுவதிகள் மற்றும், A/L எழுதிய மாணவர்கான

வார , மற்றும் சனி ஞாயிறு புதிய பிரிவுகள் ஆரம்பம்

15.12.2011 வியாழன் : காலை 9.00-11.00
17.12.2011 சனி : காலை 9.00-11.00 மற்றும் மாலை 3.00-5.00

முதல் வகுப்பு அனுமதி. புத்தகம். மற்றும் சான்றிதழ் இலவசம்

MyWay 182, STANLEY RD, JAFFNA
077 33 63 456 222 9505

## பாடசாலை வான் சேவை

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி,
வட்டுக்கோட்டை

பண்டத்தரிப்பு, சில்லாலை, பனிப்புலம், வடலியடைப்பு, சங்கானை, சித்தங்கேணி, மாவடி, பிளவத்தை, சங்கரத்தை ஊடாக வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கான பாடசாலை வான் சேவை.

புதிய ஆண்டுக்கான பதிவுகள்,
தொடர்பு: - 0777243129 (பரிதி).

## NEC கல்வி நிலையம்

கிளி/மத்திய கல்லூரி முன்பாக-கிளிநொச்சி

A/L 2012 ஆம் ஆண்டுக்கான புதிய வகுப்புக்கள் எமது நிறுவனத்தின் தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழாத்தினால் (25.12.2011) இல் ஆரம்பமாகின்றன.
கணிதம், விஞ்ஞானம், கலை, வர்த்தகம் ஆகிய பிரிவு மாணவர்கள் அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

நிர்வாகம்.

# மரண அறிவித்தல்கள்

## வீரவாகு ஜெகவதனராஜா



உடுப்பிட்டி, பொக்கணையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வீரவாகு ஜெகவதனராஜா நேற்று (14.12.2011) புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் கனகாம்புஜத்தின் அருமைக் கணவரும், ஜெகஞானகலையின் பாசமிகு தந்தையும், பொன்னம்மா, நல்லம்மா, காலஞ்சென்றவர்களான இரத்தினம்மா, இராசம்மா மற்றும் இரத்தினசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், மோகனச் சந்திரதாஸ், மற்றும் கனடாவைச் சேர்ந்த உதயன், கிளி, சிவா ஆகியோரின் பாசமிகு சிறிய தந்தையும், பரம்சோதி, தங்கமணி ஆகியோரின் மைத்துனரும், ஜெகதீஸ்வரி (கனடா), ஜெகதீஸ்வரன் (கனடா), ஞானதீஸ்வரி (கனடா), ஞானதீஸ்வரன் (கனடா), வசந்தி (கனடா), யுவராசா (கனடா), கல்பனா (கனடா), மதீரூபன் (கனடா), சசிக்குமார் ஆகியோரின் பாசமிகு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (15.12.2011) வியாழக்கிழமை நண்பகல் 12 மணியளவில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் முள்ளி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பெச்சளை சந்தி,
உடுப்பிட்டி.

தகவல்:
மனைவி, பிள்ளை.

## இராசையா வள்ளிப்பிள்ளை

மந்துவில் மேற்கைப்பிறப்பிடமாகவும் கண்டுவில் வீதி, சாவகச்சேரியைத் தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட இராசையா வள்ளிப்பிள்ளை நேற்று (14.12.2011) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசையாவின் அன்பு மனைவியும், இராசேஸ்வரி (ஆசிரியை, மிருசுவில் R.C.T.M.S.), சிறீரங்கநாதன் (நீர் விநியோகப்பகுதி, மந்திகை), சுஜாதா (சுதா) ஆகியோரின் அன்புத் தாயும், இரத்தினசபாபதி (ஆசிரியர், போக்கட்டி G.T.M.S.), பிறேமா (தாதிய உத்தியோகத்தர், மந்திகை ஆதார வைத்தியசாலை), ஞானரூபன் (வைசா போட்டோ) ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (14.12.2011) புதன்கிழமை தற்காலிக இல்லத்தில் நடைபெற்று புதவுடல் கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கண்டுவில் லேன்,
சாவகச்சேரி.

தகவல்:
க.இரத்தினசபாபதி (மருமகன்).

## திருமதி. சதாசிவம் இராசம்மா
### (இளையபிள்ளை)

பருத்தித்துறை மாதனையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சதாசிவம் இராசம்மா (இளையபிள்ளை) அவர்கள் கனடாவில் நேற்று (14.12.2011) புதன்கிழமை அதிகாலை (இலங்கை நேரப்படி) காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வ.சதாசிவத்தின் அன்பு மனைவியும், சிற்சபேசன், கனகசபேசன், தர்மசபேசன் ஆகியோரின் தாயும், எனது நெஞ்சகலாப் பாசப் பிணைப்பு மிகு தெய்வத் தாயுமாவார்.

தகனம் (17.12.2011) சனிக்கிழமை கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

காளி கோவிலடி,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.

தகவல்:
அமரரின் பிரிவால் என்றும் துயருறும்,
செ.சட்டநாதர், (சுவீகர புத்திரன்).

## சர்வதேச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் இந்தச் சபையில் பாரதூரமான குற்றச்சாட்டுகளைச் சுமத்தினார். அதேபோன்று ஐக்கிய தேசியக் கட்சியினரும் குற்றச்சாட்டுகளைச் சுமத்தினர்.

இவர்கள் கூறுவதுபோல நாம் சர்வதேச அழுத்தங்களுக்கு அடிபணியப் போவதில்லை.

கடந்த செப்டெம்பர் மாதம் ஜெனீவாவில் நடைபெற்ற மாநாட்டின்போது 31 நாடுகளில் ஒரேயொரு நாடு மட்டுமே எமக்குப் பிரச்சினை ஏற்படுத்தத் திட்டமிட்டுள்ளது எனத் தகவல் கிடைத்தது. அதனை நாம் சாதுரியமாக முறியடித்தோம்.

அதேபோன்று, ஆஸ்திரேலியாவில் நடைபெற்ற பொதுநலவாய நாடுகள் சம்மேளனத்திலும் இவ்வாறானதொரு நிலை ஏற்பட்டது.

ஆனால், நானும் ஜனாதிபதியும் இரவு பகலாக நேசநாடுகளுடன் பேசினோம். எமது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தினோம். பெரும்பாலான நாடுகளின் பிரதிநிதிகள் அதனை ஏற்றுக்கொண்டனர். இதனால், நமக்கு எதிராகக் கொண்டுவரப்படவிருந்த பிரேரணை அப்படியே அடங்கிப்போய்விட்டது.

எங்களுடைய வெளிநாட்டுக் கொள்கை தவறானது. அதனால், சர்வதேச நாடுகளின் எதிர்ப்பை இலங்கை சம்பாதித்துள்ளது என்று குற்றஞ்சாட்டுகின்றனர்.

அது தவறு. நேற்றுக்கூட கட்டார் நாட்டுப் பிரதமர் இங்கு விஜயம் செய்தார். ஆயிரம் மில்லியன் முதலீடுகள் தொடர்பான உடன்பாடு ஏற்படுத்தப்பட்டது.

அதேபோன்று, சீன நாட்டுப் பிரதிநிதிகளும் கலை, கலாசார வளர்ச்சிக்கு உதவ முன்வந்துள்ளனர். எமது கொள்கை தவறானால் இந்த உதவிகள் கிடைக்குமா?

எங்களுடைய நாடு எவருக்கும் அடிமைப்பட்டதல்ல. அடிபணிய வேண்டிய அவசியமும் இல்லை. நமது நாட்டின் இறைமை பாதுகாக்கப்படவேண்டும். இதில் நாம் உறுதியாக இருக்கின்றோம் - என்றார்.

எடிசன் கல்லூரி,
கரடிப்போக்கு
அண்மை,
கிளிநொச்சி
G.A.Q, BA புதிய
வகுப்புகள்
ஆரம்பம்
(17.12.2011)
சனிக்கிழமை
பி.ப. 2.30 மணி.

புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன
ICT Grade 10/11
10 years of experience in IT
பதிவுகளுக்கு முந்துங்கள்....
Call Us : 0776577359
MIS Open Source College
Mr R.Kumaran-B.Sc. (Computing & IS)

வெளிவந்து விட்டது-2012

மட்டக்களப்பு-ந.சந்திரகுமார்
அவர்களின் சகல புத்தகங்களும்
வெளிவந்து விட்டன.
வாடிக்கையாளர்களுக்கு
விலைக்கழிவு வழங்கப்படும்.
அன்னை புத்தகசாலை
யாழ்ப்பாணம்.
2229881 - 2220865

பெண் விற்பனையாளர் தேவை

எமது ஜவுளி நிறுவனத்துக்கு அனுபவம் உள்ள பெண்கள் தேவை. யாழ். மாநகர சபை எல்லைக்குள் வசிப்பவர் விரும்பத்தக்கது. 0772850753

புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன
Practical Web Development
Joomla, jQuery,PHP,MySQL
CSS, HTML Call Us : 0776577359
இணையத்தளங்களை உருவாக்க...
Domain Reg. & Web Hosting
MIS Open Source College
Mr R.Kumaran-B.Sc. (Computing & IS)

கட்டட ஒப்பந்தமும் விற்பனையும்

உங்களுக்குத் தேவையான கட்டடத்தைக் கட்டிக்கொள்ள அல்லது விற்பனை செய்ய எமது நிறுவனத்துடன் தொடர்பு கொள்ளுங்கள். (எந்தப் பிரதேசத்திலும்)

NAVODA GROUP (Pvt) Ltd.
85/A/5, Kiripattiaya Road,
Ihala Bomiriya, Kaduwela, Colombo.
web: www.novodogroup.co
e-mail: info@navodagroup.com
(எமது நிறுவனம் கிறிஸ்தவ நிறுவனமாகும்).

# மரண அறிவித்தல்கள்

## பிலிப்பு சூசைதாஸ்

சென்.ஜேம்ஸ் வீதி, இளவாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பிலிப்பு சூசைதாஸ் (சூசையப்பா) நேற்று (14.12.2011) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

இவர் மரியம்மாவின் அன்புக் கணவராவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

சென். ஜேம்ஸ் வீதி,
இளவாலை.

தகவல்:
மேரி வுலோறன்ஸ்
[illegible]

# மரண அறிவித்தல்கள்

## அருள் முருகானந்தம்



அளவெட்டி கிழக்கு, கும்பலையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட அருள் முருகானந்தம் (சண்டியன் தம்பிப்பிள்ளை - நாடக நடிகர்) நேற்று (14.12.2011) புதன்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.12.2011) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப. 12.30 மணியளவில் அளவெட்டி, மல்லாகம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கும்பலை,
அளவெட்டி கிழக்கு.

தகவல்:
குடும்பத்தினர்.

## இராஜசிங்கம் ஜெகதீஸ்வரி (ஈஸ்வரி)



அளவெட்டி மாகியம்பிட்டியைப் பிறப்பிடமாகவும், மாட்டீன் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட இராஜசிங்கம் ஜெகதீஸ்வரி நேற்று (14.12.2011) புதன்கிழமை கர்த்தருக்குள் நித்திரை அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அழகரெட்ணம்-நாகபூசணி தம்பதியரின் அன்பு மகளும், ஞானப்பிரகாசம் இராஜசிங்கத்தின் (முன்னாள் ஊழியர், RDA) அன்பு மனைவியும், சாந்தி (கௌரி), ஜெயந்தி, சுகந்தி, வசந்தி (UK) ஆகியோரின் பாசமிகு தாயும், ஞானசேகரம் (கிராம அலுவலர், பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்), யேசுதாசன் (போதகர், கெத்சமனே கொஸ்பல் சபை), யோகராஜ் (UK) ஆகியோரின் பாசமிகு மாமியும், பிரசாந், நிரூஜா, தர்ஷிகா, பிரதீப், பிராயன், ஸ்ரீவ், சலோமி, ஜெவ்றி, அபிஷேக் (UK) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனைகள் இன்று (15.12.2011) வியாழக்கிழமை பி.ப. 2 மணிக்கு இல.261, பாங்சால் வீதி, யாழ்ப்பாணத்தில் நடைபெற்று பூதவுடல் கொட்டடி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.261, பாங்சால் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
S.ஞானசேகரம்,
(கிராம அலுவலர்).

## பொன்னர் இராசரெத்தினம்
### (சவாரித்தம்பர், நயினாதீவு)



நயினாதீவு 6 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட பொன்னர் இராசரெத்தினம் நேற்று (14.12.2011) புதன்கிழமை நயினாதீவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னர்-நாகமுத்து தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற நாராணபிள்ளை மற்றும் தங்கமுத்து தம்பதியரின் அன்பு மருமகனும், வரதலட்சுமியின் பாசமிகு கணவரும், பொன்னம்பலம், கேதீஸ்வரி, சிவானந்தன், ஜெகதீஸ்வரி, கடம்பன், வாகீஸ்வரி ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

6 ஆம் வட்டாரம்,
நயினாதீவு.

தகவல்:
குடும்பத்தினர்.

## அந்தோனிப்பிள்ளை எட்மன் றெஜினோல்ட் (பாபு)



சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், மல்வம் உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட அந்தோனிப்பிள்ளை எட்மன் றெஜினோல்ட் நேற்று (14.12.2011) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மனுவல் அந்தோனிப்பிள்ளை-குயின்மேரி அன்னம்மா தம்பதியரின் அருமை மகனும், வின்சன், நிமால்ஜோன்சன் (பிரான்ஸ்), கனின்ரன், கனிசியஸ் (கனி), றொபின்சன் அமலதாஸ் (பிரான்ஸ்), றோக்ஜெனிசியஸ் (குகன்), விக்டோரியா, மீனா, கீதா, சசி, றேனு ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனைகள் இன்று (15.12.2011) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று மு. ப. 10 மணிக்கு பூதவுடல் மல்வம் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மல்வம்,
உடுவில்.

தகவல்:
உதயகுமார் சிசில் றெமின்டன்,
(மருமகன்)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 15.12.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org